# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

## பாகம் 4 (301 முதல் 400 வரை)



உரையாசிரியர்:

ஸ்ரீமதுபயவே ரஹஸ்யார்த்த கோவித நாவல்பாக்கம் யக்ஞும்

Dr. V. கண்ணன் ஸ்வாமி

Sincere Thanks to:
Oppiliappan Koil Sri V. Sadagopan Swamy for hosting this title under his sadagopan.org website portal

**Cover Picture: Swamy Desikan in Ratnangi – Thiruvallur**

**Cover Design by: Sri Murali Desikachari**

# ஆரணதேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

## நாலாவது நூறு.

### 301. ஈற்று நினைவை இறைபால் வை.

அந்திமஸ்ம்ருதி எனப்படும் ஈற்றுநினைவை மரணகாலத்தில் பகவான் விஷயமாக ஆக்கு.

> अन्तकाले च मामेव स्मरन्। अन्वयं दर्शयति अन्तकाले चेति। ...
> तत्तदनुसन्धेयाकार साम्य प्राप्तिर्विवक्षिता
>
> – *தாத்பர்யசந்த்ரிகா*

பகவத்கீதையில் அந்தகாலே ச என்று தொடங்கும் ச்லோகத்தில் கூறப்படும் கருத்து இது.

> மரணக்காலத்தில் என்னையே நினைக்கிறவன், என்போலாகிறான் என்கிற கண்ணனின் கூற்றுக்கு இது அர்த்தம். அவன் எந்த வடிவில் இறைவனை நினைத்தானோ அதே போன்றதை அடைகிறான்.

இது இறைநிலைக்கு மட்டுமன்று. எதை நினைத்துக்கொண்டிருக்கையில் உயிர் துறக்கிறானோ அது போல் ஆகிறான். ஆகையால் நாம் பகவானை மரணக்காலத்தில் நினைக்கும்படி வகை செய்துகொள்ளவேண்டும். இதற்குப்பல உபாயங்கள் உண்டு. இறப்பவனின் காதில் கர்ணமந்த்ரம் ஓதுவது அவனுக்குப் பகவத்ஸ்மரணத்தை ஏற்படுத்தும். இன்னொரு நேர்வழி அடுத்த அறிவுரையாகக் கூறப்படுகிறது. இன்னுமொன்று 305–ஆவது அறிவுரையாக வரவுள்ளது. இது தொடர்புடைய இன்னோர் அறிவுரை 313–ஆவதாக வரவிருக்கிறது.

### 302. ஈறுவரை இறை நினைவில் வை.

மரணம் வரையில் பகவானை ஸ்மரித்தால் தான் அந்திமஸ்ம்ருதி சரியாகும்.

> प्रायणान्तम् ॐकार मभिध्यायीत इत्यादिश्रुतिश्चानुस्मृता इत्यभिप्रायेण आप्रयाणात् इत्युक्तम्। सूत्रं च आप्रयाणात्तत्रापि हि दृष्टम् इति।
>
> – *தாத்பர்யசந்த்ரிகா.*

அந்திமஸ்ம்ருதியாகப் பகவானை நினைக்கவேண்டும் என்றால் அதற்கு என்ன வழி என்பதைச் சொல்கிறார்.

> ஸதாஸர்வகாலமும் ஸர்வேச்வரனையே நினைத்திருக்க வேண்டும். "மரணம் வரையில் ஓங்காரத்தைத் தியானிக்க வேண்டும்" என்கிற வேதவாக்கியமும்

> இதால் நினைக்கப்பட்டது. ப்ரஹ்மஸூத்ரத்திலும் மரணம் வரை தியானிக்க வேண்டும் என்றுள்ளது.

எப்போதும் எதை நினைத்துக் கொண்டிருக்கிறோமோ, அது மரணக்காலத்திலும் நினைவுக்கு வரும். நமக்கு மரணக்காலத்தில் இறைவனை நினைப்பது அவசியமாதலால் எப்போதும் இறைவனை நினைத்துக்கொண்டிருப்பது அதற்கு உபாயமாகிறது. வேறோருபாயத்தைப் பிறகு காண்போம்.

## 303. ஈட்டிய பொருளை இடத்தில் வை.

சம்பாதித்த பணத்தைத் தகுந்தவர்களுக்குக் கொடு.

सञ्चितस्य धनौघस्य स्थानसञ्चारणेन सः ।

तटाकस्येव पूर्णस्य परीवाहमकल्पयत् ॥

– *யாதவாப்யுதயம்*

கம்ஸவதம் முடிந்த பிறகு, உக்ரஸேநனை அரசனாக்கினான் கண்ணன். அவனது ஆட்சியை வருணிக்கும் முகத்தால் நமக்குச் சில நீதிகளை நல்குகிறார் ஸ்வாமி தேசிகன். அவற்றுள் இதுவும் ஒன்று:

> அந்த ராஜா தான் சேமித்த தனத்தையெல்லாம் தகுந்த இடத்தில் சேரும்படி செய்தான். நிரம்பி வழியும் குளத்துக்கு வழிந்தோட வகை செய்வது போலச்செய்தான்.

நல்லோரின் செல்வத்தை ஊருணியின் நீருக்கு ஒப்பிடுவது நீதிநூலார் மரபு. பலருக்கும் பயன்படுவது என்பது இரண்டுக்கும் பொதுவானது. இங்கே இன்னொன்றும் சொல்கிறார். தடாகத்தில் மிதமிஞ்சிய நீரைத் தேக்காமல், வழிந்தோடுவதற்கு வழி செய்கிறோம் அல்லவா? அது போல, பெரும்பணக்காரகளும், அளவுக்கு மிஞ்சிய தனத்தை மேன்மேலும் சேமித்துக் கொண்டிருக்கும்போது, அதைத் தகுந்த மற்ற இடங்களுக்கும் செலுத்துவது முக்கியம். நிரம்பிய ஏரிகுளத்துக்கு இவ்வாறு போக்குவீடு அமைக்காவிட்டால், கரையுடைந்து ஊரே சேதமாகிவிடுவது போல், தனிகன் ஸத்பாத்ரங்களில் தானம் பண்ணாமலே பொருளைத் திரட்டி வைத்துக்கொண்டானானால், அது அவனுக்கும் மற்றவருக்கும் ஆபத்தில் முடியும். ஏரி நிரம்பி மேல்வழியும் நீரை வயல்வெளிகளிலும் கால்வாய்களிலும் பாயும்படி ஜாக்கிரதையாக வழியமைத்து, வெள்ளச்சேதம் ஏற்படாமல் பாதுகாப்பது போல, குவிந்துள்ள திரவியத்தைக் கன்னாபின்னாவென்று வாரியிரைக்காமல், எந்தெந்த இடத்தில் வைத்தால் நல்லதோ அந்தந்த இடங்களில் வைக்க வேண்டும். வங்கிகள், வாரிசுகள், வித்வான்கள், வறியவர்கள், உறவினர்கள், வேலையாட்கள், இரவலர்கள், விப்ரர்கள், என்று எத்தனையோ தகுந்த இடங்களில் வைத்து, சேமிப்பைப் பாதுகாக்கலாம். பாழாக்கக் கூடாது. சேமிப்பதை விட, நல்லவாறு செலவழிப்பது, மிகுந்த கவனத்துடன் செய்யவேண்டிய செயலாகும். வீண் விரயங்கள், பறிகொடுத்தல், துஷ்டச்செயல்களுக்கு ஆதரவு, இதெல்லாம் நேரிடாதபடி செலவழிக்கவேண்டும். கண்ணனின் ஆதரவைப் பெற்ற உக்ரஸேனமஹாராஜா இதில் கண்ணும் கருத்துமாக

இருந்தானாம். நாமும் நம் தேவைக்கு மேற்பட்ட திரவியங்களை நல்ல இடங்களில் தானம் செய்வோம். ஆபத்திலிருந்து தப்புவோம்.

## 304. ஈசனிடம் கேள் மன்னிப்பை.

நாம் பண்ணும் பிழைகளைப் பொறுத்தருளும்படி பகவானிடம் மன்னிப்பு கோரவேண்டும்.

> तस्मात् प्रणम्य प्रणिधाय कायम् प्रसादये त्वामहमीशमीड्यम्। न त्वत्समोस्ति अभ्यधिकः कुतोन्यः प्रियः प्रियायार्हसि देव सोढुम्॥ शरणागतिगद्यम्
>
> ईशम्। सापराधनिग्रहसमर्थम्। क्षुद्रोऽपि जन्तुः सम्बन्धविशेषादपराधं सहते, किं पुनस्त्वं इत्यभिप्रायेण पित्रादिदृष्टान्तः। अर्हसि देव सोढुमिति वक्ष्यमाणसङ्ग्रहः। पापशक्तिश्च निग्रहसंज्ञः परमपुरुषबुद्धिविशेष एवेति क्षमस्वेत्यनेन व्यज्यते। निग्रह निवृत्ति रूपो हि प्रसादविशेष इह क्षमा।
>
> – *கத்யபாஷ்யம்.*

“மநோவாக்காயை: அநாதிகாலப்ரவ்ருத்த அநந்த அக்ருத்யகரண க்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசார ரூப நாநாவித அநந்தாபசாராந் ஆரப்தகார்யாந் அநாரப்தகார்யாந் க்ருதாந் க்ரியமாணாந் கரிஷ்யமாணாம்ச்ச ஸர்வாந் அசேஷத: க்ஷமஸ்வ” என்ற பாவமன்னிப்பு வரிக்குப் பீடிகையாக அமைந்த ச்லோகத்து உரையில் இந்த அறிவுரை இருக்கிறது :

> ஆகையால் நான் உம்மை வணங்குகிறேன்; உடலால் பணிந்து மரியாதை செலுத்துகிறேன். நீர் வல்லவர்; நீர் துதிக்குரியவர்; உம்மை வேண்டுகிறேன். உமக்கு இணையானவர் யாருமில்லை; உம்மை விட மேம்பட்ட இன்னொருவர் என்ற பேச்சுக்கே இடமில்லை. நீர் ப்ரியனுக்குப் ப்ரியமானவர்: தேவர்; மன்னித்தருளவேண்டும். என்று சரணாகதி கத்யத்தில் உள்ளது. எதை மன்னிக்க வேண்டும் என்பதை அடுத்த வாக்கியத்தில் சொல்லப்போகிறார். இங்கு ஈசன் என்பதற்குக் குற்றவாளிகளை ஒறுக்க வல்லவன் என்பது கருத்து. அற்பமான ஜந்து கூட உறவுள்ளவர்களை மன்னிப்பதைக் காண்கிறோம். ஸர்வலோகபிதாவான நீர் அந்த உறவு காரணமாக மன்னியீரோ? என்று கருத்து. பாவத்தின் சக்தி என்பது பகவானின் நிக்ரஹஸங்கல்பம் என்கிற எண்ணமேயென்பது மன்னிக்கவும் என்ற பிரார்த்தனை மூலம் தெரிகிறது. மன்னிப்பது என்பதே நிக்ரஹத்தைத் தவிர்த்து அனுக்கிரகம் பண்ணுவதேயன்றோ?

நாம் தெரிந்தும் தெரியாமலும் பண்ணும் பாவங்களில் சில கொடியவை. அவற்றுக்குப் பாவமன்னிப்பு கோருவது அவசியம். யாரிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்? ஏன் கேட்கவேண்டும்? கேட்டால் என்ன விளைவு? கேட்காவிட்டால் என்ன விளைவு? இதையெல்லாம் விளக்குகிறார் இவ்வுரையில். பாவிகளைத் தண்டிக்க வல்லவனான

ஈசனிடம் மன்னிப்பு கேட்கவேண்டும். கேட்காவிட்டால் நிக்ரகமும் அதனால் ஏற்படும் தண்டனையும் கிடைக்கும்; கேட்டால் பொறுத்து மன்னிப்பு கிடைக்கும். அவன் நமக்குப் பிதாவாதலால் மன்னிப்பு கிடைக்கும் என்று நம்பலாம். ஈசனிடம், பகவானிடம், மன்னிப்பு கேட்போம்.

கடந்த நாலு அறிவுரைகளின் தலைப்புகளைச் சேர்த்துப் படிப்போம்.

- ஈற்று நினைவை இறைபால் வை.
- ஈறுவரை இறை நினைவில் வை.
- ஈட்டிய பொருளை இடத்தில் வை.
- ஈசனிடம் கேள் மன்னிப்பை.

## 305. ஈற்று நினைவுக்கு இன்றே சொல்.

அந்திமஸ்ம்ருதிக்காக இப்போதே பகவானைப் பிரார்த்திக்கலாம்.

> இவனுக்கு அந்திமப்ரத்யயம் मदीययैव दयया अतिप्रबुद्धः என்கிறபடியே ஸ்வ—ப்ரயத்ந—நிரபேக்ஷமாக ஸித்திக்கும்படி அப்போதைக்கு இப்போதே சொல்லி வைக்குமது ப்ரதானம்.
>
> — *ப்ரதாந சதகம்.*

நூற்றொரு ப்ரதானங்களுள் ஐம்பத்தொன்றாவதாக, அதாவது நட்டநடுவில் வைத்துச் சொன்ன வுரை இது.

> "அடியேனுக்கு மரணக்காலத்தில் அந்திமப்ரத்யயம் வரவேண்டும். அது என் முயற்சியால் ஆகாதது. என் முயற்சியை அபேக்ஷிக்காமலே பகவானின் தயையால் மட்டுமே அது ஸித்திக்க வேண்டும். அப்போது பெறவேண்டிய ஈற்றுநினைவுக்காக இப்போதே சொல்லி வைக்கிறேன். பகவானே! " என்று பிரார்த்திப்பது முக்கியம்.

இந்த வாக்கியத்தில் எம்பெருமானாரின் கத்யத்திலிருந்தும், பெரியாழ்வார் திருமொழியிலிருந்தும் சொற்கோவைகளைக் கையாள்கிறார். மதீயயைவ தயயா அதிப்ரபுத்த: என்பது சரணாகதிகத்யத்தில் பகவானின் திருவாக்காக உள்ளது இங்கு மேற்கோள் காட்டப்பட்டது. "உடல் விழும் தருணத்தில் என் அருளால் மட்டும் உணர்வு பெற்று என்னையே நோக்கிக்கொண்டு" என்பது அங்குள்ள தொடரின் அர்த்தம். இதிலிருந்து என்ன தெரிகிறது? அந்திமஸ்ம்ருதி அவனருளால் வருமென்று தெரிகிறது. பெரியாழ்வார் "அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்" என்கிறார். அந்திமக்கால நினைவுக்காக இப்போதே பகவானிடம் பிரார்த்திப்பதற்கு வழிகாட்டியாக இருக்கிறார். அந்த வழியை நாமும் பின்பற்றுவோம். ஈற்று நினைவுக்காக இன்றே சொல்லிவைப்போம்.

## 306. ஈரடி மந்திரம் என்றும் சொல்.

இரண்டு வாக்கியங்கள் கொண்டதால் த்வயம்என்று பேர்பெற்ற மந்திரத்தை ஸதா சொல்லு.

> भगवदनुभवप्रीत्यनुवृत्त्यर्थं सम्भवद्द्वन्द्वतितिक्षार्थं निर्भरत्वानुसन्धानरसानुवृत्त्यर्थं निषिद्ध काम्यादिसङ्गनिवृत्त्यर्थं च सदेत्युक्तिः। इदं तु स्वभावार्थशास्त्रप्राप्ताविरोधेन नेयम्।
>
> – *கத்யபாஷ்யம்.*

"த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா" என்று மூலத்தில் (எம்பெருமானாரின் கத்யத்தில்) உள்ள வாக்கியம். த்வயம் என்கிற மந்த்ரத்தை எப்போதும் இவ்வாறு சொல்கிறவன் என்று அர்த்தம். அவ்விடத்திய உரை இது:

> நாலு உத்தேசங்கள் எப்போதும் த்வயமந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டே இருப்பதற்கு. 1. அதைச் சொல்லும்போதே பகவானை அனுபவிப்பதில் ப்ரீதி உண்டாகிறது. அந்த மகிழ்ச்சி தொடர்ந்து கிடைக்க வேண்டுமானால் அதை எப்போதும் அனுஸந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும். 2. த்வந்த்வங்கள், அதாவது தப்பவெட்பம், சுகதுக்கம், முதலிய இரட்டைகள் வாழ்வில் நேரும்போதெல்லாம் அவற்றை ஸஹித்துக்கொள்ள வேண்டும். இதற்கு த்வயமந்த்ரம் சொல்லுவது பயன்படும். மனது த்வயத்தில் ஈடுபட்டபோது, த்வந்த்வங்களின் உபாதைகள் அதில் வருமோ? 3. சுமை நீங்கி, ஹாய்யாக இருக்கிற நிலை ப்ரபன்னனின் நிலை. இந்த நிம்மதியை எண்ணிப்பார்ப்பதிலேயே ஒரு சுவை கிடைக்கிறது. அந்தச் சுவையைப் பெற இந்த மந்த்ரம் உதவும். வேறு பொறுப்புகள் உள்ளவரன்றோ, இதை ஸதா அனுஸந்திக்க முடியாமல் திணறுவர்? மற்ற பாரங்களற்றவர், ஸதாஸர்வகாலமும் த்வயத்தை எண்ணுவது ஸாத்தியம் தானே? 4. இப்படியொரு முழுநேர வேலை வைத்துக்கொள்ளாவிட்டால், நிஷித்தமானதும் காம்யமானதுமான கருமங்களில் பற்று உண்டாகும். அதைத் தவிர்ப்பதற்கும் இதை முழுநேரப்பணியாகக் கொள்வது தகும். இந்த நாலுக்காகவும் ஸதாஸர்வகாலமும் த்வயத்தைச் சொல்லவும். ஆனால் ஒன்று. ஸதா என்றதால் மற்ற ஶாஸ்த்ரகர்மங்களை விட்டுவிடக்கூடாது. ஸதா என்பதன் பொருளை ஸங்கோசித்துக்கொள்ளவேண்டும்.

த்வயம் என்கிற மந்த்ரத்துக்கு அந்தப்பெயர் வரக் காரணம் அதில் இரண்டு பகுதிகள் இருப்பதாலாம். இந்த மந்த்ரத்தை எப்போதும் சொல்பவர்களுக்கு, பகவானை அனுபவிக்கும் இன்பத்தின் தொடர்ச்சி, இரட்டைகளைப் பொறுத்துக்கொள்ளும் திறன், நிம்மதி, வேண்டாத காரியங்களிலிருந்து விலகல், என்ற நாலு பயன்களும் தானே விளையும். ஸதா த்வயம் சொல்லவும். ஆனால் ஸ்நாநஸந்த்யாதிகளை விடவேண்டாம். அவற்றைச் செய்து மி குந்தநேரத்திலெல்லாம் த்வயத்தை அனுஸந்திப்போம்.

## 307. ஈசனைத் தொழு நினை துதி அறி சொல்.

இறைவனைத் தொழு: அவனை நினை; அவனைத்துதி; அவனை அறி; அவனைப்பேசு.

> भवन्तमिह यः स्वधीनियतचेतनाचेतनम्
> पनायति नमस्यति स्मरति वक्ति पर्येति वा।
> गुणं कमपि वेत्तिवा तव गुणेश गोपायितुः
> कदाचन कुतश्चन क्वचन तस्य नस्यात् भयम्॥
>
> – *அபீதிஸ்தவம்.*

குணங்களின் ஈசனே என்று அரங்கனை விளித்துப் பேசும் பேச்சு இது.

> குண—ஈசனே! சேதநாசேதநங்கள் எல்லாம் உன் ஸங்கல்பத்துக்குக் கட்டுப்பட்டவை. அத்தகைய உன்னை எவன் துதிக்கிறானோ, வணங்குகிறானோ, எண்ணுகிறானோ, சொல்லுகிறானோ, சுற்றி வருகிறானோ, அல்லது ஒரு குணத்தையேனும் புரிந்து கொள்கிறானோ, அவனுக்கு எப்போதுமே எங்கிருந்துமே எதனிடமிருந்துமே பயமே ஏற்படாது.

பயத்தை விளைவிக்கக்கூடிய சேதந அசேதநங்கள் எல்லாம் நீ இட்ட வழக்காய் இருப்பது காரணம். எப்போதும் பயம் ஏற்படாமல் இருப்பதற்கு. உன்னை வாக்கால் துதிப்பதோ பேசுவதோ பண்ணினாலும் சரி, உடலால் வணங்குவதோ அணுகுவதோ பண்ணினாலும் சரி, மனத்தால் நினைப்பதோ அறிவதோ பண்ணினாலும் சரி, பயம் நீங்கிவிடும்.

## 308. ஈரைம்முகத்து மனத்தை வெல்.

பத்து முகம் கொண்ட மனத்தை வெற்றிகொள்.

ராவணனோடு நம் மனதை ஒப்பிட்டுப் பேசும் ச்லோகம் இங்கு மேற்கோள் காட்டப்படுகிறது.

> दशेन्द्रियाननं घोरं என்கிறபடி முமுக்ஷுக்களுடைய மநஸ்ஸு அஹங்கார மமகார தூஷிதம் ஆகாதபடி பண்ணிக்கொடுக்கிற சக்ரவர்த்தித் திருமகனுடைய
>
> – *முநிவாஹநபோகம்*

“சதுரமாமதிள்சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்துதிர” என்கிற வரியின் உரையில் உள்ளது இது.

மநஸ்ஸு என்கிற ராக்ஷஸன் ராவணன் போலே (பத்து இந்த்ரியங்கள் என்கிற) பத்து முகங்கள் கொண்டது. கோரமானது. என்றொரு ப்ரமாண வாக்கியம் கூறுகிறது. மோக்ஷார்த்திக்கு மனது இப்படியாகக்கூடாது. அஹங்காரத்தாலும் மமகாரத்தாலும் கெடக்கூடாது. இப்படிக்கேடில்லாதபடி பண்ணிக்கொடுப்பவன் இராமபிரான். அவனுடைய சரித்திரத்துடன் சதுரமா என்கிற பாசுரம் தொடங்குகிறது.

ராவணன் போலே மனது என்பதற்கு மூன்று காரணங்களைக் கூறுகிறது ஸாத்வதஸம்ஹிதையிலுள்ள இந்த ச்லோகம். முதல் காரணம் பத்து முகங்களுடைமை. ராவணனுக்குப் பத்து முகங்கள் இருந்ததால் அவனுக்குத் தசாநநன் என்று பெயர். மனதுக்குப் பத்து முகங்கள் என்னலாமோ என்னில், பத்து இந்த்ரியங்கள் வாயிலாக மனம் செயல்படுவதால், இதைத் தசேந்த்ரிய—ஆநநம் என்னத்தகும். மனம் இந்த்ரியங்களின் வாயிலாக, புலன்களின் முகமாக, தன் காரியத்தைப் பண்ணுகிறது என்று தமிழில் சொல்வது போலவே, ஸம்ஸ்க்ருதத்திலும் முகம் என்பதற்கு இவ்வர்த்தமும் கிடைக்கும். பத்தின் முகமாக மனம், பத்து முகத்தவனாக ராவணன், என்பது முதல் ஒப்புமை. இரண்டாவது ஒப்புமையைக் கோரம் என்ற பதத்தால் சொல்கிறார். ராவணன் கேட்பாரற்று, கொட்டமடித்து அட்டூழியம் பண்ணுபவன்; மனதும் அப்படியே; கட்டுக்கடங்காமல் கோரமாயிருக்கும். ராவணன் ஸீதையை ராமனிடமிருந்து பிரித்துத் தூரத்தில் வைத்தாற்போலவே, மனதும் நம்மை நம் ஸ்வாமியான பகவானிடமிருந்து பிரித்து க்ஷுத்ரமான விஷயங்களில் வைக்கிறது. நமது மனதுக்கும் ராவணனுக்கும் மூன்றாவது ஒப்புமை இராமபிரானால் சமம் அடைவது என்பது. சமம் என்றால் ஒடுங்கல், மரணம், என்கிற அர்த்தம் ராவணன் விஷயத்தில்; அமைதியுறுதல், அடங்கல், என்கிற அர்த்தம் மனது விஷயத்தில். இந்த மனது என்கிற ராவணனை சமம் பண்ணிக்கொடுப்பவனும் அதே சக்ரவர்த்தித் திருமகன் தான் என்கிறார். மேற்கோள் காட்டிய வசனத்தில் விவேகம் என்னும் பாணத்தைப் பிரயோகித்து இது நடந்தேறுவதாக உள்ளது. பத்து இந்த்ரியங்களை ஈரைந்து என்று சொல்லல் தகும். ஏனென்றால் அவை ஐந்து ஜ்ஞாநேந்த்ரியங்கள் (கண், காது, மூக்கு, நாக்கு, தோல், என்றவை), ஐந்து கர்மேந்த்ரியங்கள் (வாக்கு, கை, கால், இரு கழிவுறுப்புகள், என்பவை), என்று இரண்டு ஐந்துகளாகப் பாகுபட்டிருக்கின்றன. இந்த ஈரைந்து முகத்து மனதை நாம் இராமபிரானின் துணையால் வெற்றிகொள்ள வேண்டும். அதாவது அடக்க வேண்டும்; அதாவது அஹங்கார மமகாரங்களால் கெட்டுப்போகாதபடி நம் வசத்தில் வைத்திருக்க வேண்டும்.

கடந்த நாலு அறிவுரைகளின் தலைப்புகளைச் சேர்த்துப் படிப்போம்.

- ஈற்று நினைவுக்கு இன்றே சொல்.
- ஈரடி மந்திரம் என்றும் சொல்.
- ஈசனைத் தொழுநினை துதிஅறி சொல்.
- ஈரைம்முகத்து மனத்தை வெல்.

## 309. ஈனத்தொழிலைப் பண்ணாதே.

தொழில்களில் சில ஈனமானவை. அவற்றைப் பண்ணக்கூடாது.

गुणजालप्रकर्षेऽपि धीवरत्वेऽपि जन्मनः।
सर्वतीर्थावगाहेऽपि नीचवृत्तिर्न शस्यते॥

*— ஸுபாஷிதநீவீ.*

(திருட்டுத்தொழில், விபசாரத்தொழில், முதலிய) நீசத்தொழில்களைப் பண்ணக்கூடாது. இது துர்வ்ருத்த பத்ததியின் முதல் அறிவுரையாக இருக்கிறது. இந்த ச்லோகத்தின் முதல் அர்த்தம் வருமாறு:

> ஒருவன் நற்பண்புகள் நிறைய வாய்க்கப் பெற்றவனானாலும், சிறுவயது முதலே புத்திசாலியாக இருந்தாலும், எல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடினாலும், ஈனத்தொழிலைப் பண்ணினால், அவன் மதிக்கப்பட மாட்டான்.

களவுத்தொழில் முதலிய நீசத்தொழில் பண்ணுபவர்களில் சிலர் மிகுந்த புத்திசாலிகளாக இருப்பதுண்டு. கெட்டிக்காரத்தனத்தினால் அத்தொழில்களில் முன்னேறுவதும் உண்டு. ஏழைகளின் வயிற்றிலடித்துப் பெரும்பொருள் ஈட்டும் சில பணக்காரர்கள் நிறைய க்ஷேத்ராடனமும் புண்ணியநதிஸ்நானமும் பண்ணுவதுண்டு. இழிதொழிலைப் பண்ணினாலும் சிலர் வாய்மை, பொறுமை, முதலிய நற்பண்புகள் நிரம்பியராவதும் உண்டு. ஆனால் இந்த நற்குணங்களும், கெட்டிக்காரத்தனமும், தீர்த்தஸ்நானமும், அவர்கள் செய்யும் தப்புத்தண்டாத் தொழிலை நியாயப்படுத்தி விடாது. நாய் விற்ற காசு குரைக்காது என்று சொல்லிக்கொண்டு சிலபேர் அக்ரமத் தொழில்களையெல்லாம் பண்ணிப் பிழைப்பார்கள்; பெரிய மனிதர்களாயும் ஆவார்கள்; ஆனால் அவர்களைப் பாராட்டுவதற்கில்லை. இன்னும் சிலர் ஒரு பக்கம் இழிதொழிலைப் பண்ணிக்கொண்டே, இன்னொரு பக்கம் கோயில் குளம் என்று புண்ணியம் தேடுவார்கள். இந்தப் புண்ணிய காரியத்தால் அவர்கள் செய்யும் தொழில் சரியாகிவிடாது. ஈனத்தொழில் பண்ணுவதால் ஏற்படும் களங்கத்தைக் குணத்தாலோ திறமையாலோ கழுவாயாலோ நீக்கிக்கொள்ள முடியாது. இந்த ச்லோகத்துக்கு இன்னொரு அர்த்தம் வருமாறு:

> கயிற்று வலைகளைப் போட்டு இழுத்தாலும், பிறவியாலே செம்படவன் ஆனாலும், நீர்நிலைகளில் முழுகும் தொழிலைப் பண்ணினாலும் தாழ்ந்த தொழிலுக்குக் கௌரவம் கிடைக்காது.

குணம், ஜாலம், ப்ரகர்ஷம், தீவரன், என்ற பதங்களுக்கு இரட்டை அர்த்தங்கள் இருப்பதால், ச்லோகத்துக்கு இரண்டு தாத்பர்யங்கள் கிடைக்கின்றன. மீனவர் தொழிலைக் குறை சொல்லலாமோ எனில், நம் வம்புக்கு வராத மீன்களைத் தூண்டிலிட்டு வஞ்சித்தும், வலைவீசிப் பிடித்தும், துன்புறுத்துவதும், நீரிலிருந்து வெளியேற்றித் துடிதுடிக்கவைத்துக் கொல்வதும், நீசத்தொழில்களே. அப்பாவிப் பசு மாடுகளை யந்த்ரங்களால் கொன்று, கசாப்புக்கடை வைப்பது போலாம் இது. ஈவிரக்கமில்லாத்தொழில் ஈனத்தொழிலாம். அறநெறி வழுவாத தொழில்களில் எல்லாத்தொழில்களையும் மதிக்கலாகும். நாம் நீசத்தொழில்களைப் பண்ணக்கூடாது; பண்ணுவோரைக் கௌரவிக்கவும் கூடாது.

## 310. ஈப்புழு நூல் சோறுண்ணாதே.

ஈ முதலிய அசுத்தஜந்துக்கள் இருக்கும் உணவை உண்ணக்கூடாது.

> ஈப்புழுநூல் மயிருகிர்கள் இருக்கும் சோறும்
> . . . மருவாச்சோறே.
>
> – *ஆகாரநியமம்.*

எந்தெந்த அன்னத்தை உண்ணக்கூடாது என்பதை "மனிதர் பசு" எனத் தொடங்கும் பாடலில் கூறுகிறார். அவற்றுள் இதுவும் ஒன்று:

> சாப்பிடும் உணவில் ஈயோ புழுவோ மயிரோ நகமோ இருந்தால், அந்தச்சோறை விலக்கிவிடவேண்டும்.

இதை ஆரோக்கியத்துக்கான அறிவுரையாகவும் ஏற்கலாம். ஈ ஒரு நோய்பரப்பி. அசுத்தங்களில் அமர்ந்து அங்கிருந்து நம் உணவிலும் அமர்ந்து விடும். அத்தகைய உணவை உண்ணாமல் விலக்க வேண்டும்.

## 311. ஈச்வரன் நான் என்றெண்ணாதே.

தன்னை ஈச்வரனாக, ஆளுமை படைத்தவனாக, எண்ணக்கூடாது.

> ईश्वरोहम्, न नमेयं हि कस्यचित्, என்னும் துர்வாஸனையைத் தூரீகரித்து
>
> – *உபகாரஸங்கிரகம்.*

இது பகவான் நமக்குப் பண்ணும் உபகார பரம்பரையில் பதினேழாவதாகச் சொன்னதாம்.

> நானே ஈச்வரன். நான் யாருக்கும் வணங்க மாட்டேன். என்ற இத்தகைய எண்ணம் துர்வாஸனை என்னத்தக்கது. அதைத் தூரத்தள்ள வேண்டும். சிறிதும் இடம் கொடுக்கக்கூடாது.

இதற்கு உதவுபவன் பகவான். இதில் முதலில் மேற்கோளாகக் காட்டிய "ஈச்வரோஹம்" என்னும் வாக்கியம் பகவத்கீதையிலிருந்து எடுத்தது. நான் ஆள்பவன்; நான் துய்ப்பவன்; என்றெல்லாம் ஆஸுரகுணம் கொண்டவர்கள் கருதுவார்களாம். நம்மை ஆள்பவன் ஒருவன் உண்டு என்றல்லவா நாம் நினைக்கவேண்டும்?

## 312. ஈர்க்கொடு வெற்றிலை உண்ணாதே.

வெற்றிலை போட்டுக்கொள்ளும்போது அதன் நடுவிலுள்ள ஈர்க்கை எறிந்து விடவேண்டும்.

வெற்றிலை முன் தின்னாதே தின்னும் பாக்கும்
வெற்றிலையின் அடிநுனியும் நடுவில் ஈர்க்கும்
வெற்றிலையும் பாக்குமுடன் கூட்டித் தின்னும்
விதவைக்கும் முதன் முடிவாச்சிரமத்தார்க்கும்
வெற்றிலையும் சுண்ணாம்பின் இலையும் மற்றும்
விரதம் கொண்டிடுநாள் வெற்றிலையும் பாக்கும்
வெற்றிலை தின்னாநிற்கப் பருகுநீரும்
விதையென வைத்தது தினலும் விலக்கினாரே.

– *ஆஹாரநியமம்.*

வெற்றிலை போட்டுக் கொள்வதில் உள்ள சில நியமங்களுக்காக ஒரு பாசுரம் இடுகிறார். யார் போட்டுக்கொள்ளலாம்? எப்போது போட்டுக் கொள்ளலாம்? எப்படிப்போட்டுக்கொள்ள வேண்டும்? இதையெல்லாம் சுருங்கக் கூறும் பாசுரம் இது.

1. வெற்றிலையை வாயில் போட்டுக்கொண்ட பிறகு தான் பாக்கைப் போட்டுக்கொள்ளவேண்டும். முதலில் பாக்கு கூடாது. 2. வெற்றிலை போட்டுக்கொள்ளும்போது கிள்ளியெறிய வேண்டிய பகுதிகள் மூன்றுண்டு. அடிக்காம்பு, நுனி, நடு ஈர்க்கு, என்பவை. 3. விதவைகளும் பிரம்மசாரிகளும் ஸந்யாஸிகளும் வெற்றிலை போடக்கூடாது. 4. எந்த வெற்றிலையில் சுண்ணாம்பு வைத்துக்கொண்டு மற்ற வெற்றிலைகளுக்குத் தடவினோமோ, அந்த வெற்றிலையைத் தின்னக்கூடாது. 5. ஏகாதசி முதலிய விரததினங்களில் வெற்றிலை போட்டுக் கொள்ளக்கூடாது. 6. வெற்றிலையோடு கூட நீரைப் பருகக்கூடாது. 7. விதைக்காக வைத்த வஸ்துவைச் சாப்பிடக்கூடாது.

இந்த ஏழு விதிகளுக்கும் உட்பட்டு தாம்பூலம் மெல்லலாம். முன்னே பாக்கை மெல்லுவது , வெற்றிலையை நடு ஈர்க்குடன் மெல்வது , துறவிலும் பிரம்மசரியத்திலும் விதவைநிலையிலும் வெற்றிலை போடுவது , சுண்ணாம்பு வைக்கப் பயன்படுத்திய இலையை மெல்வது , விரத நாட்களில் தாம்பூலம் தரிப்பது , தீர்த்தத்துடன் வெற்றிலையைச் சேர்த்து விழுங்குவது, என்கிற இந்த ஆறும் நிஷித்தம். விதைக்காக வைத்ததைச் சாப்பிடக் கூடாதென்பது எல்லாத் தானியங்களுக்கும் சொன்னதாம்.

கடந்த நாலிலும் பண்ணக்கூடாதவையாகச் சொன்னவற்றைச் சேர்த்துப் படிப்போம்.

- ஈனத்தொழிலைப் பண்ணாதே.
- ஈப்புழுநூல் சோறுண்ணாதே.
- ஈச்வரன் நானென்றெண்ணாதே.
- ஈர்க்கொடு வெற்றிலை உண்ணாதே.

## 313. ஈற்று நினைவுக்கு அயராதே.

அந்திமஸ்ம்ருதிக்காகக் கவலைப்பட வேண்டாம்.

| |
|---|
| **नष्टस्मृतिरपि परित्यजन् देहम् இத்யாதிகளுக்கு** |
| **स्वयत्न साध्य अन्तिम प्रत्यय निवृत्तियிலே தாத்பர்யம்.** |
| **– ரஹஸ்யசிகாமணி.** |

பகவத்கீதை முதலியவற்றில் நம் இறுதிநினைவு (மரணகாலத்து அந்திமஸ்ம்ருதி) பகவானைப் பற்றியதாக இருந்தால் தான் மோக்ஷம் கிடைக்கும் என்றுள்ளது. ப்ரபந்நனுக்கு இந்த நிர்ப்பந்தம் உண்டா என்பதில் சர்ச்சை உண்டு. இதில் தன் கருத்தை விவரிக்கிறார்:

> "நஷ்டஸ்ம்ருதிரபி பரித்யஜந் தேஹம்" என்று இதே வராஹபுராணத்தில் ஒரு ச்லோகம். நினைவிழந்து உயிர்விட்டாலும் மோக்ஷம் உண்டென்கிறது. இது முதலான வாக்கியங்களுக்குக் கருத்து என்னென்னில், தன் முயற்சியால் சாதிக்க வேண்டிய அந்திமஸ்ம்ருதி தேவையில்லை என்பதாம்.

அந்திமஸ்ம்ருதி அவசியம் என்ற ப்ரமாண வாக்கியத்துக்கும், ப்ரபந்நனுக்கு அது அவசியம் இல்லை என்கிற ப்ரமாணவாக்கியத்துக்கும் விரோதம் இல்லை. தன் முயற்சியின்றியே அது வரும்படிப் பகவான் பண்ணுவான் என்றும், நல்ல நினைவுள்ள நாட்களில் தன்னை ஸ்மரிப்பவனை, நினைவிழந்த இறுதி நாட்களில் தானே ஸ்மரிப்பதாகப் பகவான் அருளிச்செய்திருப்பதால், அது பகவானின் காரியம் என்றும், அவ்வாறு அந்திமஸ்ம்ருதியை ஏற்படுத்து என்று இப்போதே ப்ரபன்னன் பிரார்த்திப்பதற்கும் திருஷ்டாந்தங்கள் ஆழ்வாராசார்யக் க்ரந்தங்களில் உண்டு என்றும், அப்போதைக்கு இப்போதே சொல்லி வைக்கலாம் என்றும், ப்ரபந்நர்களுக்கு அந்திமஸ்ம்ருதிக்கான முயற்சியே இல்லாவிட்டாலும் மோக்ஷம் உண்டு என்றும் பலபடியாக நிர்வாகம் இருந்தாலும், எல்லாவற்றுக்கும் பொதுவான விஷயம் ஒன்றுண்டு: இறுதிநினைவுக்காகத் தனிமுயற்சி எதையும் ப்ரபத்தி பண்ணிக்கொண்டவன் பண்ணத்தேவையில்லை என்பது அது.

## 314. ஈவில்லாரிடம் கதறாதே.

ஈவிரக்கம் இல்லாத கொடுநெஞ்சர்களிடம் சென்று கதறுவதில் பயனில்லை.

| |
|---|
| न ह्यसमर्थानां अकारुणिकानां च सन्निधौ विपन्नैः आक्रोष्टव्यं इति भावः |
| *– ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.* |

ஆளவந்தார் ஸ்தோத்ரத்தில் क्रन्दामि सम्प्रत्यगतिस्तवाग्रे என்கிற வரியின் உரையில் உள்ள வாக்கியம் இது.

> திறமையற்றவர்களிடத்தும் கருணையற்றவர்களிடத்தும் தவிப்பவர்கள் கதறக்கூடாது என்று கருத்து.

துயரப்படுபவர்கள் யாரிடம் போய்க் கதறிக்காலில் விழுந்து மன்றாடலாம்? அந்தத் துயரை நீக்கும் வல்லமையும், அவ்வாறு பண்ணுவதற்கான தயையும் உள்ளவனிடம் சென்று கெஞ்சலாம். அருளிருந்தும் வல்லமையில்லாத அண்டை வீட்டுக்காரனையோ, வல்லமையிருந்தும் அருள் இல்லாத கொடுங்கோல் அரசனையோ நாடிக் கதறுவது வியர்த்தம். வல்லமையும் அருளும் ஒருங்கே கொண்ட ஸர்வேச்வரனைச் சரணடைவோம்.

## 315. ஈற்றிடையூறிலும் இடறாதே.

நிறைய தடங்கல்களைத் தாண்டி வந்தபிறகும், கடைசித் தடங்கலையும் தாண்டாவிட்டால் பயனில்லை.

> முப்பத்திரண்டடியான துரவுதத்துவார் முன்னடியிலே விழுந்ததோடு முப்பதாமடியிலே விழுந்ததோடு வாசியில்லாதாப்போலே ஏதேனுமொரு பர்வத்திலே அந்தராயமுண்டானாலும் இவன் ஸம்ஸாரத்தைக் கடந்தானாகான்.
>
> – *ரஹஸ்யத்ரயஸாரம்.*

அர்த்தபஞ்சகாதிகாரத்தில் ஐந்து அர்த்தங்களில் கடைசியானதான ப்ராப்திவிரோதி என்பதை விளக்குமோது ஒரு அறிவுரையைத் தகுந்த திருஷ்டாந்தத்துடன் விளக்குகிறார்:

> ஸம்ஸாரத்தைக் கடப்பது லட்சியம். அதற்கு இடையூறுகள் அதிகம். ஆரம்பப்பருவத்திலும் தடங்கல் வரலாம், முடிவை நெருங்கும் பருவத்திலும் வரலாம். இதில் எந்தப் பருவத்தில் தடங்கலில் முடங்கினாலும், ஒரேமாதிரியான இழப்பு தான். இதற்கொரு திருஷ்டாந்தம். முப்பத்திரண்டு அடி அகலமுள்ள ஒரு கிணறை ஒருவன் தாண்டவேண்டும்; முதலடியிலே விழுவதற்கும், முப்பதாம் அடியிலே விழுவதற்கும் பலனில் வாசியுண்டோ? கிடையாது. அது போலவே இங்கும்.

ஸம்ஸாரத்தில் மகிழ்ச்சியில் திளைத்து மோக்ஷம் வேண்டாதவன் கிணறைத்தாண்ட முயலாதவன். ஸ்வர்க்காதி பலனையே ஸம்ஸாரநிவ்ருத்தியாக நினைப்பவன் முதலடி மட்டும் தாண்டி விழுபவன் போலே. ஆத்மாநுபவம் என்கிற கைவல்யத்திலே திருப்தி பெறுபவன் கடைசியடியில் விழுபவன் போலே. அதையும் மீறி மோக்ஷம் அடைபவன் மட்டுமே முழுக்கிணறு தாண்டியவன் போலே. ஒரே அடியில் விழுபவனும், முப்பதாம் அடியில் விழுபவனும், ஒரே கிணற்றில் விழுவதால் பெரிய வாசியோன்றும் இல்லை. ஸ்வர்க்கம் முதல் கைவல்யம் வரை எல்லாம் ஸம்ஸாரமண்டலத்தில் அடங்கியவையே. கைவல்யத்திலும் திருப்தியுறாமல் மோக்ஷத்தை விழையவேண்டும்.

## 316. ஈர்த்துலகத்தை மகிழாதே.

உலகத்தை ஆவர்ஜனம் பண்ணுவதில் ஈடுபட்டு மகிழ வேண்டாம்.

> न लोकचित्तग्रहणे रतस्य . . . இத்யாதிகளிலும் . . . பாஹ்யவிஷய ப்ராவண்யமே உடையார்க்கு மோக்ஷமில்லை என்றபடி.
>
> – *ரஹஸ்யத்ரயஸாரம்.*

நம் ஈடுபாடு முழுதுமாகப் பகவானிடத்தில் இருக்க வேண்டும் என்பதை விளக்குகையில் ப்ரபாவரக்ஷாதிகாரத்தில் கூறும் அறிவுரை இது.

> மக்களின் மனதைக் கவர்வதில் ஈடுபட்டவனுக்கும் மோக்ஷம் கிடைக்காது. என்றொரு ப்ரமாணவசனம். இது முதலானவற்றின் தாத்பர்யம் வெளி விஷயங்களில் மனதைச் செலுத்துபவருக்கு வீடுபேறு கிடையாது என்பதாம்.

இதிஹாஸஸமுச்சயத்தில் உள்ள ச்லோகம் இங்கு மேற்கோள் காட்டப்பட்டது. உணவிலும் உடையிலும் மாடமாளிகையிலும் நாட்டம் கொள்வது எப்படி மோக்ஷத்துக்குத் தடையோ, அது போலவே மக்களின் மனத்தில் இடம் பிடிப்பதற்காக உழைப்பதும் மோக்ஷத்துக்குத் தடையாம். ஆகையால், நிறைய தொண்டர்களைச் சேர்ப்பது, விளம்பரப்படுத்திக் கொள்வது, புகழுக்காக முயற்சிப்பது, பொதுமக்கள் பாராட்டைத் தேடுவது, இதெல்லாம் முமுக்ஷுவுக்குத் தேவையில்லை. ஒரு விதத்தில் தடங்கல் கூட.

கடந்த நாலிலும் பண்ணக்கூடாதவையாகச் சொன்னவற்றைச் சேர்த்துப் படிப்போம்.

- ஈற்று நினைவுக்கு அயராதே.
- ஈவில்லாரிடம் கதறாதே.
- ஈற்றிடையூறிலும் இடறாதே.
- ஈர்த்துலகத்தை மகிழாதே.

அடுத்த நாலு அறிவுரைகளும் ஈனர்களைப் பற்றியவை.

## 317. ஈனரொதுக்கின் வருந்தாதே.

நீசர்களால் ஒதுக்கப்பட்டால் அதற்காக வருந்த வேண்டியதில்லை.

> कलकण्ठगणास्वाद्ये कामस्यास्त्रे निजाङ्कुरे।
> निम्बवृत्तिभिरुद्गीर्णे न चूतः परितप्यते॥
>
> – *ஸுபாஷிதநீவீ.*

அந்யாபதேசமாகக் கூறும் இவ்வறிவுரை ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தின் இறுதியிலும் இருப்பதால் ப்ரஸித்தமானது.

> மாந்தளிரைக் குயில்கள் விரும்பியுண்ணும். மாம்பூவை மன்மதன் பாணமாகக் கொள்வான். இத்தகைய சிறப்பு கொண்ட மாமரம், வேம்பால் வாழும் காகங்கள் தன்னைக் கக்குவதால் வருந்துவதில்லை.

ஒருவன் எவ்வளவு நல்லவனாயினும், அவனை வெறுப்பவரும் உலகத்தில் இருக்கத்தான் செய்வர். நல்லோரின் வெறுப்புக்கு ஆளானால் வருந்துவது யுக்தம்; ஆனால் நீசர்களின் ஒதுக்கலுக்கு ஆளானால், வருந்தவே வேண்டாம். நல்லதாயிற்று என்று ஒதுங்கியே இருக்கலாம். உதாரணமாக மாமரத்தைப் பாருங்கள். காக்கைக்கு மாந்தளிர் பிடிக்காது. தப்பித்தவறி சாப்பிட்டாலும் வாந்தி எடுத்து விடும். அதற்குப் பிடித்தது வேப்பந்தளிர் தான். இதனால் மாமரத்துக்கென்ன வருத்தம்? ஒன்றுமில்லை. அதன் தளிர் குயில்களுக்குப் பிடித்திருக்கிறது. அதன் பூ மன்மதனின் ஐந்து பாணங்களில் ஒன்றாக இருக்கிறது. இவ்வளவாலே அது பெருமிதம் அடையலாம். காகம் உமிழ்ந்ததால் கவலைப்பட வேண்டாம். இந்த ச்லோகத்து நீதிகளை இரு வகையாகச் சொல்லலாம். எல்லாருக்கும் பிடித்தவனாவது முடியாது. நல்லோருக்குப் பிரியனாவது நல்லது. நீசர்களுக்குப் பிரியனாகாவிட்டால் என்ன? கேட்கப்போனால், நீசர்களுக்குப் பிடிக்காதவனாயிருப்பதே நல்லது. நம்மை நீசர்கள் ஒதுக்கினால் நாம் பரிதவிக்க வேண்டியதில்லை. நல்லோர் நம்மை ஒதுக்கிவிடாதபடி நாம் நடந்துகொள்வோம்.

## 318. ஈனர்களோடே இணங்காதே.

இழிந்தவர்களின் நட்பு தீமை பயப்பது.

| |
|---|
| "நயவேன் பிறர்பொருளை நள்ளேன் கீழாரோடு" இத்யாதிகளின் படியே ஏற்கவே அபராதங்கள் புகாதபடி வர்த்திக்க ப்ராப்தம். |
| – *ரஹஸ்யரத்நாவளிஹ்ருதயம்.* |

ரஹஸ்யரத்நாவளியின் பதினாலாவது வாக்கியத்தின் உரையில் அருளும் அறிவுரையிது:

> பிறர்பொருளுக்கு ஆசைப்படுதல், கீழ்மக்களோடு நட்பு கொள்ளுதல், முதலியவை அபராதங்களில் சேரும். இக்குற்றங்கள் நேராதபடி நாம் வாழவேண்டும்.

பிறன்பொருள் கவர்தல் எப்படி (முதல் உபநிஷத்தில் முதல் ரிக்கில் கூறப்பட்டதால்) முக்கியமான குற்றமோ, அதே போலப் பெரும்பிழையாம் ஈனர்களோடு சகவாசம். முதல் திருவந்தாதிப்பாசுரத்தில் வெளிப்படையாகக் கூறிய குற்றங்கள் இவை. இத்தகைய பிழைகளைப் புரியாமல் நாம் வாழவேண்டும்.

## 319. ஈனருக்குபதேசிக்காதே.

சாத்திரக்கருத்துகளைத் தகுதியற்ற நீசர்களுக்கு உபதேசிக்கலாகாது.

न देयमेतच्च तथानृतात्मने शठाय क्लीबाय च जिह्मबुद्धये।
न पण्डितज्ञाय परोपतापिने देयं त्वयेदं विनिबोध यादृशे।

*– ரஹஸ்யத்ரயஸாரம்.*

ஆசார்யக்ருத்யாதிகாரத்தில் மந்த்ரத்தை அயோக்யனுக்குச் சொல்லித்தராமல் இருப்பதையும் ஒரு கடமையாகக் கூறுகிறார்:

> இதைப் பொய்ப்புளுகுப்பேர்வழிக்கோ, வஞ்சகனுக்கோ, நபும்ஸகனுக்கோ, கோணல்புத்திக்காரனுக்கோ, தன்னைப்பண்டிதனாக நினைத்துக் கொண்டிருப்பவனுக்கோ, பிறரைத் துன்புறுத்துபவனுக்கோ, சொல்லித்தரக்கூடாது. எப்படிப்பட்டவனுக்குத் தரலாமென்றால் சொல்கிறேன் கேள்.

பொய்யன், ஏமாற்றுபவன், அலி, வக்ரபுத்திக்காரன், தற்பெருமைக்காரன், பிறரை இம்சிப்பவன், முதலிய ஈனர்களுக்கு அரிய அத்யாத்மக் கருத்துகளை உபதேசிக்கக்கூடாது. மஹாபாரதத்தில் வஸிஷ்ட கராள ஸம்வாதத்தில் கூறிய அறிவுரை இது. வஸிஷ்டர் வாயால் வந்ததால் தனிமதிப்பு தான்.

## 320. ஈனர் காசை வாங்காதே.

நீசர்கள் கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொள்ளக்கூடாது.

कुलटाषण्डपतितवैरिभ्यः काकिणीमपि।
उद्यतामपि गृह्णीयात् नापद्यपि कदाचन॥
இத்யாதிகளிற்படியே தர்மவிருத்தமான அர்த்தகாமங்கள் தூரதோநிரஸ்தங்கள் ஆனபடியாலே

*– ரஹஸ்யத்ரயஸாரம்.*

ஶாஸ்த்ரீய நியமந அதிகாரத்தில் பகவத்ராமானுஜரின் அந்திமோபதேசத்தை விளக்குவதாய் வந்த அறிவுரை இது:

> விபசாரிப்பெண், நபும்ஸகன், பதிதன், பகைவன், இவர்களிடமிருந்து, சிறிய காசைக்கூட வாங்கிக்கொள்ளக்கூடாது. அவர்கள் முயன்று கொடுத்தாலும், நமக்கு வாங்க வேண்டிய ஆபத்துச்சூழ்நிலை அமைந்தாலும், ஒருபோதும், வாங்கக்கூடாது. என்கிற வசனப்படி, அறத்துக்கு விருத்தமான பொருளும் இன்பமும் தூரத்தள்ளத்தக்கன.

ஈனஜனங்கள் தாமாகவே வலிய முன்வந்து கொடுத்தாலும், நமக்குப் பணம் மிகவும் தேவைப்படும் ஆபத்துச் சந்தர்ப்பமாய் இருந்தாலும், சிறு காசைக்கூட அவர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளக்கூடாது. நல்லவர்களிடமிருந்து மட்டுமே பணத்தைத் தானம் வாங்கலாம்.

நடத்தை கெட்டவள், அலியானவன், கர்மப்ரஷ்டன், த்வேஷம் பூண்டவன், இவர்களுடைய சல்லிக்காசு கூட நமக்கு ஆகாது.

ஈனர்களை நாம் நடத்தவேண்டிய முறையைக்கூறும் கடந்த நாலு அறிவுரைகளை ஒருசேரப்பார்ப்போம்.

| |
|---|
| ஈனரொதுக்கின் வருந்தாதே. |
| ஈனர்களோடே இணங்காதே. |
| ஈனருக்குபதேசிக்காதே. |
| ஈனர் காசை வாங்காதே. |

அடுத்த நாலு அறிவுரைகளும் ஈகை பற்றியவை.

## 321. ஈயாக் கருமியாய் இருக்காதே.

உலோபியாக இருக்காதே.

> वदान्यश्च कदर्यश्च गृहीतस्थिरलोभतः ।
> स्वानर्थान् सञ्चिनोत्यर्थान् परानर्थैरयोजयन् ॥
>
> – *ஸுபாஷிதநீவீ.*

கருமிகளுக்கு அர்த்தமே அனர்த்தமாகும் என்கிறார்.

> வள்ளலும் உலோபியும் பலவகைகளில் சமமாகிறார்கள். இருவருக்கும் நிலையான நன்மை தனக்குக் கிடைப்பதில் ஆசை உண்டு. இருவரும் ஸ்வாநர்தாந் சேமிப்பது, பராநர்த்தை: சேர்க்காதது, என்ற இரண்டையும் பண்ணுபவர்கள். அர்த்தத்தில் மட்டுமே வித்தியாசம். வள்ளல் தன் திரவியங்களையெல்லாம் பிறருக்கு அனர்த்தமாகாதபடி சேமிப்பான். கருமியோ பிறருக்குத் திரவியங்களைச் சேரவிடாமல், தன் அனர்த்தத்தை அர்த்தரூபத்தில் சேமிப்பான்.

கருமி ஏன் தானம் பண்ணாமல் இருக்கிறான் என்றால் தான் ஈட்டியது தன்னிடமே நிலைக்கட்டும் என்கிற ஆசையால் தான். கொடையாளி ஏன் தானம் பண்ணுகிறான் என்றால், பணத்தை விட இன்னும் நிலையானதொன்று தனக்குக் கிடைக்கவேண்டும் என்ற ஆசையால் தான். நிலைப்பதில் ஆசை என்பது இருவருக்கும் பொது. கருமி பிறர்க்கு ஈவதே இல்லை. அதன் விளைவாக அனர்த்தத்தை அடைகிறான். வள்ளல் பிறருக்கு ஈந்துகொண்டே இருக்கிறான். அதன் விளைவாக பிறர் துயர் தீர்த்து தானும் நன்மை பெறுகிறான். இருப்பது நிலைப்பதற்குப் பாடுபடவா, இதைவிட நிலையானதற்கு இருப்பதைப் பயன்படுத்தவா, என்பதை ஆலோசிக்கவும். கருமியாய் இருந்து கெட்டுப்போகாதே. தனக்கும் பிறர்க்கும் திரவியங்களைப் பயன்படுத்து. பிறருக்குத் தருவதன் மூலம் தனக்கு க்ஷேமத்தை ஸம்பாதித்துக்கொள். தன்னலம் வேண்டாமென்று சொல்லவில்லை. அது அதிகமாகி, அதற்காகக் கொடையாளியாகு என்கிறார். தன்னலம்

அதிகமாக வேண்டுபவர்கள் தன்னலத்துக்காகப் பிறர்நலம் பேணவேண்டும் என்று வாதிக்கிறார். விசித்திரமான வாதம் தான்.

## 322. ஈவதைச் சிறிதும் குறைக்காதே.

கேட்டதுக்கும் மேலாகக்கொடு.

> अपुनःप्रार्थनीयस्य प्रार्थिताधिकदायिनः ।
> अर्थिनः प्रथमे तस्य चरमान् पर्यपूरयन्॥
>
> – *யாதவாப்யுதயம்.*

யதுமஹாராஜனைப் போற்றும் முகத்தால், நமக்குக் கொடையின் பெருமையை அறிவுறுத்துகிறார் முதல் ஸர்க்கத்திலேயே:

> அவனிடம் ஒரு தடவை யாசிக்க வந்தவர்கள் மறுபடி யாசிக்க வரத் தேவையில்லை. எவ்வளவு கேட்டார்களோ, அதைவிட அதிக அளவு கொடுப்பான். ஆகையால் முதலில் வந்த யாசகர்கள் பிற்பாடு வரும் யாசகர்களை நிறைவு செய்வார்கள்.

யாசகம் பெற்றவர்களே, கொடையாளிகளாக மாறி, பின்னர் வரும் யாசகர்களுக்குக் கேட்டதைத் தருவார்கள். அந்த அளவுக்கு அந்த யதுராஜன் வழங்கியிருப்பான். நாமும் அதிக அளவு தானம் பண்ணவேண்டும் என்பது நீதி. யாசகர் மீண்டும் ஒருநாள் வரும்படி, குறைவாகக் கொடுக்காதே. (புந:ப்ரார்த்தநீயனாகாதே.)

## 323. ஈவதை எனதென நினைக்காதே.

எந்தப்பொருளைத் தானம் பண்ணும்போதும் எனதன்று என்னுக. குறிப்பாக ஆத்மஸமர்ப்பணத்திலும்.

> தன்னுடைய த்ரவ்யத்தை ராஜாவுக்கு உபஹாரமாகக் கொடுப்பாரைப்போல என்னது என்கிற அபிமானத்தோடே ஸமர்ப்பிக்கில் ஆத்மாபஹாரசௌர்யம் அடியற்றதாகாது . . . ந மம என்று ஸ்வஸம்பந்தம் அறுக்கையே . . . ஸாரமென்றதாயிற்று.
>
> – *ரஹஸ்யத்ரயஸாரம்.*

மம நாத என்று தொடங்கும் ஆளவந்தார் ஸ்தோத்ரத்துக்குச் சிலர் ப்ரபத்தி பண்ணினது தப்பென்றதாகத் தப்பர்த்தம் சொல்கிறார்கள். உண்மையைத் தெளிவிக்கிறார் ஸாங்கப்ரபதநாதிகாரத்தில்.

> தனக்குரிய பொருளை அரசனிடம் ஸமர்ப்பிக்கும்போது, என்னதைத் தருகிறேன் என்றொரு அபிமானம் இருக்கலாம். ஆனால் பகவானிடம் ஆத்மஸமர்ப்பணம் பண்ணும்போது இது கூடாது. இருந்தால், ஆத்மத்திருட்டு அடியறவில்லை எனத்தெரிகிறது. எனதன்று என்று தன் ஸம்பந்தத்தை விட்டுவிடுகை ஸாரமான கருத்து.

நாம் நமது ஆத்மாவைப் பகவானிடம் ஸமர்ப்பிப்பதற்கும், நமது பொருளொன்றை அரசனுக்குக் காணிக்கையாக்குவதற்கும், முக்கிய வாசியொன்று உண்டு. பகவானுக்குச் சொந்தமானதை அவனுக்கே திருப்பித் தருவது ஒன்று. நமக்குச் சொந்தமானதை ராஜாவுக்கு ஸமர்ப்பிப்பது மற்றொன்று. என்னுடையதன்று என்று தன் தொடர்பறுக்கை இரண்டிலும் உண்டு. என்றுமே அது என்னுடையதன்று என்று முதலாவதில். இன்றுமுதல் அது என்னுடையதன்று என்று இரண்டாவதில். தானம் பண்ணும்போது ந மம என்பதன் தாத்பர்யம் இது.

## 324. ஈகையால் இறைபெற முயலாதே.

பக்தியில்லாமல் தானத்தினால் மட்டும் கடவுளை அடைய முடியாது.

> किं विज्ञानैः किं तपोदानयज्ञैः किं वान्यैश्च त्वत्परित्यागदीनैः।
>
> ज्ञातुं द्रष्टुं तत्वतश्च प्रवेष्टुं शक्यं ब्रह्मानन्यभाजा त्वयैव॥
>
> *– ஸங்கல்பஸூர்யோதயம்.*

"பக்த்யா த்வநந்யயா ஶக்ய: அஹமேவம்விதோர்ஜுந ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப" என்கிற பகவத்கீதாச்லோகத்தில் உள்ள பதங்களையே பெரும்பாலுமாக இட்டுள்ளார் இந்த ச்லோகத்தில். விஷ்ணுபக்தி என்பவளிடம் விவேகமஹாராஜன் கூறும் வாக்கியம் இது:

> பேரறிவுகளால் என்ன? தவத்தாலும் தானத்தாலும் யாகத்தாலும் ஆவது என்ன? (விஷ்ணுபக்தியாகிற) உன்னை விட்டொழிந்த மற்றவற்றால் தான் என்ன? இறைவனை அறிவதற்கோ, உள்ளபடி காண்பதற்கோ, உட்புகுவதற்கோ, உன் துணையால் மட்டுமே, அநந்யபக்தர்களுக்குச் சாத்தியம் ஆகிறது.

பக்தியில்லாதவர் பண்ணும் தானம் முதலியவை ப்ரஹ்மஸாக்ஷாத்காரத்துக்குச் சிறிதும் பயன்படாதவை. அதிகப்பக்ஷமாகப் புண்ணியங்களைச் சேர்த்து சுவர்க்கலோகம் புகுவதற்கு மட்டும் பயன்படலாம். அதே தானத்தைப் பக்தியுடன் பகவத்ப்ரீதிக்காகப் பண்ணும்போது, அது ஸ்வர்க்காதி சுகங்களோடு நிற்காமல் இறையுணர்வையே ஏற்படுத்தும். எனவே பக்தியிலாத தானம் பண்ணாதே. பக்தியுடன் தானம் பண்ணு.

ஈகை அதாவது தானம் என்பதைப் பற்றிய கடந்த நாலு அறிவுரைகளையும் சேர்த்துப்படிப்போம்.

- ஈயாக் கருமியாய் இருக்காதே.
- ஈவதைச் சிறிதும் குறைக்காதே.
- ஈவதை எனதென நினைக்காதே.
- ஈகையால் இறைபெற முயலாதே.

## 325. ஈரக்காலுடன் உறங்காதே.

படுக்கையில் ஈரமில்லாத கால்களுடன் இருக்கவேண்டும்.

> यत्पुनरनन्तरं पञ्चकालकृत्योक्तम् . . .
>
> सभृत्यबान्धवैर्युक्तः स्वपेत् शुष्कपदो निशि।
>
> *– பாஞ்சராத்ரரக்ஷா.*

சாப்பிடும்போது ஈரக்காலுடன் இருக்கவேண்டும். அதற்கு மாறாகத் தூங்கும்போது உலர்ந்த காலுடன் இருக்கவேண்டும்.

> பணியாட்களோடும் உறவினர்களோடும் கூட இரவில் உலர்ந்த கால்களுடன் தூங்கவேண்டும். இவ்வாறு ஐம்பொழுதுக்கான காரியங்கள் சொல்லப்பட்டன.

ரஹஸ்யாம்நாயத்திலிருந்து எடுத்த மேற்கோள் இது. இரவில் ஹோமம், ஆஹாரம், தூக்கம், என்ற மூன்றயும் வெளிப்படையாகக் கூறுகிறது இங்குள்ள ச்லோகம். யோகமும் அடங்குமென்று விளக்குகிறார். அது போகட்டும். ஶுஷ்கபத என்கிற பதம் இங்கு வறண்ட சொல் அன்று; ஒரு நீதியை உணர்த்த வந்த சொல்; உலர்ந்த கால் என்று அர்த்தம். படுக்கையில் ஈரக்காலைத் துடைப்பதற்காக ஒரு தல்வத்தை வைத்துக்கொள்வது சில பெரியோர்களின் வழக்கம்.

## 326. ஈனரின் அறிவுரை ஏற்காதே.

பண்பற்றவர்களின் உபதேசங்களை ஏற்கக்கூடாது.

> व्यसनासारवेगानां वारणं न प्रकल्पते।
>
> उपदेशैरनार्याणां उत्तानच्छत्रसन्निभैः॥
>
> *– யாதவாப்யுதயம்.*

இருபத்திரண்டாம் ஸர்க்கத்தில் கிருஷ்ணன் அரசர்களுக்குக் கூறும் அறிவுரைகளில் இதுவுமொன்று:

> மழைப்பெருக்கு வேகமாகக் கொட்டும்போது தலைகீழாய்த் திருப்பிய குடை எப்படிப் பயன்படாதோ அப்படி நமக்கு வ்யஸனங்கள் பெருகும்போது பண்பற்றவரின் உபதேசங்கள் தடுக்கமாட்டா.

மழை போல விபத்துகள். குடை போல அறிவுரைகள். நல்ல குடை போல நல்லோரின் உபதேசங்கள். திரும்பிய குடை போல நீசர்களின் உபதேசங்கள். தப்பிக்க விரும்புபவர்கள், நல்லவர்களிடம் மட்டுமே அறிவுரைகளை ஏற்கவேண்டும். நீசர்கள் தாமே முன்வந்து அறிவுரை வழங்கினாலும் அவற்றைப் புறக்கணிக்க வேண்டும். தலைகவிழும் குடையால் மேலும் கஷ்டம் தான் ஏற்படும். நீசர்களின் உபதேசங்களாலும் அப்படியே.

## 327. ஈர்ஷ்யையினால் வெறுப்படையாதே.

பொறாமை முதலிய காரணங்களால் வாழ்க்கையில் வெறுப்படையக்கூடாது.

> ஈர்ஷ்யாதிகளாலே நிர்வேதம் பிறக்குமாகில் அது மேலும் விபரீதவ்ருத்தங்களிலே கைவளரப்பண்ணும்.
>
> – *பரமபதஸோபாநம்.*

நிர்வேதபர்வத்தில் நமக்கு ஏற்படும் நிர்வேதம் எதன் மூலமாக ஏற்படவேண்டும் என்பதும் முக்கியம் என்கிறார்.

> பொறாமையினால் வெறுப்பு ஏற்பட்டால் அது மேலும் நம்மைத் தவறான செயல்களைச் செய்யத்தூண்டும்.

எவனிடம் பொறாமை ஏற்பட்டதோ அவனைப் பகைத்துக்கொண்டு அவனுக்குத் தீங்கிழைக்க முற்படுதல், வாழ்க்கை வெறுத்துப்போய் நிம்மதியிழத்தல், தற்கொலை முயற்சி, துர்க்குணவளர்ச்சி, இவற்றையெல்லாம் இங்கு விபரீதவ்ருத்தி என்கிறார். மேலும் என்றதன் கருத்து என்னவென்றால், ஏற்கெனவே ஈர்ஷ்யை ஏற்பட்டதே ஒரு விபரீதம் தான்; அதனால் வெறுப்பும் அதனால் இன்னமும் விபரீதச்செயல்களும் தேவையா என்பதாம். இதே நிர்வேதம் உணர்த்தியால் வந்தால், அறிவால் ஆராய்ந்து விரக்தி ஏற்பட்டால், அதன் விளைவு நல்லதாய் இருக்கும். மோக்ஷத்தில் நாட்டம், லம்பம் முதலிய தீய பண்புகள் அழிகை, ஆத்மகுணபூர்த்தி, இவற்றையெல்லாம் ஏற்படுத்தும். இப்படிப்பட்ட நிர்வேதமே நல்லது. எல்லா நிர்வேதமும் நல்லதாகாது.

## 328. ஈசன் பால் அவம் பறையாதே.

ஸர்வேச்வரனிடத்திலும் குறை காணும் அளவுக்கு அஸூயை வேண்டாம்.

> मयि दत्तावधानायां विश्वदोषापहारिणा।
>
> न शक्यमीश्वरेणापि निरवद्येन वर्तितुम्॥
>
> निरङ्कुशाः खलु मत्परिगृहीताः पुरुषाः नित्यमविद्यमानमपि दोषं विद्यमानवदापादयन्ति किमुत विद्यमानम् ।
>
> – *ஸங்கல்பஸூர்யோதயம்.*

ஐந்தாம் அங்கத்தில் அஸூயை என்பவளின் வாக்கியமாக அமைந்ததிது :

> நான் விழிப்புடன் செயல்பட்டால், இறைவனுக்கும் குறைகாண்பாரின்றி இருக்க முடியாது; உலகின் குறைகளையெல்லாம் களைகின்ற கடவுளும் குறைகாண்பாரிடமிருந்து தப்பமுடியாது. நான் ஒருவனைப் பிடித்துக்கொண்டேனானால் அவனைக் கட்டுப்படுத்தவே முடியாது. அத்தகையவர் (அஸூயாளுக்கள்) இல்லாத குறைகளையெல்லாம் இருப்பது

போலப்பண்ணிவிடுவார்கள்; இருக்கிற குறைகளை அவதூறு சொல்லாமல் விட்டுவைப்பார்களா?

“ஈசன் பால் ஓர் அவம் பறைதல்” என்பது திருவாய்மொழியில் உள்ள சொற்றொடர். அஸூயை பிடித்தவர்கள் யாரையுமே தம் பழிச்சொல்லிலிருந்து விடுவிப்பதில்லை. ஆனானப்பட்ட ஸர்வேச்வரனையும் அவர்கள் விட்டு வைப்பதில்லை. ஏதாவது பழி சொல்வார்கள். இதிலிருந்து நமக்கு நீதிகள் : நாம் அப்படி (நல்லவரையும் தூஷிப்பவராக) ஆகக்கூடாது ; அத்தகையவரின் பழிக்கு நாம் இலக்கானால் அதைப் பொருட்படுத்தக்கூடாது (எத்தனையோ நல்லவர்களும் அவர்களது நிந்தைக்கு ஆளானவர்கள் தானே?) ; அவர்கள் பிறருக்குச் சொல்லும் அவதூறுகளை நம்பவும் கூடாது ; அவர்களால் நாம் கெடக்கூடாது. திருமாலைத் தூஷிக்கக் கூடாது.

இப்போது பண்ணக்கூடாததாகச் சொன்ன கடந்த நாலு வருமாறு :

- ஈரக்காலொடு தூங்காதே.
- ஈனரின் அறிவுரை ஏற்காதே.
- ஈர்ஷ்யையினால் வெறுப்படையாதே.
- ஈசன் பால் அவம் பறையாதே.

## 329. ஈறுவரை நல்வாழ்க்கை வாழ்.

இறுதிநாள் வரை குற்றமற்ற நல்வாழ்க்கை நடத்து.

> अङ्गीकुर्वन्ननघललितां वृत्तिं आदेहपातात्
>
> – ரஹஸ்யத்ரயஸாரம்

உத்தரக்ருத்யாதிகாரத்தின் முகப்பு ச்லோகத்தின் மூன்றாவது வரி இது. ப்ரபத்திக்குப் பின் வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதைச் சொல்கிறார்.

> உயிர்துறக்கும் வரையில் குற்றமற்றதும் செம்மையழகு கொண்டதுமான வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு.

இதில் இரண்டு அடைமொழிகள் வாழ்க்கைக்கு. அநக என்றும் லலித என்றும். அதை விளக்கி இவ்வதிகாரத்தில் பத்து அறிவுரைகள். 1. ஆசார்யனிடம் அர்த்தங்களைக் கேட்டல் 2. பரமைகாந்திகளின் கூட இருந்து அவர்களைப் பின்பற்றுதல். 3. தன் தாழ்மையை நினைத்துக்கொண்டே இருத்தல். 4. மனம் தளராமல் இருத்தல். 5. புலன்களைக் கட்டுப்படுத்திச் சரியாகச் செலுத்துதல். 6. திருக்கோவில்களில் கைங்கரியங்கள் புரிதல் 7. நல்வழியில் ஈட்டிய பொருளை மட்டுமே கைங்கரியங்களுக்குப் பயன்படுத்துதல் 8. ஆசார்யனிடத்தும் பகவானிடத்தும் நன்றியுடன் இருத்தல். 9. அவதார ரஹஸ்யங்களை அனுஸந்தித்தல். 10. மூன்று கரணங்களாலும் தீயதை விலக்கி நல்லதை ஏற்றல். என்கிற பத்தும் உள்ள வாழ்க்கை தான் இங்கு அநகமான லலிதமான வாழ்க்கை என்றது. இத்தகைய வாழ்க்கையை மரணம் வரை நடத்தவேண்டும் என்கிறார்.

## 330. ஈதிகள் இல்லா இடத்தில் வாழ்.

அதிவ்ருஷ்டி (அடாது பெய்கிற மழை) முதலிய தொல்லைகள் ஈதிகள் எனப்படும். இவையில்லாத இடமே வாழ்வதற்கும் வாழ்த்துவதற்கும் உரியதாகும்.

> तातेतातीतिततातीतः
>
> – *யாதவாப்யுதயம்.*

ஆறாவது ஸர்க்கத்தில் கோவர்த்தனமலையின் பெருமைகளை விசித்திரமான சொல்லமைப்புகளுடன் வருணிக்கும்போது இந்த வரி ஏகவ்யஞ்ஜநம் என்கிற சித்ரம் கொண்டது. எட்டு எழுத்துகளுமே த, தா, தி, தீ, வரிசையில் வருபவை. தாத, இத அதீதி தா அதீத என்று பிரித்துப் பொருள் கூறலாம்.

> இந்த மலை அதீதமாக இருக்கிறது ; மற்ற இடங்களைவிட மேம்பட்டதாக இருக்கிறது. அதற்கென்ன காரணம் என்றால், இத–அதி–ஈதி–தா என்பது காரணம். ஈதிகள் என்கிற பெருந்தொல்லைகள் இல்லாமையை அடைந்துள்ளது.

எவ்வெந்த இடங்களில் இயற்கைச் சீற்றங்கள் இல்லையோ, அவ்விடங்களில் வாழலாம், அவ்விடங்களை வாழ்த்தலாம். கோவர்த்தனமும் அவற்றுள் ஒன்று என்கிறார் கிருஷ்ணர்.

## 331. ஈரிரண்டிகழ்ந்தும் இறைக்கே வாழ்.

நாலு புருஷார்த்தங்களையும் இகழ்ந்துவிட்டு, பகவானுக்கே ஜீவிதத்தை ஸமர்ப்பி.

> अवधीर्य चतुर्विधं पुमर्थं
>
> भवदर्थे विनियुक्तजीवितस्सन् ।
>
> लभते भवतः फलानि जन्तुः
>
> निखिलान्यत्र निदर्शनं जटायुः ॥
>
> – பரமார்த்தஸ்துதி.

திருப்புட்குழி எம்பெருமானைத் துதிக்கையில் நமக்கொரு முக்கிய அறிவுரை:

> தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், என்கிற நாலையுமே இளப்பமாக நினைத்து, பகவானே! உமக்காகவென்றே வாழ்க்கையை அர்ப்பணிக்கிறவன் எல்லாப் பயன்களையும் உம்மிடமிருந்து பெறுகிறான் என்பதற்கு ஜடாயு நிதர்சனமாக நிற்கிறார்.

நம்மில் சிலர் பொருளையும் இன்பத்தையும் பெரிதாகக் கருதி லௌகிக வாழ்க்கை நடத்துவர். அதைவிட மேம்பட்டவர் அறத்தைப் பெரிதாகக் கொள்வர். அதற்கும் மேலான

முமுக்ஷுக்களோ மோக்ஷம் ஒன்றையே பெரிதாகக் கருதுவர். ஆனால் இதற்கும் மேலொரு படியில் நின்றார் ஜடாயு. தனக்கென்று எந்தப்பேற்றையுமே கருதவில்லை. ராமனுக்காக உயிர் துறந்தார். ஆனால் அவருக்கு ராமரின் கருணையால் நற்கதி (கேட்காமலே) கிடைத்தது. இதிலிருந்து என்ன தெரிகிறது. நாம் நாலு புருஷார்த்தங்களையுமே இகழ்ந்து பகவத்கைங்கரியம் பண்ணினால், இறைவனுக்காகவே நம் வாழ்க்கையை அர்ப்பணித்தால், நாம் கேட்காமலே எல்லாப் புருஷார்த்தங்களும் கிடைத்துவிடும்.

## 332. ஈரிருமுகனின் பதமும் பாழ்.

நான்முகனின் பதவி கூடப் பிரகிருதிக்குட்பட்டதே யாதலால் விரும்பத்தக்கதன்று.

> सद्यस्त्यजन्ति वरद त्वयि बद्धभावाः
>
> पैतामहादिषु पदेष्वपि भावबन्धम् ।
>
> कस्मै स्वदेत सुखसञ्चरणोत्सुकाय
>
> कारागृहे कनकशृङ्खलयापि बन्धः ॥
>
> – வரதராஜபஞ்சாஶத்.

ஏன் பிரம்மபதவி கூடப் பாழ் என்பதைத் திருஷ்டாந்தத்துடன் விளக்குகிறார்.

> வரதனே! உன்னிடம் மனம் கட்டுண்டவர்கள் சதுர்முகப்பதவி முதலியவற்றையும் வேண்டாமென்கிறார்கள்; உடனே த்யஜிக்கிறார்கள். சுதந்திரமாக நடமாட விரும்புபவனுக்கு, தங்க விலங்கிட்டுச் சிறையடைத்தாலும் ருசிக்குமோ?

சிறை போன்றது ஸம்ஸாரமண்டலம். இதில் பிரம்மா முதல் தாவரம் வரை எல்லோரும் கட்டுண்டவர்களே. சிலருக்குப் பொன் விலங்கு; சிலருக்கு இரும்பு விலங்கு; என்றெல்லாம் பேதம் இருக்கலாம்; அதாவது இந்தச் சிறைச்சாலைக்குள்ளேயே சிலர் ஐச்வர்யம் படைத்தவர்களாயும், வேறு சிலர் எடுபிடியாட்களாகவும் இருக்கலாம். ஆனால் சிறையில் கட்டுண்டிருப்பது எல்லாருக்கும் பொது. சுதந்திர விரும்பிகளான முமுக்ஷுக்களுக்கு இது பிடிக்காது. விலங்கு எந்த உலோகத்தால் ஆனது என்பதா முக்கியம்? விலங்கே இல்லாமல் இருப்பதல்லவா முக்கியம்? ஆகையால் அவர்கள் பிரகிருதிஸுகங்களுக்குள் ப்ரகிருஷ்டமானவற்றையும் சீந்துவதில்லை. எம்பெருமான் ஒருவனிடமே ஈடுபடுகிறார்கள்.

கடந்த நாலு அறிவுரைகளையும் சேர்த்துப் படிப்போம்.

- ஈறுவரை நல்வாழ்க்கை வாழ்.
- ஈதிகளில்லா இடத்தில் வாழ்.
- ஈரிரண்டிகழ்ந்தும் இறைக்கே வாழ்.
- ஈரிருமுகனின் பதமும் பாழ்.

## 333. ஈராறெண்ணித் திருமணிடு.

எண்ணிக்கையில் பன்னிரண்டான திருமணை, கேசவாதியர் பன்னிருவரைத் தியானித்து இட்டுக்கொள்ள வேண்டும். (எண்ணி என்பதற்கு இரண்டு அர்த்தங்கள்.)

पारमेष्ठ्यसंहितायाम्

धृतोर्ध्वपुण्ड्रो विधिवत् नामानि द्वादश न्यसेत्।

नमोन्तान्यञ्जलिं कुर्यात् नामान्युक्त्वा यथाक्रमम्॥

*— ஸச்சரித்ரரக்ஷா.*

திருமண்களின் எண்ணிக்கை, வரிசைக்கிரமம், மந்த்ரம், இவற்றை யெல்லாம் அறிவிக்கிறார்.

> விதிப்படி ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்தபிறகு பன்னிரண்டு திருநாமங்களை அந்தப் பன்னிரண்டு திருமண்களில் ந்யாஸம் பண்ணவேண்டும். ஒவ்வொரு திருநாமத்தையும் நம: என்ற பதத்தால் முடிக்கவேண்டும். ஒவ்வொரு தடவையும் கைகூப்ப வேண்டும். வரிசை மாறாமல் பண்ணவேண்டும். என்று பாரமேஷ்ட்யஸம்ஹிதையில் காண்கிறோம்.

இதே ஸச்சரித்ரரக்ஷையிலும் பன்னிருநாமப்பாட்டிலும் ஸ்வாமி தேசிகன் சாதித்தபடி, பன்னிரண்டு திருமண்களுக்கான பன்னிரண்டு திருநாமங்கள் வருமாறு: நெற்றியில் கேசவன். வயிற்றில் நாராயணன். மார்பில் மாதவன். கழுத்தில் கோவிந்தன். வயிற்றின் வலது புறத்தில் விஷ்ணு. வலது கையில் மதுஸூதனன். கழுத்தின் வலது புறத்தில் த்ரிவிக்ரமன். வயிற்றின் இடது புறத்தில் வாமனன். இடது கையில் ஸ்ரீதரன். கழுத்தின் இடது புறத்தில் ஹ்ருஷீகேசன். முதுகில் பத்மநாபன். பின்கழுத்தில் தாமோதரன்.

## 334. ஈசனையேற்கார் நெறியை விடு.

கடவுளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் காட்டுகின்ற வழியில் போக வேண்டாம்.

ईश्वरापह्नोतॄणां आचारो नास्थेय इति प्रागेवोक्तम्।

*— தத்வடீகா*

ஸ்ரீபாஷ்யத்தில் அகிலபுவந என்று தொடங்கும் மங்களச்லோகம் எதற்காக என்கிற விசாரம் தத்வடீகையில் நடக்கிறது. அங்கே இந்த வாக்கியம்.

> கடவுளை ஏற்றுக்கொள்ளாதவர்களின் பழக்கவழக்கங்களை நாம் பின்பற்றக்கூடாது. இதை நாம் முன்னமே சொல்லியுள்ளோம்.

சில ப்ராசீன மீமாம்ஸாக்ரந்தங்களில் மங்களச்லோகம் ஆரம்பத்தில் இல்லை. த்ரமிடபாஷ்யம் முதலியவற்றிலோ முதல் வாக்கியம் மங்களவாக்கியமாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில்

ஸ்வாமி தேசிகனின் அறிவுரை இது. கடவுளை ஒப்புக்கொண்டவர்களின் ஆசாரமே நமக்கு உபாதேயம். இந்த விஷயத்தில் மட்டுமின்றி, மேலும் பலவற்றிலும் இவ்வாறே.

## 335. ஈரிருவாசல் காவலிடு.

உடலின் நாலு த்வாரங்களைக் காவலில் வை.

> चत्वारि यस्य द्वाराणि सुगुप्तानि मनीषिणः।
>
> उपस्थमुदरं पाणिः वा क्चतुर्थी स वै पुमान्॥
>
> இத்யாதிகளில் சொன்ன அவதாநவிஶேஷம் உடையவனாய்
>
> – *ரஹஸ்யரத்நாவளிஹ்ருதயம்.*

நம் உடலிலுள்ள பல த்வாரங்களில் நான்கு பெரும்பாவங்களில் இழுப்பவையாதலால் அவற்றைக் காவலில் வைக்கவேண்டுமென்கிறார் பதினாலாம் வாக்கியத்து விரிவில்.

> எந்த புத்திசாலிக்கு உபஸ்தம், வயிறு, கை, வாய், என்கிற நாலு துவாரங்களும் நன்றாகக் காவல் காக்கப்படுகின்றனவோ, அவனே ஆண்மகன்.

கையைத் துவாரம் என்பது சரியா? அங்கே ஓட்டை இல்லையே? என்றால் த்வாரம் என்பதற்கு வேறொரு அர்த்தம். எதன் வாயிலாகப் பணி நடைபெறுகிறதோ அது த்வாரம். உபஸ்தத்தின் வாயிலாக ஆண்பெண்புணர்ச்சியும், உதரத்தின் வாயிலாக உணவுட்கொள்ளலும், கையின் வாயிலாக எடுத்தல் பிடித்தல் முதலிய பணிகளும், வாயின் வாயிலாகப் பேசுவதும் நடைபெறுவதால் இந்த நான்கும் த்வாரங்களாம். மேலும் சில துவாரங்களைச் சொல்லாமல் நாலை மட்டும் சொல்வானேன் என்றால், இந்த நாலின் வழியான காரியங்களில் புண்ணியபாவங்கள் பெரும்பாலும் நடைபெறுவதாலாம். (காது , மூக்கு, முதலிய துவாரங்களால் நடைபெறும் குற்றங்கள் குறைவேயன்றோ?) மைதுனம், சாப்பாடு, கைகலப்பு, பேச்சு, என்ற இந்த நாலிலும் குற்றங்கள் நேர வாய்ப்பு அதிகமாதலால் இந்த நாலு த்வாரங்களையும் காவலில் வைக்க வேண்டும் என்கிறார். "காவலில் புலனை வைத்து" என்று தொண்டரடிப்பொடி ஆழ்வார் கூறியதும் இதே வகையிலாம். காவலில் வைப்பதாவது, பட்டி மேயாமல் கட்டுப்படுத்துவது, சாத்திர விதிகளுக்கு உட்படுத்துவது, நம் வசத்தில் வைத்திருப்பது, என்பனவாம். உதாரணமாக வயிற்றைக் காவலில் வைப்பது என்பது ஆஹாரநியமங்களை மேற்கொள்வது என்று பொருள்படும்.

## 336. ஈர்ப்பதன் வேரை வெட்டி விடு.

இழுபடாமல் இருப்பதற்கு உபாயம் என்னவென்றால், இழுப்பதன் வேரை வெட்டிவிடுவதாகும்.

> अहार्यो विविधैर्भोगैः आकर्षन् विबुधानपि।
>
> अपरिच्छिन्नमूलोसौ ससारस्सर्वदुःखकृत्।।

– *யாதவாப்யுதயம்.*

கோவர்த்தன மலைக்குப் பூஜை பண்ணுவதன் அவசியத்தைக் கிருஷ்ணர் கூறுகிறார். மலைக்கும் ஸம்ஸாரத்துக்கும் சிலேடையோடு ஸமாஸோக்தியாகச் சொல்லும் ச்லோகம் இது. முதல் அர்த்தம்:

> இந்த மலை விதவிதமான போகங்களால் அமரர்களையும் தன் பால் ஈர்ப்பது. இதற்கு மூலப்பகுதி (குரைக்குள்) அளவுக்கடங்காமல் பெரிதாய் இருக்கிறது. இது ஸாரங்களுடன் கூடியது. எல்லாத் துக்கத்தையும் அறுப்பது.

இதே ச்லோகத்துக்கு, விபுதாந், அஹார்ய:, பரிச்சிந்ந, க்ருத், என்ற பதங்களுக்கு வேறு அர்த்தம் கொள்ளும்போது தாத்பர்யமே வேறாகிறது. ஸஸார என்பதில் ஒரு பிந்துவைச் சேர்த்து ஸம்ஸார என்று மாற்றியிருக்கலாமே என்று தோன்றும்படி, கனகச்சிதமாக இரண்டாம் அர்த்தமும் பொருந்துகிறது:

> இந்த ஸம்ஸாரம் நானாவிதமான போகங்களால் வித்வான்களைக்கூடத் தன்பால் ஈர்க்கிறது. அனுபவித்து மாளாது. இதன் வேரை வெட்டாவிடில் எல்லாத் துக்கத்தையும் விளைவிப்பது இது.

இந்த இரண்டாம் அர்த்தத்தில் நமக்குத் தேவையான நீதி இருக்கிறது. போகங்களை அனுபவித்து மாளச்செய்து துக்கத்திலிருந்து தப்ப முடியாது. துய்க்கத் துய்க்கத் தாகம் மேலிட்டுத் துக்கமும் பெருகும். அதிலிருந்து தப்ப வழி அதன் வேரை அறுப்பது தான். அதன் வேர் முன்வினை என்றோ பகவந்நிக்ரகம் என்றோ ஒன்று. அதைப் பக்தியாலோ ப்ரபத்தியாலோ அறுத்தாலொழிய எல்லாத் துக்கமும் அறுபடாதிருக்கும். இந்த நீதியை ஸ்வாமி முக்கியமாகக் கருதுவதால் கோவர்த்தன வருணனையில் நயம்பட நுழைத்துவிட்டார். ஈர்ப்பதன் வேரை நாலாபக்கத்திலும் வெட்டிவிடுவோம். பிறகு ஈர்ப்பிலிருந்து விடுபட்டுத் துக்கத்துக்கும் முடிவு கட்டலாம். வேரை வெட்டாமல், கிளைகளை மட்டும் கழித்துக் கொண்டிருந்தால் பயன் ஏற்படாது.

இதுகாறும் பார்த்த நாலு அறிவுரைகளின் ஸாரம் வருமாறு:

- ஈராறெண்ணித் திருமணிடு.
- ஈசனையேற்கார் நெறியை விடு.
- ஈரிருவாசல் காவலிடு.
- ஈர்ப்பதன் வேரை வெட்டி விடு.

## 337. ஈடுபடுத்துளம் இறைவன் பால்.

உள்ளத்தைப் பகவானிடம் ஈடுபடுத்த வேண்டும்.

मय्यावेश्य इत्यत्र उपासनानन्यथानुपपत्तिलभ्यविषयीकरणमात्रपरत्वे निष्प्रयोजनत्वात् अक्षरनिष्ठस्यापि उपायतया भगवति चित्तावेशसाम्यात् तद्व्यवच्छेदार्थमाह प्राप्यविषय मिति।

– *தாத்பர்யசந்த்ரிகா.*

என்னிடம் மனதைப் புகுத்து என்கிறான் கண்ணன். இதற்கு உரையிடும் எம்பெருமானார் ப்ராப்யவிஷயமாக என்றொரு அதிகப்படி பதத்தைச் சேர்க்கிறார். கிருஷ்ணனையே அடையும் லக்ஷ்யத்துடன் மனதைச் செலுத்த வேண்டுமாம். உபாஸநம் பண்ணுவதென்றாலே, பகவான் விஷயமான தியானமாதலால் பகவானிடம் மனதைப் புகுத்தியதாகும். அதோடு நின்றுவிட்டால் பயனில்லை. கைவல்யார்த்தி கூட அதை அடையும் உபாயமாக உபாஸநம் பண்ணும்போது பகவானிடம் மனத்தைப் புகுத்துவான். அதிலிருந்து வாசி தோற்றுகைக்காக, பகவானை அடைவதற்காகப் பகவானிடம் மனதைப் புகுத்தவேண்டும் என்கிறார்.

நாம் பகவானை அடையும் குறிக்கோளுடன் பகவானிடம் மனதை ஈடுபடுத்தவேண்டும்.

## 338. ஈங்கும் பயன்பெறு கீர்த்தனையால்.

கீர்த்தனை பண்ணினால் இம்மைப்பலன், மறுமைப்பலன், என்ற இரண்டுமே கிடைக்கும்.

बोधायनीये पुराणसारसमुच्चये प्रोक्तम्।

देवताया गुरोस्चापि मन्त्रस्यापि प्रकीर्त्तनात्।

ऐहिकामुष्मिकी सिद्धिः द्विजस्यास्ते न संशयः॥ इति।

– *ஸ்தோத்ரபாஷ்யம்.*

ஆளவந்தார் ஸ்தோத்ரத்தின் முதல் ச்லோகத்து உரையிலேயே இதை அருளிச்செய்கிறார்:

> பகவானைக் கீர்த்திப்பது, ஆசாரியனைக் கீர்த்திப்பது, மந்த்ரத்தைக் கீர்த்திப்பது, என்ற மூன்றுவிதக் கீர்த்தனைகளால் த்விஜன் இருமைப்பயனடைவான். ஐஹிக ஸித்தி (இவ்வுலகப்பயன்) , ஆமுஷ்மிக ஸித்தி (வேற்றுலகப்பயன்), இரண்டையும் பெறுவான். இதில் சந்தேகம் இல்லை.

அதனால் தான் பகவானைக் கீர்த்திக்கத் தொடங்கிய ஆளவந்தார் முதலில் ஆசார்யனைக் கீர்த்திக்கிறார். நாமும் கீர்த்தித்து இங்கும் அங்கும் பயன் பெறுவோம்.

## 339. ஈனர் சரணாகதக்கொலையால்.

தன்னைப் புகலடைந்தவனையே கொல்பவன் மிகவும் ஈனனாம்.

अपि चेत्सुदुराचारः केनापि नरकात्पुमान्।
मुच्यते न तु पापात्मा शरणागतहिंसकः। इति।

*— ஸ்தோத்ரபாஷ்யம்.*

ந நிந்திதம் கர்ம என்ற ச்லோகத்து வியாக்கியானத்தில் பழிக்குரிய செயலுக்கு உதாரணமாக இதைக்கூறுகிறார்:

> மிகக்கெட்ட நடத்தை கொண்ட மனிதனும் எந்த நரகத்திலிருந்தும் விடுபடலாம்; ஆனால் சரணாகதனைக் கொன்றவன் பாபாத்மா; பாவமே உருவானவன். நரகாநுபவம் இல்லாமல் விடுபடவே மாட்டான்.

தப்புக்காரியங்களில் சில சாதாரணமானவை; சில தீவிரமானவை. சாதாரணமானவற்றுக்கு ஏதேனும் ஒரு கழுவாய் மூலமாக நரகத்திலிருந்து விடுபடும் வழி இருக்கலாம். ஆனால் சரணாகதக்கொலை மிகக்கெட்ட செயலாக இருப்பதால் இதற்கு அத்தகைய கழுவாயே கிடையாது. நரகத்திலிருந்து தப்பமுடியாது. நம்மை அடைக்கலம் புகுந்தவனை நாம் கொல்லக்கூடாது.

## 340. ஈங்கிவள் நிறைகாப்பு அவனருளால்.

நம் நிறையைக் காப்பது கூட நம்மாலாகாது; அவனே கதி என்ற நிலையடைந்து புகலடை.

திருவிருத்தத்தில் "இறையோ இரக்கினும் ஈங்கோர் பெண்பால் . . . நிறையோ இனியுன் திருவருள் அன்றிக் காப்பரிதால்" என்ற வரியை மேற்கோளெடுத்துக்கூறும் அறிவுரை இது. ஈங்கு, நிறை, காப்பு, முதலிய பதங்கள் இங்கிருந்து இவ்வறிவுரையின் தலைப்புக்கு வந்துள்ளன.

"உன் திருவருளன்றிக்காப்பரிதால்" என்றிருக்கும் அதிகாரிக்கு அநுஷ்டேயமான ஶரணவரணம்"

*— பரமபதஸோபாநம்.*

நிறை என்பது பெண்மைக்குரிய பண்பு. புருஷோத்தமனோடு உறவில் நாமனைவரும் பெண்கள். நம்முடைய நிறை அழியாதிருக்க வேண்டுமானால், அதைக்காத்துக்கொள்ள அவன் திருவருளன்றி வேறு வழியில்லை என்ற துணிபு எவனுக்கு இருக்கிறதோ, அவனே சரணாகதி பண்ணுவதற்கு அதிகாரி. இந்த அளவுக்குக் கதியற்றுக் கலங்கிப் பிரார்த்திப்பது அவசியம். இந்த ஆகிஞ்சந்ய பரிஸ்திதி ஏற்படாவிட்டால் ப்ரபத்திக்குத் தகுதி இல்லாமல் போகும்.

இதுவரை பார்த்த நாலு அறிவுரைகளைச் சேர்த்துப் படிப்போம்.

* ஈடுபடுத்துளம் இறைவன் பால்.
* ஈங்கும் பயன்பெறு கீர்த்தனையால்.
* ஈனர் சரணாகதக்கொலையால்.
* ஈங்கிவள் நிறை காப்பு அவன் அருளால்.

## 341. ஈடாம் உத்தமர் மணிகட்கு.

நல்லோரை ரத்தினங்களுக்குச் சமமாக மதிக்கவேண்டும்.

> छिद्रं जनयतां नीचैः अच्छिद्रं बिभ्रतामपि ।
> त्रासहीनास्सुमणयः स्वभावादुपकुर्वते ॥
>
> – *ஸுபாஷிதநீவி.*

ஸமசித்த பத்ததியில் அந்யாபதேசமும் ச்லேஷமும் சேர்த்துச் சொன்ன ச்லோகம் இது. முதல் அர்த்தம் வருமாறு:

> நல்ல மணிகள் த்ராஸம் என்னும் தோஷம் இல்லாதவை. அவற்றைச் சிலர் அடியில் துளையிட்டுக் கோர்த்து அணிகிறார்கள். வேறு சிலர் துளையிடாமலே அணிகிறார்கள். இவ்விரு சாராருக்குமே அம்மணிகள் இயல்பாகவே அலங்காரத்துக்கு உதவும்.

இதே ச்லோகத்துக்கு இன்னொரு அர்த்தம் வருமாறு:

> உத்தமர்கள் பயம் இல்லாதவர்கள். அவர்களுக்குச் சிலர் கலகம் விளைவிக்கிறார்கள். இன்னும் சிலர் கலகமில்லாமல் தாங்குகிறார்கள். இவ்விரு சாராருக்குமே ஸஹஜமாகவே உதவுகிறார்கள் அந்த உத்தமர்கள்.

அவர்கள் ஸமசித்தர்கள். எல்லாருக்கும் உதவுவார்கள். தமக்குத் தீங்கு செய்தவருக்கும், தீங்கேதும் செய்யாதவருக்கும், இரு சாராருக்குமே உதவுவார்கள். உதவுவதே அவர்களது இயல்பு. இந்த ச்லோகத்தில் உத்தமர்களுக்கும் ரத்தினங்களுக்கும் பல ஒப்புமைகள் சொல்லப்பட்டுள்ளன. த்ராஸமின்மை என்பது முதலாவது. ரத்நதோஷம் இல்லாமை, பயநடுக்கம் இல்லாமை, என்று இரண்டு அர்த்தங்கள் இருப்பதால், இது இரண்டுக்கும் பொதுவான பண்பாகிறது. மணிகளை நூலில் கோர்ப்பதற்காக ஊசியால் குத்துவார்களே, அது போல உத்தமர்களையும் ஹிம்ஸிப்பவர்கள் பலர். இந்த உபத்ரவம் இரண்டுக்குமே நீசை: நடக்கிறது என்பது இன்னொரு ஒப்புமை. நீசை: என்பதற்கு, கீழ்ப்புறமாக என்றும், இழிந்த மக்கள் மூலம் என்றும் இரண்டு அர்த்தங்கள் இருப்பதால் இந்த இரண்டாவது ஒப்புமையும் கச்சிதமாகிறது. துளை போடுவது என்பதற்கும் ஆப்பு வைத்துப் பிளப்பது என்பதற்கும், கலகத்தை விளைவித்து ஒற்றுமையைக் குலைப்பது என்ற தாத்பர்யமும் கிடைப்பதால், இது பொருந்துகிறது. இது ஒருபுறமிருக்க இரண்டுக்கும் மதிப்பறிந்த பலர் பரிப்பதும் (தாங்குவதும்) உண்டு. பரிப்பது என்பதற்குப் பூணுவது என்றும் பேணுவது என்றும் இரண்டு அர்த்தங்கள் இருப்பதால், இந்த மூன்றாம் ஒப்புமையும் பொருந்துகிறது.

அச்சித்ரமாகப் பரிப்பதாவது, ஓட்டைபோடாமலே அணிந்துகொள்வது என்றும், இடைவெளியே இல்லாமல் ஸதா பேணுவது என்றும் பொருள்படுவதால், மேலும் உறுதிப்படுகிறது இந்த மூன்றாம் ஸாத்ருச்யம். நாலாவதாக ஒன்று. இருவருமே ஸ்வபாவத்தால் உதவுவார்கள் என்பதும். உத்தமர்கள் உதவுவதையே ஸ்வபாவமாகக் கொண்டவர்கள்; இயல்பாகவே உபகாரிகள். மணிகளும் இயல்பாகவே அழகூட்ட உதவும்; ஸ்வ—பாவாத் என்று பிரித்தால், தன் இருப்பாலேயே உதவிவிடும்; இதுவும் இரு பக்ஷத்திலும் பொருந்தும். ஐந்தாவதாக ஒன்று. தன்னை ஊசியால் குத்தி அணிந்தவர்க்கும், தன்னைக் குத்தாமலே ஆபரணமாக முழுதாக அணிந்தவர்க்கும் மணிகள் வாசி பாராமல் அழகைக் கூட்டித்தரும். அது போலவே நல்லோரும், தன்னை ஹிம்ஸித்தவர்களுக்கும், தன்னைத் தாங்கியவர்க்கும், இரு சாராருக்குமே இயல்பாகவே உபகாரங்களைப் பண்ணுவார்கள். இப்படி ஐந்து வகைகளாலும் உத்தமர்கள் மணிகளுக்கு ஈடானவர்கள். இந்த ச்லோகத்து நீதிகள் ஆறு: 1. உத்தமர்களுக்கு உபத்ரவங்கள் பண்ணுபவர்கள் நீசர்கள்; நாம் பண்ணக்கூடாது. 2. உத்தமர்களைப் பேணிக்காத்துப் புரஸ்கரிப்பது நல்லது. 3. உத்தமர்கள் அச்சமற்றவர்கள். 4. அவர்கள் பிறருக்கு உதவுவதையே தம் இயல்பாகக் கொண்டவர்கள். நாமும் அவ்வாறு ஆகவேண்டும். 5. எல்லாருக்குமே உதவுவார்கள்; தமக்குத் தீங்கிழைத்தவர்களுக்கும் கூட; நாமும் ஸமசித்தர் ஆகவேண்டும். ஸர்வருக்கும் உபகாரங்களைப் பண்ணவேண்டும். 6. உத்தமர்கள் இருந்தாலே போதும்; நன்மைகள் விளையும்.

## 342. ஈடாசை பகை திமிர் பேய்க்கு.

ஆசை, பகை, திமிர் என்ற மூன்றும் பேய் போன்றவை; விரட்டியடிக்கவேண்டும்.

> रागद्वेषमदादिकैरिह महारक्षोभिरक्षोभिते
>
> — *ரஹஸ்யத்ரயஸாரம்.*

ப்ரபாவரக்ஷாதிகாரத்தின் கடைசி ச்லோகத்து முதல்வரி இது.

> ஆசை, பகை, திமிர், முதலிய மஹாரக்ஷஸ்ஸுகளால் கலக்கம் அடையாதவனிடத்தில்

ராகத்வேஷமதங்களைப் பெரிய பிசாசுக்களாகச் சொல்கிறார். வெளிப்படையாகக் காரணம் எதுவும் சொல்லவில்லை. உருவகத்தை மட்டும் சொல்லி நிறுத்திவிட்டார். நமக்குள்ளே புகுந்து கொண்டு ஆட்டி வைப்பதாலும், எளிதில் விரட்டமுடியாதபடி இறுக்கப் பற்றிக்கொள்வதாலும், நம் உரிமைகளைப் பறித்துத் தமக்கு அடிமையாக்கிக் கொள்வதாலும், நமக்குப் பெரும் தீங்கிழைப்பதாலும், ஆசைப்பேய், பகைப்பேய், திமிர்ப்பேய், என்கிற உருவகம் பொருத்தமானது. இந்த ரக்ஷஸ்ஸுகளுக்கு வசப்பட்டு நாம் சீரழியக்கூடாது.

## 343. ஈடாம் உடலமும் ஆடைக்கு.

உடை மாற்றுவது போல உடல் மாற்றலைக் கருது; மரணத்துக்கு அஞ்சாதே.

मानुषादिशरीरविलयसमनन्तरं अभिनव वसनपरिधानवत् अनिमिषदेहादिसङ्ग्रहं

– *தாத்பர்யசந்த்ரிகா.*

பகவத்கீதையில் வாஸாம்ஸி ஜீர்ணாநி என்கிற ச்லோகத்துப் பாஷ்யத்துக்கு அவதாரிகையில் ஒரு சந்தேகத்தைக் கிளப்பிக் கொள்கிறார். உடலை உடை போலக் களைவதாகச் சொன்ன திருஷ்டாந்தத்தை ஒப்புக்கொண்டாலும் கூட இதற்கு அடுத்ததாகக் கிடைக்கும் உடை நல்லதாகப் புதியதாக இருக்கும் என்ற நிச்சயம் உண்டா என்று கேட்டுக்கொண்டு விடையிறுக்கிறார். தர்மயுத்தத்தில் வீரமரணம் எய்தினவர்களுக்கு அது நிச்சயம் என்று பதில். இந்த ஆசங்கையை விளக்கும் வாக்கியம் இது.

மனிதர் முதலிய சரீரம் நசித்தவுடன் புத்தாடை உடுப்பது போலே தேவர் முதலிய சரீரத்தை ஏற்றல்.

இங்கு நமக்கு நீதி என்னவென்றால், மரணத்துக்கடுத்த பிறவி இதை விட நல்லதாக அமைய முயற்சி பண்ணு. அது தற்பொழுது உடுத்தியுள்ள உடையைக் களைந்துவிட்டு நல்லதொரு புத்தாடை பெறுவதற்கொப்பாம். உடலை உடைக்கு ஒப்பிடுவது எப்படித் தகும் என்றால், உடை போல உடலும் நாளாக நாளாகப் பழுதுபடுவதாலும், ஒருவனுக்குப் பல உடைகள் வெவ்வேறு நாட்களில் அமைவது போல, ஒரு ஆத்மாவுக்கு வெவ்வேறு உடல்கள் வெவ்வேறு பிறவிகளில் அமைவதாலும், உடை மாற்றுவதில் துயரடையாதது போல உடல் மாற்றுவதிலும் கவலைப்படவேண்டாம் என்கிற நீதியை இப்போது சொல்வதாலும், உடலுக்கு உடை போல ஆத்மாவுக்கு உடல் தாற்காலிகத் தொடர்பு கொண்டிருப்பதாலும், இந்தத் திருஷ்டாந்தம் பொருத்தமானதாம். அடுத்த உடை புதிய நல்ல உடை என்பது போல, அடுத்த உடல் இதைவிடச் சிறந்ததாக தேவாதிகளுடையதாக அமைத்துக்கொள்ள முயல வேண்டும், அர்ஜுநா! அது தர்மயுத்தத்தால் நிறைவேறும். யுத்தத்தால் மரிக்கும் மற்றவரைப் பற்றியும் கவலை வேண்டாம். அவர்களும் புத்தாடை தரிக்கப் போகிறவர் போலவாம்.

## 344. ஈடாம் சொர்க்கம் நரகுக்கு.

நரகத்தை விரும்பாதது போல் சொர்க்கத்தையும் விரும்புவதற்கில்லை.

अपि पद्मयोनिरवशो भजते मधुकैटभादिजनिता विपदः।

इति दृष्टदोषनिवहः पुरुषः न वहेत नाकनरकेषु रतिम्॥

– *ஸங்கல்பஸூர்யோதயம்.*

கடைசியான பத்தாவது அங்கத்தில் விஷ்ணுபக்தி என்பவள் ஸங்கல்பன் என்பவனிடம் இதைக்கூறுகிறாள்.

முன்பொருமுறை மதுகைடபர்களால் பிரம்மதேவனுக்கும் விபத்து ஏற்பட்டது. அப்போது நான்முகன் அவசனானான்; தன் வசமிழந்தான்; செய்வதறியாது

விழித்தான். இவ்வாறெல்லாம் தோஷங்களின் குவியலைக்காண்பவன் நாகத்திலும் (சொர்க்கத்திலும்) நரகத்திலும் ஆசை வைப்பதில்லை.

நாகமும் நரகமும் ஒருவகையில் துல்யம் தான். இன்பநிலமும் துன்பநிலமும் எப்படித் துல்ய மாகும் என்று கேட்டால், இரண்டிலும் துன்பங்கள் மலிந்து இருப்பதாலும், இரண்டும் பிரகிருதிமண்டலத்துக்கு உட்பட்டிருப்பதால், பெருந்துயரங்கள் பிற்காலத்தில் வரக்கூடுமாதலாலும், தற்பொழுதுள்ள நிலையற்ற இன்பம் ஒரு சிறிதே வாசியைக் கொண்டிருப்பதாலும், சுவர்க்கமும் நரகத்துக்கு ஒப்பானதே என்று இவளுடைய கருத்து.

கடந்த நாலு அறிவுரைகளில் எது எதற்கு ஈடாகும் என்று சொன்னதைச் சேர்த்துப் படிப்போம்.

- ஈடாம் உத்தமர் மணிகட்கு.
- ஈடாசை பகை திமிர் பேய்க்கு.
- ஈடாம் உடலமும் ஆடைக்கு.
- ஈடாம் சொர்க்கம் நரகுக்கு.

## 345. ஈன்றவள் தந்தையை விடவும் மேல்.

தந்தையை விடத் தாய் உயர்ந்தவள். அதற்கேற்ப நடந்துகொள்.

पितुश्शतगुणं माता गौरवेणातिरिच्यते।

इत्यादिषु मातुर्गौरवं प्रतिपादितम्।

*– ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.*

மாதா பிதா என்ற ச்லோகத்து வியாக்கியானத்தில் இக்கருத்தைக் கூறுகிறார்.

> தந்தையைக் காட்டிலும் நூறுமடங்கு கௌரவத்தால் உயர்ந்தவளாகிறால் தாய். இது முதலான ப்ரமாணவசனங்களில் அன்னையின் மேன்மை பறைசாற்றப்பட்டது.

நாம் தாய் தந்தையரை வணங்கவேண்டும். அவ்விருவருள்ளும் தாய் மேம்பட்டவள். பலமடங்கு மேம்பட்டவள். அவளை வணங்குவது முக்கியம்.

## 346. ஈறே வேதங்களிலே மேல்.

அளவற்ற வேதங்களுக்குள் முடிவான உபநிஷத்து உயர்ந்ததாகும்.

| |
|---|
| அதில் परावरतत्वहितपुरुषार्थங்களில் अन्यथासिद्धप्रमाणान्तर ங்களால் வரும் கலக்கங்களை யெல்லாம் தீர்க்கவல்ல வேதாந்தம் ப்ரதாநம். *— ப்ரதாநசதகம்.* |

இந்நூலில் கூறிய நூற்றொன்று பிரதானங்களில் இது இரண்டாவதாகும்.

> அந்த வேதத்தில் உயர்ந்த தத்வம், தாழ்ந்த தத்வம், உயர்ந்த ஹிதம், தாழ்ந்த ஹிதம், உயர்ந்த புருஷார்த்தம், தாழ்ந்த புருஷார்த்தம், இவை தெளிவாகப் புரியாதபோது, வேதத்தை அடியொற்றிய வேறு ப்ரமாணக்ரந்தங்களை நாடும்போது, அவற்றுள் சில அந்யதாஸித்தங்களாகி (வேறு வகையில் தாத்பர்யம் கொண்டதாகி) கலக்கங்களை ஏற்படுத்தும்போது, அந்தக் கலக்கங்களையெல்லாம் தீர்க்கவல்லது உபநிஷத்தாகையால் அது ப்ரதானம்.

வேதாந்தம் என்ற பதத்துக்கு வேதத்தின் ஈற்றுப்பகுதி என்று அர்த்தமாதலால் வேதத்தில் வேதாந்தம் ப்ரதாநம் என்றது சரியாகும். இங்கு வேதாந்தம் என்றது உபநிஷத்தை. வேதத்தில் ஸம்ஹிதை என்றும், ப்ராஹ்மணம் என்றும், உபநிஷத்து என்றும் பல பகுதிகள் உள்ளன. அவற்றுள் கடைசியான உபநிஷத்து முக்கியம். அதற்கான காரணத்தை இவ்வாக்கியத்தில் அருளியிருக்கிறார். "வேதாந்த விஜ்ஞாந ஸுநிஶ்சிதார்த்தா:" என்று ஒரு உபநிஷத்தே சொன்னபடி உபநிஷத்தின் அர்த்தம் கலக்கமேற்படுத்தாமல் தீர்மானித்ததாக இருக்கிறது. நாம் உபநிஷத்துகளை மேலாய்க்கொள்வோம்.

## 347. ஈரிரு மறையினும் பாரதம் மேல்.

நான்கு வேதங்களைக் காட்டிலும் மஹாபாரதம் உயர்ந்தது. அதை முக்கியமாகக் கொள்ளுங்கள்.

| |
|---|
| न्यासोपासनादिरूपसर्वशास्त्रार्थोपबृह्मण ங்களில் चत्वार एकतो वेदा भारतं चैकमेकतः என்னும்படி நிற்கிற மஹாபாரதம் ப்ரதாநம். *— ப்ரதாநசதகம்.* |

பிரதானமாகச் சொன்ன நூற்றொன்றில் இது நாற்பதாவது. ந்யாஸம் என்கிற சரணாகதி, உபாஸநம் என்கிற பக்தியோகம், இதுமுதலான எல்லாச் சாத்திரப் பொருள்களையும் தெளிவிக்கும் நூல்களுக்குள், "நான்கு வேதங்களும் ஒரு பக்கம், மஹாபாரதம் ஒன்று மட்டும் இன்னொரு பக்கம்" என்று சொல்லும்படி நிற்கிற மஹாபாரதம் முக்கியமாகும். வேதத்தை விட உயர்ந்ததாக மஹாபாரதத்தைக் கூறலாமோ? அதுவும் மஹாபாரதத்திலேயே இப்படித் தானே சொல்லிக்கொள்ளலாமோ? என்று கேட்டால், த்ரைவர்ணிகரல்லாதாரையும் சேர்த்து ஸர்வரும் அதிகரிக்கத் தகுதி பெற்றமை, கதைகள் கிளைக்கதைகள் வாயில்லாக நாமும் புரிந்துகொள்ளும்படிப் போதித்தல், கஷ்டமான வேதாத்தியயன நியமங்கள் இல்லாமலே பாராயணம் பண்ணக்கூடிய எளிமை, முதலிய சில பெருமைகள் வேதத்துக்கில்லாமல் இதிஹாஸங்களுக்கு இருப்பதை மறுப்பதற்கில்லை.

## 348. ஈச்வரனை விட குருவே மேல்.

கடவுளை விட ஆசாரியனை உயர்வாகக் கருது.

> अवधारणनियमाभ्यां आचार्यस्य सर्वेश्वरादपि तत्प्रसादार्थमतिशयेन सर्वदा बहुमन्तव्यत्वं अत्र सूच्यते। ईश्वरकृपा अनादिरपि आचार्यकृपां अपेक्षते, लीलारससहचरिता च। ईश्वरस्य क्वचिदधोनिनीषाऽपि वर्तते असाधुकारयितृत्वं च। आचार्यस्य तु सर्वत्रोन्निनीषैव। स साध्वेव कारयति। भगवतो दैत्यादिषु विपरीतोपदेशोऽप्यस्ति, अस्य तु सर्वत्र यथार्थवादित्वमेव। इत्यादि वैषम्यमनुसन्धेयम्।
>
> *– ஸ்தோத்ரபாஷ்யம்.*

ஸர்வம் யதேவ நியமேந என்ற வரிக்கு உரையிடுகையில் இதைக்கூறுகிறார்.

> ஏவ என்ற அவதாரணத்தால் நம்மாழ்வார் திருவடி மட்டுமே என்றதாலும், நியமேந என்றதால், எப்போதுமே என்றதாலும், ஸர்வேச்வரனின் அருளுக்காக ஸர்வேச்வரனைக்காட்டிலும் எப்போதும் ஆசாரியனே போற்றத்தக்கவன் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார். இதற்குப்பல காரணங்கள். 1. இறைவனின் அருள் அனாதிகாலமாக இருந்துவந்தாலும், ஆசாரியனின் அருளை அபேக்ஷிக்கிறது. (ஸம்ஸாரத்தில் தள்ளும்) லீலாரஸத்தோடு கூடியும் உள்ளது. ஆசாரியனின் அருளோ இறைவனின் நிக்ரஹத்தையும் போக்க வல்லது. எப்போதும் அனுக்கிரஹமாகவே பெருகுவது. 2. ஈச்வரன் (கீதையில் சொன்னபடி) எப்போதேனும் கீழே தள்ள விரும்புவதும் உண்டு. பாவச்செயல்களைப் பண்ணுவிப்பதும் உண்டு. ஆசாரியனுக்கோ எல்லாவிடத்தும் மேல்தூக்கும் விருப்பம் மட்டுமே. அவர் நன்மையை மட்டுமே பண்ணுகிறார். . . 3. பகவான் அசுரர்கள் முதலானோரிடத்தில் விபரீதமாக உபதேசித்ததும் உண்டு. இவரோ (நம்மாழ்வார் போன்ற ஆசாரியரோ) எவ்விடத்தும் உள்ளபடியே பேசுபவர். இதுமுதலான வாசியை இங்கு நினைத்தல் தகும்.

ஆசாரியன் ஏன் ஸர்வேச்வரனை விட மேலானவன் என்பதற்கு மூன்று காரணங்களைக் கூறுகிறார். குருவின் அருளைப் பெறாதவர்க்கு ஸர்வேச்வரனின் அருள் பெறற்கரிது என்பது முதல் காரணம். பகவானுக்கு அனுக்கிரகத்துடன் அதற்கெதிரான நிக்ரகமும் பாவிகளான நம்பால் ஏற்படும். ஆசாரியனுக்கோ அனுக்கிரகம் மட்டும் தான் ஏற்படும். பாவத்துக்குத் தண்டித்தல் கடவுளின் காரியமேயன்றி குருவின் கடமையன்று. ஒரு உபநிஷத்து வாக்கியத்தில் பகவான் பாவிகளைக் கீழ்த்தள்ள விருப்பம் கொண்டவராகச் சொல்கிறது. குருவோ எல்லாரையும் மேலே தூக்க விரும்புகிறார். அதற்குத் தகுதியற்றவரை உபேக்ஷிக்கிறாரேயன்றி, கீழே தள்ளுவதில்லை. குரு எவனையும் தீவழியில் நடத்துவிப்பதில்லை. பகவானோ அவரவர் கருமங்களுக்கேற்ப சிலரைக் கெட்டவழியிலும் நடத்துகிறார். சில சமயங்களில் தைத்யர்களை வஞ்சிப்பது முதலிய நோக்கங்களுக்காகப் பகவான் தப்பாக உபதேசித்ததுமுண்டு; மோஹஶாஸ்த்ரங்களைப் பண்ணுவித்ததும் உண்டு. நம்மாழ்வார் போன்ற குருவோ எந்தச் சந்தர்ப்பத்திலும் உண்மைக்குப் புறம்பாக உபதேசம் பண்ணுவதில்லை. உள்ளபடியே உபதேசிப்பார். இம்மாதிரிப் பல காரணங்களால் குருவே ஸர்வேச்வரனை விட மேலானவன் எனக்கருதலாகும். (ஆனால் குரு ஸர்வேச்வரனின்

மேன்மையைத் தான் உபதேசிக்கிறார் என்பதும், அவனுடைய அருளே பரம லக்ஷ்யம் என்பதும் மறுப்பதற்கில்லை. இதை தத்ப்ரஸாதார்த்தம் என்ற பதத்தால் தெரிவிக்கிறார்.) நாம் பகவானுக்கும் மேலாக ஆசாரியரைப் போற்றுவோம்.

கடந்த நாலு அறிவுரைகளில் எது மேலானது என்று கூறியவற்றை ஒருசேரப்பார்ப்போம்.

- ஈன்றவள் தந்தையை விடவும் மேல்.
- ஈறே வேதங்களிலே மேல்.
- ஈரிரு மறையினும் பாரதம் மேல்.
- ஈச்வரனை விடக் குருவே மேல்.

## 349. ஈ போல் ஸாரம் எடுத்துக்கொள்.

தேனீ போல பல இடங்களிலிருந்து ஸாரத்தைத் திரட்டிக்கொள்.

ஆகையால் बहुभ्यश्च महद्भ्यश्च शास्त्रेभ्यो मतिमान्नरः ।
सर्वतस्सारमाददात् पुष्पेभ्य इव षट्पदः ॥ என்கிறபடியே

– *ரஹஸ்யத்ரயஸாரம்.*

ஸாரநிஷ்கர்ஷாதிகாரத்தில் எடுத்த மேற்கோள்களில் இது கடைசியானது.

> சாத்திரங்கள் நிறையவானவை. பெரிதானவை. எல்லாம் கற்று மாளாதென்று புத்திசாலிக்குத் தெரியும். அவன் எல்லாவற்றிலிருந்தும் ஸாரமானதை எடுத்துக்கொள்வான். மலர்களிலிருந்து தேனீ தேனை உறிஞ்சுவது போலே.

தேனீ ஒரே மலரிலிருந்து தேன் எடுக்காது; நிறைய புஷ்பங்களிலிருந்து சிறிது சிறிதாக நிறைய சேர்த்துவிடும். அதேபோல மதியிற்சிறந்த மனிதனும் ஒரே கிரந்தத்தை முழுதும் கரைத்துக் குடிப்பதற்குப் பதில், நிறைய கிரந்தங்களிலிருந்து ஸாராம்சத்தைத் திரட்டவேண்டும். (இப்போது ஆயிரம் அறிவுரைகளை நூறு புத்தகங்களிலிருந்து திரட்டுவது போல.) தேனீ திருஷ்டாந்தத்தில் இன்னுமொன்றைக் கவனிக்க வேண்டும். மலர்களில் காம்புகள், மகரந்தப்பொடிகள், மெல்லிதழ்கள், என்று என்னென்னவோ இருந்தாலும், அவற்றையெல்லாம் அப்படியே விட்டு, மகரந்தத்தில் ஸாரமாகவுள்ள தேனை மட்டும் உறிஞ்சியெடுத்துக்கொள்ளும் திறமை கொண்டது தேனீ. அது போலவே புத்திசாலி மனிதனும், சாத்திரங்களில் பூர்வபக்ஷங்கள், விவாதங்கள், திருஷ்ட்ந்தங்கள், விளக்கங்கள், என்று எத்தனையோ இஉந்தாலும் ஸாரமான நிர்ணயங்களை மட்டும் கிரகித்துக் கொள்ளவேண்டும். மற்றவையெல்லாம் எது ஸாரம் என்று அறியத் துணை செய்யும். முக்கியமானதைப் பல நூல்களிலிருந்து திரட்டிச் சேமித்துக் கொள்வோம்.

## 350. ஈரீரிரு குணம் மதியில் கொள்.

புத்தியில் எட்டு (அதாவது ஈரிரண்டு நாலு; நாலிரண்டு எட்டு) பகுதிகள் இருக்கவேண்டும்.

> எட்டெணும் எண்குண மதியோர்க்கு . . . புத்திக்கு எட்டு அங்கங்களாவன: ग्रहणं धारणं चैव स्मरणं प्रतिपादन। मूहोऽपोहोऽर्थविज्ञानं तत्वज्ञानं च धीगुणाः॥
>
> என்கிறவை.
>
> – *ரஹஸ்யத்ரயஸாரம்.*

சொல்லிக் கொடுப்பதைப் புரிந்துகொள்ளும் திறன், மறக்காது வைத்திருக்கும் திறன், சமயத்தில் ஸ்புரிக்கும் திறன், புரியும்படி விளக்கும் திறன், வேறு ஸந்தர்ப்பத்தில் சேர்த்துக் கையாளும் திறன், சேராததைத் தள்ளிவிடும் திறன், நுண்ணிய அர்த்தங்களை அறியும் திறன், தத்வஜ்ஞானம், என்கிற எட்டு அங்கங்கள் புத்தியில் உள்ளன. இவற்றை உடையவர் எண்குணமதியோர். இவர்கள் எட்டை எண்ணுபவர்கள். அதாவது அஷ்டாக்ஷரத்தை ஜபிப்பவர்கள்.

வெவ்வேறு மனிதருக்கு இவை வெவ்வேறு அளவில் அமையலாம். இவையெல்லாமே எட்டுமாம் எட்டெழுத்தை ஜபிப்பவருக்கு. நாமும் எட்டு அங்கங்களிலும் சிறந்த புத்தியை அஷ்டாக்ஷரம் மூலம் பெறுவோம்.

## 351. ஈரீரிரு குண ஒளியைக் கொள்.

எட்டு பேறுகளாலே ஒளிர்க.

> எட்டுமாகுணம். . . . अष्टौ गुणाः पुरुषं दीपयन्ति இத்யாதிகளிற் சொன்னவையாகவும்.
>
> – *ரஹஸ்யத்ரயஸாரம்*

மூலமந்த்ராதிகாரத்தின் முடிவில் உள்ள தமிழ்ப்பாசுரத்துக்கு ஸ்வாமி தானே தரும் விளக்கத்தில் இது உள்ளது.

எட்டு குணங்கள் மனிதனை ஒளிரச் செய்கின்றன என்றவிடத்தில் சொன்ன எட்டையும் இங்கு எட்டுமாகுணம் என்றதாகக் கொள்ளலாம்.

அஷ்டாக்ஷரஸித்தி பெற்றவனுக்கு எட்டுமாகுணமும் வாய்க்கும் என்கிறார். எந்த எட்டு? அறிவு, குடிப்பிறப்பு, புலனடக்கம், கல்வி, பராக்கிரமம், பேச்சுக்குறைப்பு, இயன்றவரை கொடை, நன்றியறிதல், என்கிற எட்டாம். மஹாபாரதத்தில் விதுரநீதி என்னும் பகுதியில் இந்த எட்டையும் ஒரு ச்லோகத்தில் திருதராஷ்ட்ரனுக்குச் சொல்கிறான் விதுரன். நாமும் இவ்வெட்டு சிறப்புகளையும் பெற்றால் பிரகாசிக்கலாம்.

## 352. ஈகையில் பொறுமை தைர்யம் கொள்.

தானம் பண்ணும்போது அதிகப் பொறுமையும் தைரியமும் தேவை.

मुख्य दानोदकक्लिन्न करः ख्यातक्षमाधृतिः।
लोकपालाश्रितः कश्चित् अनाशावारणः कथम्॥

*– ஸுபாஷிதநீவி*

கொடையாளிக்கும் திக்கஜத்துக்கும் சிலேடையால் சேர்த்துப்பாடும் ச்லோகத்தில் இந்த அறிவுரை இருக்கிறது. ச்லோகத்தின் முதல் அர்த்தம்:

> முகத்தில் கை (தும்பிக்கை) கொண்டதும் மதஜலம் பெருகும் கை கொண்டதும், பூமியைத் தாங்குவதால் புகழ்பெற்றதும், இந்த்ராதி லோகபாலர்களை அடைந்ததும் ஆன யானை திக்கஜம் இல்லாமல் வேறெது?

இதே ச்லோகத்தின் இரண்டாவது அர்த்தம் வருமாறு:

> முக்கியமான வஸ்துக்களைத் தானம் பண்ணுவதால் ஈரமான கைகளை உடையவனும், பொறுமையாலும் தைரியத்தாலும் புகழ் பெற்றவனும், அரசர்களாலும் அடையப்பட்டவனுமான ஒரு கொடையாளி, ஆசைகளைப் பூர்த்தி பண்ணாமல் இருப்பானா?

வள்ளல்கள் எப்படியிருக்க வேண்டும் என்பது பற்றி ஆறு வாக்கியங்கள். 1.உயர்ந்த வஸ்துக்களைத் தானம் பண்ணவேண்டும். தனக்குப் பயன்படாத அற்பவஸ்துக்களைத் தானம் பண்ணுவதில் பெருமை இல்லை. 2.தாரை வார்த்துத் தானம் பண்ணவேண்டும். கை நனைந்தபடியே இருக்கவேண்டும். 3.இரவலர்களின் தொணதொணப்பையும் தொந்தரவையும் ஸஹித்துக்கொள்ளும் பொறுமை வேண்டும். 4.மனதில் பிசினாறித்தனம் இல்லாமல் தைரியம் வேண்டும். 5.இந்தப் பொறுமையும் துணிவும் புகழ் தேடித்தர, அதனால் மன்னர்களும் இவனிடம் வரும்படிச் சீரும் சிறப்பும் பெறவேண்டும். 6.யாசகர்களின் மனோரதங்களையெல்லாம் பூர்த்தி பண்ணவேண்டும். இவற்றினுள் முக்கியமாகப் பொறுமையையும் மனவுறுதியையும் சொல்லலாம். சிடுசிடுப்பு, எரிந்து விழுதல், சிணுங்குதல், இதெல்லாம் இல்லாதபடி பொறுமை பூணவேண்டும். மனத்தளர்ச்சி, இழப்பில் பயம், தழுதழுப்பு, இதெல்லாம் இல்லாத தைரியம் வேண்டும். ஈவது விலக்குவோரை எதிர்கொள்ளும் தைரியம், பொறுமையை இழக்காதிருத்தல் என்கிற த்ருதி, இவையும் புகழ் கூட்டும்.

கடந்த நாலு அறிவுரைகளில் நாம் என்னென்ன கொள்ளவேண்டும் என்றதைச் சேர்த்துப்படிப்போம்.

- ஈ போல் ஸாரம் எடுத்துக்கொள்.
- ஈரீரிரு குணம் மதியில் கொள்.
- ஈரீரிரு குணவொளியைக் கொள்.
- ஈகையில் பொறுமை தைர்யம் கொள்.

அடுத்த நாலு அறிவுரைகளும் ஒரே கிரந்தத்திலிருந்து எடுத்தவை.

## 353.ஈர்ப்பு பணத்தில் துறவிக்கேன்?

ஆண்டிக்கேனோ பணத்தாசை? ஸந்யாஸிகளும் கூடப் பணத்தாசை கொள்கிறார்களே, இது கூடாது.

> भिक्षेति शिष्यजन रक्षण दक्षिणेति
>
> शाटीति शाश्वतमठोपधिकल्पनेति ।
>
> ग्रन्थोपसङ्ग्रहणमूल्यमिति ब्रुवाणाः
>
> सन्यासिनोपि दधते सततं धनायाम् ॥
>
> – *ஸங்கல்பஸூர்யோதயம்.*

தர்ப்பனின் வார்த்தையாக, போலிஸந்யாஸிகளை ஏசுகிறார்.

> பிக்ஷைக்கு (தன் உணவுக்கு) என்றும், தன் சிஷ்யர்களின் அன்றாடச் செலவுக்கு என்றும், துணிக்கு என்றும், நிரந்தரமாக மடத்துக்கு ஒரு மூலதனம் வைப்பதற்கு என்றும், புஸ்தகங்கள் வாங்கும் செலவுக்கென்றும், சொல்லிக்கொண்டு, ஸந்யாஸிகள் கூட எப்போதும் பணத்தாசை பிடித்தவர்களாய் இருக்கிறார்கள்.

பத்தினி–ப்ரஜைகளையெல்லாம் பரித்யஜித்துப் போனவர்களையும் பணத்தாசை விடவில்லையே. துறவிகளுக்கும் பணத்தேவை இருப்பது சரியா? பணத்தேவை இருந்தாலும் பணத்தாசை இருக்கலாமா? உணவுக்கும் உடைக்கும் பணம் சேர்ப்பது ஒரு பக்கம். நிறைய சிஷ்யர்களை ஸம்ரக்ஷிப்பதற்கும், நிறைய புஸ்தகங்களை வாங்குவதற்கும், மடத்தின் வளர்ச்சிக்காக மூலதனம் வைப்பதற்கும், என்று எத்தனையோ சாக்குபோக்குகளைச் சொல்லிக்கொண்டு பணவசூல் செய்யலாமா? இதையெல்லாம் அயலாரிடம் ஒப்படைத்துவிட்டு, க்ருஷ்ணா ராமாவென்று, க்ரந்த காலக்ஷேபங்களிலும் ப்ரசார– ப்ரவசனங்களிலும், காலம் கழிக்கலாமே. எப்போது பார்த்தாலும் பணத்திலேயே ஈர்ப்பும் நாட்டமும் இருப்பவர்க்கு ஸந்யாஸி வேஷம் இருந்தால் அது அதர்மமாகாதோ? அபி என்றதன் கருத்து: குழந்தைக்குட்டிக்காரன் பணத்துக்கு அலைந்தால் பரவாயில்லை; குடும்பத்தைத் துறந்தவனுக்கும் குறி பணத்தில் தானா? ஸந்யாஸிகள் கூடப் பணத்தாசை பிடித்து அலைகிறார்களே, கிருஹஸ்தர்களே விரக்தர்களாய் இருக்க வேண்டியிருக்க, ஸந்யாஸிகளுமா தநாயா (பணத்து ஆசை) கொள்ளவேண்டும்? அடக்கஷ்டமே என்பதாம். ஸததம் என்றதன் கருத்து: இவர்கள் மற்ற முக்கியகாரியங்களையும் இரண்டாம் பக்ஷமாக்கி, பணம் சேர்ப்பதையும் நிதி வைப்பதையுமே முழுநேரக் காரியமாகக் கொண்டிருக்கிறார்களே, இது அடுக்குமா? என்பதாம். நீதி: நாம் எல்லோருமே பணத்தாசையைக் குறைத்துக்கொள்ளவேண்டும்; அதிலும் துறவிகளுக்குப் பணத்தாசை கூடவே கூடாது. எல்லாத் தப்புக்காரியத்தையும் சாக்குப்போக்குச் சொல்லி நியாயப்படுத்தவேண்டாம்.

## 354.ஈறு நெருங்கிலும் இச்சை ஏன்?

ஆயுள் முடிவடையும் தறுவாயிலும் உடலிச்சைகள் எதற்காக? அவை வேண்டாமே.

मध्योपलक्षितमनोरथभङ्गदीना

वाञ्छा न शाम्यति वयस्सकलं प्रशान्तम् ॥

*– ஸங்கல்பஸூர்யோதயம்.*

ஆறாம் அங்கத்தின் முதல் அறிவுரை. கஞ்சுகியின் வார்த்தையாக அமைந்தது.

> கிழத்தனம் வரும்போது, இடுப்பு ஒடிகிறது; கூடவே இஷ்டப்பட்டதும் (நிறைவேறாமல்) ஒடிகிறது. வயசு ஏறி ஒடுங்குகிறது; ஆனால் வாஞ்சை மட்டும் ஒடுங்கவில்லை.

மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கவில்லை என்ற பழமொழியை வேறுவிதமாகக் கூறுகிறார். வயசு சமித்தாலும் வாஞ்சை சமிக்கவில்லை என்கிறார். வயசு கூடினபிறகு வாஞ்சை கூடலாகாது என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவை நிறைவேறுவதற்கான வாய்ப்பு குறைவதால் வாஞ்சையும் குறையவேண்டும் என்பது மநோரதபங்கதீநா என்ற பதத்தால் தெரிவித்த முதல் காரணம். ஆயுளே முடிவை நெருங்கும்போது, அதன்பிறகு இந்த வாஞ்சைகளோ அவற்றின் பூர்த்திகளோ பயன்படாது என்று தெரிந்திருப்பதால் வாஞ்சைக்கான தேவை குறைந்த காலத்தில் வாஞ்சை வேண்டாமே என்பது இரண்டாவது காரணம். வயசும் வாஞ்சையும் சேர்ந்து வளர்ந்து வந்தன; இப்போது வயசு ஒடுங்கிக்கொண்டிருக்கிறது; மூப்பால் பாதிக்கப்பட்டது; வாஞ்சை மட்டும் வளர்வானேன்; என்பது மூன்றாவது காரணம். (வேடிக்கைக்குத் தான்.) நீதி: வயசான பிறகாவது, ஆசைகளைக் குறைத்துக்கொள்ளு.

## 355.ஈட்டம் காக்கிற இம்ஸை ஏன்?

சம்பாதித்த பணத்தைப் பாதுகாப்பதற்காகப் படாத பாடு படுவானேன்?

लब्धं न मुञ्चति विलक्षमतिर्न भुङ्क्ते

धत्ते पुनःपुनरसेळ महतीं धनायाम् ।

निद्रारसं न लभते महतां निधीनाम्

रक्षापिशाच व संप्रति राजराजः॥

*–ஸங்கல்பஸூர்யோதயம்.*

லோபன் என்கிற நாடகப்பாத்திரத்தின் கூற்று இது:

> கிடைத்ததை விட்டுத்தரவே மாட்டான். அறிவில் தலைக்கனம் ஏறுகிறது. ஒழுங்காக அனுபவிக்கவும் முடிவதில்லை. மீண்டும் மீண்டும் அதிகப் பணத்திலேயே ஆசை போகிறது. நிம்மதியாகத் தூங்குவது கூட முடிவதில்லை. பெரிய புதையல்களைப் பிசாசு பாதுகாக்கும் என்பார்களே, அந்தப் பிசாசு போல ஆகிறான் ராஜராஜன், குபேரன்.

பணம் இருந்தால் தானம் பண்ணலாமென்று சிலர் நினைக்கலாம்; பணம் இருந்தால் நன்றாக அனுபவிக்கலாம் என்று சிலர் நினைக்கலாம்; பணம் இருந்தால் பணத்துக்குப் பறப்பது நின்றுவிடும், வேறு காரியம் பண்ணலாம் என்று சிலர் நினைக்கலாம்; பணம் இருந்தால் நிம்மதியாகத் தூங்கலாம் என்று சிலர் நினைக்கலாம்; ஆனால் இதெல்லாமே தப்பு; உண்மை இதற்கு நேர்மாறானது. பணக்காரன் கிடைத்ததை விடாமல் இரும்புப்பிடியாகப் பிடித்துக்கொள்கிறான்; பணக்காரன் புத்தியே சரியில்லை; பணக்காரன் சரியாகச் சாப்பிடுவது கூட இல்லை; பணக்காரன் மேலும் மேலும் பணம் சம்பாதிப்பதையே விரும்புகிறான்; பணக்காரனுக்குத் தூக்கத்திலும் கூட நிம்மதியில்லை, எது எப்போது பறிபோகுமோ என்று பயம். பணக்காரன் காவல்பிசாசு போலக் கேவலமாக வாழ்கிறான். ஆனானப்பட்ட குபேரனுக்கே இதே கதி தான். வறுமையே பரவாயில்லை; நாலு பேரோடு பகிர்ந்துகொள்ளும் நற்குணம், நிம்மதியான தூக்கம், ஆலாய்ப் பறக்காமல் அளவாய் ஒழுகும் நெறி, பசித்துப் புசிக்கும் பழக்கம், இவையெல்லாம் வறியவர்களுக்கு மட்டுமே வாய்க்கும்; தனிகர்களுக்குக் கிடைக்காத பாக்கியம். நீதி: பணத்தைச் சம்பாதித்த பின், அதை ரக்ஷித்து வைத்துக் கொள்வதற்காக, அதைவிட முக்கியமானதையெல்லாம் இழந்து விடாதீர்கள்.

## 356.ஈசனருள் நாடு இன்னொன்றேன்?

இறையருளை அவலம்பிக்காமல், வேறொரு கதியை நாடவேண்டாம்.

त्वयि बहुमतिहीनः श्रीनिवासानुकम्पे
जगति गतिमिहान्यां देवि सम्मन्यते यः ।
स खलु विबुधसिन्धेळ सन्निकर्षे वहन्त्याम्
शमयति मृगतृष्णा वीचिकाभिः पिपासाम् ।।

*–ஸங்கல்பஸூர்யோதயம்.*

கடைசி அங்கத்தில் கைகூப்பிக்கொண்டு விஷ்ணுபக்தி என்பவள் சொல்லுகிற இந்த ச்லோகம் தயாசதகத்திலும் இருப்பது.

> ஸ்ரீனிவாஸப்பெருமாளின் தயாதேவியே! உன் பெருமையை உணராமல் ஒருவன் வேறொரு கதியை மதித்தானானால், அவன் தாகம் எடுக்கும்போது அருகில் பாயும் கங்கைநீரை விட்டுவிட்டு, கானல் நீரை நாடுகிறவன் போல்வான்.

நமக்கு எந்தக் காரியம் கைகூட வேண்டுமானாலும் இறையருளை நாடுவதே நல்லது. இறையருளை விட வேறொரு உபாயத்தைப் பெரிதாகச் சிலர் நினைப்பர். ராஜ–அனுக்கிரகம், அருள் கலவாத சொந்த முயற்சி, நண்பர்களின் துணை, முதலிய எத்தனையோ உபாயங்களை நாடவேண்டாம் என்னவில்லை. ஆனால் இறையருளைப் பஹுமதிக்காமல், அந்த வேற்றுபாயங்களை மதிக்கவேண்டாம். இறையருளோடு கூட அவற்றையும் மேற்கொள்ளலாம். கார்யஸித்தியை நாடுபவன் தாகமெடுத்தவன் போல. இறையருள் கங்காநதி போல. மற்ற உபாயங்கள் கானல் நீர் போல. கானல் நீரால் தாகம் அடங்காது; அதைப் பருகவே முடியாதே. அருகில் என்று சொன்னதன் கருத்து: மற்ற

கதிகளைப்பெற அரும்பாடு படவேண்டியிருக்கலாம். ஆனால் பகவானின் கருணை அருகிலேயே நமக்கு உதவக் காத்திருக்கிறாள் என்பதாம். நீதி: பகவானின் அருள் மூலம் அன்றி எதையும் சாதிக்கமுடியாது.

கடந்த நாலு அறிவுரைகள் வருமாறு:

- ஈர்ப்பு பணத்தில் துறவிக்கேன்?
- ஈறு நெருங்கியும் இச்சை ஏன்?
- ஈட்டம் காக்கிற இம்ஸை ஏன்?
- ஈசனருள் நா டின்னொன்றேன்?

## 357.ஈச்வரனுக்காய் உடலைச் செய்.

உன் உடலை இறைப்பணிக்கே பயன்படுத்து.

> கைங்கர்ய உபகரணங்களில் विचित्रा देहसम्पत्तिः இத்யாதிகளில் சொன்ன உள்ளம்
>
> உரை செயல் உள்ள இம்மூன்றும் உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றும் ப்ரதானம்.
>
> *—ப்ரதாந பாதகம்.*

உடலை மட்டுமன்றி, மநோவாக்காயம் எனப்படும் மூன்றையும் இறைத் தொண்டுக்கு முக்கியமாகச் சொல்கிறார். இது நூற்றொன்றில் எழுபத்துநாலாவதான வாக்கியம்.

> கைங்கர்யத்துக்குச் சாதனங்கள் பல இருப்பினும் அவற்றுள் முக்கியமானவை "விசித்ரா தேஹஸம்பத்தி:" இத்யாதி ச்லோகங்களில் சொன்னபடி, மனம், வாக்கு, உடல், என்ற மூன்றுமாம்.

வேலையாட்களை நியமித்துப் பண்ணும் பணி, நன்கொடையளித்தல், இவற்றையும் இறைப்பணியில் சேர்க்கலாம். பணம், அந்தஸ்து, பதவி, எல்லாம் கூட கைங்கர்ய உபகரணங்கள் ஆகலாம். மறுக்கவில்லை. ஆனால் இதில் மேற்கோள் காட்டிய ச்லோகத்தில் உள்ளது என்னவென்றால்: நமக்கு வாய்த்திருக்கும் உடல் என்னும் செல்வம் விசித்திரமானது. இதில் கைகள், கால்கள், முதலியவற்றையெல்லாம் சேர்த்துப் பண்ணியுள்ளது முன்னமே பிரமனே! ஈச்வரனுக்கு நிவேதிப்பதற்காகத் தான். உடலை உண்டாக்கியவனின் உள்நோக்கமே அது தான். இந்த ச்லோகத்திலிருந்து என்ன தெரிகிறது? ஈச்வரனுக்காக நம் உடலை நாம் பயன்படுத்தவேண்டும். வேறு அற்பப்பலன்களுக்கு மட்டுமாய்ப் பயன்படுத்தி நிற்கக்கூடாது.

## 358.ஈரீரிரு படைத்துதி செய்.

ஷோடஶாயுதங்களைத் தோத்திரம் பண்ணு.

> श्रीमद्वेङ्कटनाथेन श्रेयसे भूयसे सताम् ।
> कृतेयं आयुधेन्द्रस्य षोडशायुधसंस्तुतिः॥
>
> – ஷோடஶாயுதஸ்தோத்ரம்

இது ஸ்தோத்ரத்தின் கடைசி ச்லோகம்.

> ஸ்ரீமத் வேங்கட நாதன் என்னும் கவியால் இந்த ஷோடசாயுதஸ்தோத்ரம் பண்ணப்பட்டது. அதன் நோக்கம் என்னவென்றால் நல்லவர்கள் இதை அனுஸந்தானம் பண்ணி அதிகமாக மேன்மை பெறுவர் என்பதாம்.

நாம் இந்த ஸ்தோத்ரத்தைக்கொண்டு ஷோடசாயுதனான, அதாவது பதினாறு ஆயுதங்களைத் தாங்கிய, பகவானை ஸ்தோத்ரம் பண்ணிப் பயனடைவோம். பதினாறு ஆயுதங்களையும் ஸ்தோத்ரம் பண்ணிப் பயனடைவோம்.

## 359.ஈற்றுத் தினம் போல் என்றும் செய்.

வாழ்வின் கடைசி நாள் என்று தெரிந்தால் என்னென்ன அறங்களை அவசரமாகப் பண்ணுவாயோ அதையெல்லாம் எல்லா நாட்களிலும் பண்ணு.

> मृत्युरद्येति विदुषा यत् कर्तव्यम् हितैषिणा ।
> तदेव नित्यकर्तव्यम् अनिर्धारितमृत्युना॥
>
> *–ஸங்கல்பஸூர்யோதயம்.*

நாடகத்தின் கடைசி அங்கத்தில் புருஷன் என்பவனுக்கும் ச்ரத்தை என்பவளுக்கும் நிகழும் உரையாடலில் புருஷன் கூறுவது இது.

> மனிதன் நாள்தோறும் பண்ணவேண்டியது என்னவென்றால், சொல்கிறேன். இன்றே மரணம் என்று அறிந்தவன் தன் இதத்தை விரும்புபவனானால் என்னென்ன பண்ணுவானோ, அதெல்லாம் நித்யகர்தவ்யம். ஏனென்றால் நமக்கு என்று மரணம் என்று அறுதியிட முடியாதவில்லையே.

என்று சாவு என்று தெரியாத நிலையில், இன்றே கூட அது நிகழலாம் என்ற நிலையில், முன்னெச்சரிக்கையாக, பண்ணவேண்டிய அறச்செயல்களையெல்லாம் பிரதிதினமும் பண்ணுவது நல்லது. அன்றறிவாம் என்னாது அறம் செய்க. ஹிதைஷிணா என்றதன் கருத்து: மந்தரான மாந்தர்கள் தம் நலத்திலே அக்கறையில்லாமல் இறுதிநாளில் கூட அசட்டையாகவும் அற்பநாட்டங்களுடனேயும் இருக்கலாம்; அவர்களை விட்டுத் தள்ளு. நலம்விரும்பியான ஒருவன் இறுதிநாளில் என்ன பண்ணுவான்? அதைப் பண்ணு. அதைத் தினமும் பண்ணு.

## 360.ஈச்வரனுக்களித்தெல்லாம் செய்.

பண்ணுவதையெல்லாம் பகவானுக்கு அர்ப்பணித்து விடு.

> यत्करोषि इति श्लोकेन स्वभावार्थ शास्त्रप्राप्त सर्वकर्मसमर्पणविषय मन्त्रविशेषोपि स्मारितः। - - - तत्कथमीश्वरे तत्समर्पणमित्याह एतदुक्तमिति। - - - परमकर्तृत्वात् कर्तृत्वसमर्पणम्। परमशेषित्वात् आराध्यत्वादिसमर्पणम्। -
>
> *–தாத்பர்யசந்த்ரிகா.*

பகவத்கீதையின் ஒன்பதாவது அத்தியாயத்தில் யத்கரோஷி என்று தொடங்கும் ச்லோகம் ப்ரஸித்தமானது. அவ்விடத்து மூலத்தில் உள்ள அறிவுரையை உரையில் மேலும் தெளிவிக்கிறார்.

> யத்கரோஷி என்கிற ச்லோகத்தாலே, சாஸ்த்ரீய கர்மங்களையெல்லாம் ஸர்வம் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணம் என்று பண்ணுவதற்கான மந்த்ரமும் நினைவுறுத்தப்படுகிறது. அந்த மந்த்ரம் என்னவென்றால்: "யத்கரோமி யதச்நாமி யஜ்ஜுஹோமி ததாமி யத். யத்தபஸ்யாமி பகவந் தத்கரோமி த்வதர்பணம்" என்பதாம். – – – எப்படி ஈச்வரனிடம் ஸர்ப்பிப்பது பொருந்தும்? என்பது பற்றிச் சொல்கிறார் ஏததுக்தம் என்பதால். அவன் பரமகர்த்தாவானதால் கர்த்ருத்வஸமர்ப்பணம் தகும். அவன் பரமசேஷியாகையால் ஆராத்யத்வஸமர்ப்பணம் தகும்.

எதைப் பண்ணுகிறாயோ, எதைச் சாப்பிடுகிறாயோ, எதை ஹோமம் பண்ணுகிறாயோ, எதைத் தானம் பண்ணுகிறாயோ, எதைத் தவம் பண்ணுகிறாயோ, கௌந்தேயனே! அதை எனக்கு அர்ப்பணம் பண்ணிவிடு என்பது கண்ணன் அர்ஜுனனுக்குப் பண்ணும் உபதேசம். ஒவ்வொரு கருமத்தின் முடிவிலும் நாம் ஸாத்விகத்யாகம் பண்ணி அந்தக் கர்மத்தைப் பகவானுக்கு அர்ப்பித்து விடும் வழக்கம் வந்திருக்கிறது. நாம் பண்ணின கர்மத்துக்கும் அவனே பரமகர்த்தாவாதலால், கர்த்ருத்வ ஸமர்ப்பணம் பண்ணவேண்டும். நாம் எந்தத் தேவதையை ஆராதித்தாலும் அவனே பரம சேஷி ஆதலால், அவனுக்கே அந்தக் கர்மம் அர்ப்பிக்கப் படுவது தகும். இவ்வாறாக நாம் பண்ணுவதெல்லாம் ஈச்வரனுக்காக என்றாகிறது. அர்ப்பணிப்போம். எல்லாம் செய்யும்போதே ஸமர்ப்பிப்போம்.

கடந்த நாலு அறிவுரைகளும் நாலு வெவ்வேறு கிரந்தங்களிலிருந்து எடுத்தவை வருமாறு:

- ஈச்வரனுக்காய் உடலைச் செய்.
- ஈரீரிரு படைத் துதி செய்.
- ஈற்று தினம் போல் என்றும் செய்.
- ஈச்வரனுக்களித்து எல்லாம் செய்.

## 361.ஈர்ப்பாய் இறைவனைப் புகலடைவாய்.

இறைவனை நம் பால் இழுப்பதற்கு உபாயமாகச் சரணாகதி பண்ணு.

तस्य च वशीकरणं तच्छरणागतिरेव என்று கடவல்லியில் வஶீகார்யபரம்பரையை வகுத்த இடத்திலே ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்தார்.

– *ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்.*

அர்த்தபஞ்சகத்தில் ஐந்தாவதான ப்ராப்திவிரோதியை விளக்கிய பிறகு அதற்குப் பரிஹாரம் கூறுகிறார்.

> இறைவனை வசப்படுத்தும் உபாயம் என்னவென்றால் அவனிடம் புகலடைந்து விடுவது தான் என்று கடவல்லி என்னும் வேதப்பகுதியில் கூறிய அறிவுரை. ஸ்ரீபாஷ்யகாரரால் மேற்கோள் காட்டப்பட்டது.

இறைவனை நம் பால் ஈர்ப்பதற்குச் சரணாகதி நல்ல வழி ஆகும். நம் கையில் ஒன்றுமில்லை; அவனாக ஸங்கல்பித்தால் தான் உண்டு என்று வாதிப்பாருக்கும், நாமாக அவனைப் புகலடையவேண்டும் என்று வாதிப்பாருக்கும், இடைவெளி குறைவே என்கிறது இந்த வாக்கியம். ஸ்வகதஸ்வீகார வாதத்துக்கும் பரகதஸ்வீகார வாதத்துக்கும் வித்தியாசத்தைக் குறுக்கி விடுகிறது. அவனாக நம்மை ஸ்வீகரிக்கும்படி வஶீகரணோபாயமாக அவனே சொல்லிக்கொடுத்த சரணாகதி ஆகிறது. இதில் தென்கலை வடகலை பேதம் வேண்டாம் என்பதற்காக, இரு சாராருக்கும் பொதுவான ஆசார்யராகிய ஸ்ரீபாஷ்யகாரரின் கருத்தைக் காட்டுகிறார்.

## 362.ஈரிரும்முறை கொப்புளி வாய்.

பல் துலக்குகையில் பன்னிரண்டு தடவை வாயைக் கொப்புளிக்க வேண்டும். பற்குச்சி இல்லாவிடில்.

काष्ठालाभादिदशासु तत्तत्तरुपर्णैस्तृणैर्वा तेषामप्यभावे द्वादशगण्डूषैर्मुखशुद्धिः । - - -

स्मरन्ति च -- अलाभे दन्तकाष्ठानां प्रतिषिद्धदिनेष्वपि ।

अपां द्वादशगण्डूषैः मुखशुद्धिर्भविष्यति ॥

- *ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா.*

> பற்குச்சி கிடைக்காத நாட்களில், அந்தந்த மரத்து இலைகளையோ அல்லது புல்லையோ பயன்படுத்தலாம். அதுவும் கிடைக்காது போனால் பன்னிரண்டு தடவை வாயைக் கொப்புளிப்பதால் வாய் சுத்தமாகும். ஸ்ம்ருதியும் இவ்வாறே கூறுகிறது: பற்குச்சி கிடைக்காத நாட்களிலும் பற்குச்சி கூடாத நாட்களிலும், பல் துலக்குகையில் பன்னிருமுறை வாய் கொப்புளித்தால் வாய் சுத்தமாகும்.

பற்குச்சி கிடைக்காத நாட்கள் பல இருக்கும். கூடாத நாள் எது? என்றால், விரதநாட்கள், யாகதீக்ஷாநாட்கள், ச்ராத்தநாட்கள், என்று சிலநாட்களில் பற்குச்சி தடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் வாய்க் கொப்புளித்தல் அதிகமாக உண்டு.

## 363.ஈடா சிங்கத்துக்கே நாய்?

தகுதிக்கு மீறி வளரும் ஆசை வேண்டாம்.

> दष्टसारङ्गयूथोपि दंष्ट्रानखरवानपि।
>
> भूभृत्कटक संस्थोपि सारमेयो न सिंहति॥
>
> — *ஸுபாஷிதநீவி.*

த்ருப்தபத்ததியில் திமிர் பிடத்தவர்களை வர்ணிக்கையில் இதுவொரு ச்லோகம்.

> சிங்கம் யானையைக் கடித்துக் குதறும்; நாய் மானைக் கடித்துக் குதறும். மானுக்கும் யானைக்கும் ஸாரங்கம் என்ற ஒரே பேர் இருப்பதால் சிங்கம் பண்ணுவதை நாயும் பண்ணியதாயிற்று. சிங்கத்துக்கு இருப்பது போல் கூரான பற்களும் நகங்களும் ஒரு நாய்க்கும் அமையலாம். சிங்கம் மலைத்தாழ்வரைகளில் வசிக்கும்; நாய் அரசர்களின் வேட்டைக் கூடாரங்களில் இருக்கும். இரண்டு இடங்களுக்கும் பூப்ருத்கடகம் என்ற ஒரே பெயர் உண்டு. இப்படியாகச் செயலிலும் அவயவத்திலும் இருப்பிடத்திலும் நாய் சிங்கத்தை நிகர்த்ததாகலாம். ஆனால் சிங்கம் பண்ணுவதையெல்லாம் அது போல நாய் பண்ணமுடியுமோ? முடியாது. நாய் சிங்கத்துக்கு ஈடே ஆகாது.

நீதி: உயர்குலத்தோருடன் போட்டி போட்டு, கொஞ்சம் முன்னேறினாலும், தாழ்குலத்தோர் உயர்குலத்தோருக்குச் சமமாகிவிட முடியாது. பசுவைப் பார்த்துப் பூனையும் சூடு போட்டுக் கொள்வானேன்? அவரவர்க்கு வகுத்த பணிகளில் திறமையையும் முன்னேற்றமும் காட்டலாமே.

## 364. ஈஷத் திருமகள் அடி பணிவாய்.

கொஞ்சம் தாயாரின் திருவடியை வணங்கு.

> सेवे देवि त्रिदशमहिळामौळिमालार्चितं ते
>
> सिद्धिक्षेत्रं शमितविपदां सम्पदां पादपद्मम्।
>
> यस्मिन्नीषन्नमितशिरसो यापयित्वा शरीरम्
>
> वर्तिष्यन्ते वितमसि पदे वासुदेवस्य धन्याः॥
>
> - *ஸ்ரீஸ்துதி.*

திருமகளின் திருவடியை ஸேவிப்பதற்கான காரணத்தைக் கூறுகிறார்:

ஸ்ரீதேவியே! உன் திருவடி தேவஸ்த்ரீகளின் தலைமாலைகளால் அர்சிக்கப்படுவது. விபத்துகளை ஒடுக்கிக்கொண்டு ஸம்பத்துகள் ஸித்திப்பதற்கு க்ஷேத்ரமானது. அந்தத் திருவடியில் கொஞ்சம் தலை குனிந்தால் போதும்; குனிந்தவர்கள் சரீரஸம்பந்தம் விடும்போது, வாஸுதேவனின் பரமபதத்தில் இருப்பார்கள். அத்தகைய திருவடித்தாமரையை நான் ஸேவிக்கிறேன்.

இதில் சொன்ன ஆறு காரணங்கள் வருமாறு: 1.உயர்ந்தவர்களைப் பின்பற்றுவது தகும்; தேவமாதுகள் திருமகளின் திருவடிகளில் தலைகுனிந்து வணங்குகிறார்கள்; நம்மை விட அதிகமறிந்த தேவமாதுகள் பண்ணுவதை நாமும் பின்பற்றினால் நன்மை உண்டாகும். அதனால் ஸேவிக்கிறேன். 2.திருவடியே ஒரு ஸித்திக்ஷேத்ரமாயிருக்கிறது. நிறைய இம்மைப் பலன்கள் கிடைக்கின்றன. விபத்துகள் நீங்குகின்றன. செல்வம் கொழிக்கிறது. அதனால் ஸேவிக்கிறேன். 3.அது தாமரை போல் அழகாயிருக்கிறது. தாமரை போல் கமழ்கிறது. தாமரை போல் கவர்கிறது. அதனால் ஸேவிக்கிறேன். 4.கொஞ்சம் காரியத்துக்கே மிதமிஞ்சிய பலன் கொடுக்கிறது இந்தத் திருவடி. நிறைய ப்ரதக்ஷிண ப்ரணாம ஸ்தோத்ர பாராயண ஆதிகளை அபேக்ஷிக்காமல் ஒரு சிறிது தலை குனிந்தவர்களுக்கெல்லாம் பலனளிக்கிறது. அதனால் ஸேவிக்கிறேன். 5.இதனால் தேஹாவஸானத்தில் பரமபதப்பேறு கூடக் கிடைக்கும். அதனால் ஸேவிக்கிறேன். 6.இதை ஸேவிப்பவர்கள் தந்யர்கள், பாக்கியசாலிகள். நானும் அவர்களில் ஒருவராகவேண்டும். அதற்காக ஸேவிக்கிறேன். இதில் நமக்கு நீதி: தாயார் ஸந்நிதிக்குப்போய், ஈஷத், கொஞ்சமாக, அவளுடைய திருவடியை நோக்கித் தலை குனிந்தால் போதும். இதற்கு மேல் ப்ரயாஸப்படவேண்டாம். பெரும்பலன் கிடைத்துவிடும்.

கடந்த நாலு அறிவுரைகளையும் சேர்த்துப் பார்ப்போம்:

- ஈர்ப்பாய் இறைவனைப் புகலடைவாய்.
- ஈரிருமும்முறை கொப்புளி வாய்.
- ஈடா சிங்கத்துக்கே நாய்?
- ஈஷத் திருமகள் அடிபணிவாய்.

## 365.ஈகையில் இன்சொற்கீடில்லை.

தானம் பண்ணும்போது மனமார இனிக்கப் பேசுவது அவசியம்.

त्वचं मांसं जीवं यदपि ददुरस्थीनि पृथिवीम्

श्रियं रत्नाधीशं त्रिदशतरुमैरावतमपि।

तदेतत्प्रत्येकं मिलितमपि नालं तुलयितुम्

मनस्कारारोपि स्थिरमधुरकल्योक्तिकणिकाम्॥

*–ஸுபாஷிதநீவீ.*

தானம் கொடுக்கும் பொருளின் சிறப்பை விடத் தானம் கொடுப்பவனின் இனிய வார்த்தைக்கு அதிகப் பெருமை என்கிறார். எதைக் கொடுக்கிறோம், எவ்வளவு கொடுக்கிறோம், என்பதையெல்லாம் விட, எப்படிக் கொடுக்கிறோம் என்பது முக்கியம்.

> தோலையே கொடுத்தார் ஒருவர்; மாமிசம் கொடுத்தார் ஒருவர்; உயிர் கொடுத்தார் ஒருவர்; எலும்புகளைக் கொடுத்தார் ஒருவர்; பூமியைக் கொடுத்தார் ஒருவர்; ஸ்ரீதேவியையும், உயர்ந்த மணியையும், கற்பக மரத்தையும், ஐராவதயானையையும் கொடுத்தார் ஒருவர். இவர்களது இந்தத் தானங்களை ஒவ்வொன்றாகவோ சேர்த்தோ பார்த்தாலும், மனப்பூர்வமாக நிலைக்கும்படியாக இனிமையாக யதார்த்தமாகப் பேசுவதற்கு ஈடாகாது.

தன் தோலுடன் அறுத்துக் கொடுத்தவன் கர்ணன். தன் மாமிசத்தைக் கொடுத்தவன் சிபி. தன் உயிரைத் தானமாகக் கொடுத்தது புறா. தன் எலும்புகளைத் தானம் பண்ணினார் ததீசி முனிவர். தன் பூமியைத் தானம் பண்ணினார் பரசுராமர். லக்ஷ்மி, கௌஸ்துபம், கல்பவ்ருக்ஷம், ஐராவதம், இவற்றையெல்லாம் தானம் பண்ணினான் ஸமுத்ரராஜன். இவர்களெல்லாம் உயர்ந்த வள்ளல்கள். இல்லையென்னவில்லை. ஆனாலும், இதையெல்லாம் விட முக்கியமானது, தானம் பண்ணும்போது மனமலர்ச்சியுடன் கூறும் இனிய வார்த்தைகளே ஆகும். அந்த வார்த்தைகளுக்குள்ள பெருமையின் ஒரு சிறுபகுதிக்குக் கூட மேற்கூறிய உயர்ந்த தானப்பொருள்கள் சமமாகமாட்டா. இன்சொல் அவ்வளவு முக்கியம். அந்த வார்த்தை (தானம் வாங்குபவனை இளப்பமாகக் கருதும் மனப்பாங்கில்லாமல்) மனப்பூர்வமாக இருக்கவேண்டும்; உதட்டுநுனியிலிருந்து வந்தால் போதாது; தானவார்த்தை ஸ்திரமான வார்த்தையாக இருக்கவேண்டும்; பொய்த்து விடவோ, மாறிவிடவோ கூடாது; வாங்கிக்கொள்பவன் என்றென்றும் நினைத்து மகிழும்படி இருக்கவேண்டும்; மதுரமான வார்த்தையாக இருக்கவேண்டும்; கொடுப்பவன் கை உயர்ந்திருக்கிற காரணத்தால் அவஜ்ஞையாகவோ நிஷ்டுரமாகவோ பேசிவிடக்கூடாது; ஸாமர்த்யமாக (வைத்துக்கட்டினதாக இராமல்) யதார்த்தமாக (மிகைப்பாடு இல்லாமல்) பேசவேண்டும்; இத்தகைய இன்சொல்லின் ஒரு லேசத்துக்குக் கூடச் சமமாகாது, மி கச்சிறந்த தானப்பொருள்களின் திரள். பொருளைவிடச் சொல் முக்கியம்; தானப்பொருளை விட இன்சொல் முக்கியம். ஆதரவை வெளிப்படுத்துகிற இனிய வார்த்தை முக்கியம். இன்சொல் இராவிட்டால், அக்குறையை அதிகத்தானத்தால் ஈடுகட்டமுடியாது.

## 366.ஈயும் கையர்க்கிழிவில்லை.

தானம் பண்ணுகிற கைகளைக் கொண்டவர்க்கு இழிவு நேரிடாது. .

> येषां हिरण्यकशिपु क्षेत्रदानकरः करः।
>
> तेषां तिर्यङ्मुखत्वेपि पुरुषत्वं न हीयते॥
>
> *–ஸுபாஷிதநீவீ.*

இரண்டு அர்த்தங்கள் கொண்ட ச்லோகம். முதல் அர்த்தம் வருமாறு:

> ஸ்வர்ணதானம், அன்னதானம், வஸ்த்ரதானம், பூதானம், முதலியவற்றைப் பண்ணுகிற கை எவர்களுக்கு இருக்கிறதோ, அவர்களுக்கு முகம் திரும்பிய நிலையிலும், ஆண்மை குறைவதில்லை.

இதே ச்லோகத்துக்கு இரண்டாவது அர்த்தம்.

ஹிரண்யகசிபுவைக் கீறிப் பிளக்கிற கை உள்ளவர்களுக்கு விலங்கு முகம் இருந்தாலும், புருஷத்வம் குறைவதில்லை.

முதல் அர்த்தம் வள்ளல்களைச் சிறப்பித்துப் பேசுவது. இரண்டாம் அர்த்தம் நரசிம்மப் பெருமாளைப் போற்றிப் பேசுவது. நமக்கு வேண்டிய நீதி முதல் அர்த்தத்தில் இருக்கிறது. அதே ச்லோகத்துக்கு ஊரறிந்த ஒரு உண்மை இரண்டாம் அர்த்தமாகக் கிடைப்பதால், இந்த நீதி மேலும் வலுப்படுகிறது. கொடையாளிக்கு இழிவு வராது என்பது நீதி. அவனுடைய கைராசி, முகத்தில் ஏதேனும் கோணல் வந்தாலும் அதை அமுக்கி, உயர்வை ஏற்படுத்தும். கைச்சிறப்பு முகக்குறையை ஈடுகட்டிக்கொண்டு பெருமை தரும். புருஷத்வம் எப்படிக்குறையும்? ஆண்மை என்றும் நிறைய வழங்கும் பண்பு என்றும் அந்தப் பதத்துக்கு இரண்டு அர்த்தங்களாயிற்றே? ஆகையால் அந்தக்கொடையாளி, கபோதம் போலவும், நாடீஜங்கன் போலவும், ஒரு விலங்காயிருந்தால் கூட புருஷன் என்ற சொல் பொருந்துமே. முகத்தழகா முக்கியம்? வாரி வாரி வழங்குபவர்களுக்குக் குறையொன்றும் கிட்டாது.

## 367.ஈடே ஆழ்வார் மொழிக்கில்லை.

ஆழ்வாராசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கு இணையே கிடையாது. அவற்றை அனுஸந்தியுங்கள்.

மாசில்மனம் தெளி முனிவர் வகுத்தவெல்லாம்
மாலுகந்த ஆசிரியர் வார்த்தைக்கொவ்வா.

—*ப்ரதாநசதகம்.*

கிரந்தத்தின் ஆரம்பத்தமிழ்ப்பாசுரத்திலும் முடிவுத்தமிழ்ப்பாசுரத்திலும் ஒரே கருத்தைக் கூறியிருப்பதால், ஸ்வாமி தேசிகனுக்கு இந்த நீதியில் உள்ள ஊற்றம் தெரியவருகிறது.

முனிவர்கள் எழுதிவைத்துள்ள ஸ்ம்ருதிகளும் தர்ம சாஸ்த்ரங்களும் ஒரு பக்கம். இறையன்பில் ஆழங்காற்பட்ட நம்மாழ்வார் முதலான ஆசார்யர்களின் ஸூக்திகள் இன்னொரு பக்கம். இவ்விரண்டையும் ஒப்பிட்டால் ஆசார்யஸூக்திகளுக்கு ரிஷிவாக்யங்கள் சமமாகமாட்டா.

மாலுகந்த ஆசிரியர் என்பதற்கு, இரண்டு கருத்துகள். எந்த ஆசிரியர்களைப் பெருமாளே போரவுகந்து கடாக்ஷித்து, வாழ்க்கையில் விளையாடி, அற்புதங்களை நிகழ்த்தினாரோ, அந்தப் பூர்வாசார்யர்கள் என்பது முதல் கருத்து. எந்தப் பூர்வாசார்யர்கள் திருமாலை உகந்து, பக்தியில் திளைத்து, அதன் பரீவாகமாகத் திவ்யப்ரபந்தங்களை அருளினரோ, அந்த ஆசிரியர்கள் என்பது இரண்டாம் கருத்து. மால் எவரை உகந்தாரோ அவர், எவர் மாலை உகந்தாரோ அவர், என்று இவ்விரண்டையும் சுருக்கலாம். இவர்களாவார் ஆழ்வாராசார்யர்கள். அவர்களுடைய ஸ்ரீஸூக்திகளுக்கு ஈடிணையே கிடையாது.

## 368.ஈடுபடு இன்பம் தடையில்லை.

வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்களை அனுபவிப்பது ப்ரதானலக்ஷ்யத்துக்குத் தடையாகாது.

கைங்கர்யமநோரதத்துக்குப் பங்கம் வராமையாலும் யாவத் ஶரீரபாதம் நமக்கு வருபவையெல்லாம் ப்ரியஹித விஶேஷங்கள் என்று ப்ரீதராகிறபடி. --- तदनुभवनमेव युक्तं हि मे - - - என்கிறார்களிறே.

*–ரஹஸ்யரத்நாவளிஹ்ருதயம்.*

இன்பத்தைப் ப்ரியம் என்றும் துன்பத்தை ஹிதம் என்றும் கருதி இரண்டையும் அனுபவிக்கலாகும் என்கிறார்:

> நம் அபிலாஷை, மனோரதம், என்ன? பகவத் பாகவத கைங்கர்யம். இதற்குத் தடை வராது இன்பதுன்பங்களை அனுபவிப்பதாலே. உடலில் உயிருள்ளவரை நமக்கு நிகழ்வனவற்றில் சில மனதுக்குப் பிடித்தவை; வேறு சில நலன் பயப்பவை; ஆக எல்லாமே நன்மைக்கே என்று மகிழவேண்டும். "ப்ரியமானதோ அப்ரியமானதோ எது நிகழ்ந்தாலும் அதை அனுபவிப்பதே யுக்தமல்லவா?" என்று பூர்வர்களும் சொன்னதுண்டு.

இன்பத்தில் ஈடுபடுவதும் தவறாகாது; கைங்கர்யம் தடைப்படாத வரையில். துன்பத்திலும் நன்மை உண்டு. ஆகையால் "நன்றே வருவதெல்லாம்". துன்பத்திலும் இன்பம் காணலாம். இன்பத்தையும் விலக்காமல் ஈடுபடலாம்.

இதுவரை பார்த்த நாலு அறிவுரைகள் வருமாறு:

- ஈகையில் இன்சொற்கீடில்லை.
- ஈயும் கையர்க்கிழிவில்லை.
- ஈடே ஆழ்வார் மொழிக்கில்லை.
- ஈடுபடின்பம் தடையில்லை.

## 369.ஈரக்கண்ணுடைத் தொண்டர் பார்.

பக்திமேலீட்டால் கண்ணீர் பெருக்கும் தொண்டர்களைப் பார்த்தாலே புண்ணியம்.

आऴ्हादशीत இத்யாதிகளிற்படியே भक्तिपरवश ர் ப்ரீதியோக்யரில் ப்ரதாநர்.

*– ப்ரதாநஶதகம்.*

இதில் ப்ரமாணமாக எடுத்த ச்லோகம் முழுதையும் மொழிபெயர்த்தால் இவ்வாறாகும்:

> மகிழ்ச்சியால் குளிர்ந்த கண்ணீருடன் மயிர்க்கூச்செறிந்த சரீரத்துடன் எப்பொழுதும் பரமனின் குணங்களில் ஆவேசம் கொண்டவன் எல்லாராலும் காணத்தக்கவன்.

இவ்வாறாகப் பக்திபரவசரானவர்களிடம் நாம் அன்புடன் பழகவேண்டும்.

இப்படி அன்புடன் பழகத்தக்கவர்களில் ப்ரதானமானவர் பக்திபரவசர் ஆனவரே. நமக்கு அத்தகைய மெய்சிலிர்க்கும் பக்தி இராமற்போனாலும், யாருக்கு இருக்கிறதோ, அவர்களைப் பார்ப்பதால் நன்மை உண்டாகும். அவர்களிடம் அன்புகாட்டுவது அவசியம். அன்புக்குரியவர்களில் அவர்களே முக்கியமானவர்.

## 370.ஈமம் வகித்தால் தீட்டைக்கார்.

ஈமம் என்கிற அந்திமக்ரியையில் பிணம் தூக்கினாலோ, வேறு சடங்குப்பங்கு வகித்தாலோ தீட்டு கார்க்கவேண்டும்.

> भरणं तु तथा कृत्वा मृतकस्य वसुन्धरे।
> मन्दिरं न प्रवेष्टव्यं प्रविष्टस्य फलं शृणु॥
>
> *–ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா.*

இந்த வராஹபுராணச்லோகம் ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷையில் முப்பத்திரண்டு அபசாரங்களைக் கூறுமிடத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

பூதேவியே! இறந்தவனின் சடலத்தைத் தூக்கினவன் (தீட்டுக்காலம் முடியும் வரை) கோவிலுக்குள் வரக்கூடாது. நுழைந்தால் அதன் விளைவைச் சொல்கிறேன், கேள். பதினாலு பிறவிகள் சண்டாளனாகப் பிறப்பான்.

ஈமக்கிரியைகளில் பங்கேற்றால் தீட்டு உண்டு என்பதும் அத்தகைய தீட்டுக்காலத்தில் கோவிலுக்குள் போகக்கூடாது என்பதும் நீதி.

## 371.ஈடாடார் குரு ஏமாற்றார்.

ஈடாடுதல் என்றால் போட்டி போடுதல். போட்டி போடுதலையும் ஏமாற்றுவேலையையும் ஆசார்யர்கள் பண்ணுவதில்லை.

> स्पर्धाविप्लवविप्रलम्भपदवीवैदेशिका देशिकाः।
>
> – குருபரம்பராஸாரம்.

போட்டி, புரட்டு, ஏமாற்றல், இவற்றின் வழியில் கூட வராதவர்கள் தேசிகர்கள்.

அவர்களை முன்னோடிகளாகக்கொண்ட நாமும் அதையெல்லாம் பண்ணக்கூடாது என்பதொரு நீதி. மற்ற ஸம்ப்ரதாயத்துக் குருக்கள் போலல்லர் நம் பூர்வாசார்யர்கள் என்று புரிந்து கொள்க என்பதும் நீதி.

## 372.ஈசனின் உடலாய் உலகைப்பார்.

இந்த உலகத்தை உடலாய்க் கொண்டவன் பரமன். பகவானின் உடலாக இந்த உலகத்தைப் பார்க்கவேண்டும்.

> आधेयत्वप्रभृतिनियमैरादिकर्तुश्शरीरम्
> सत्तास्थेमप्रयतनफलेष्वेतदायत्तमेतत्।
> विश्वं पश्यन्निति भगवति व्यापकादर्शदृष्टे
> गम्भीराणां अकृतकगिरां गाहते चित्तवृत्तिम् ॥
>
> - *ரஹஸ்யத்ரயஸாரம்.*

ப்ரதாநப்ரதிதந்த்ராதிகாரத்தின் முகப்புச் ச்லோகம்.

> பகவான் ஆதாரம்; ப்ரபஞ்சம் ஆதேயம். இது முதலான நியமங்களாலே ஜகத்காரணனின் சரீரமாகிறது விச்வம். தன் இருப்பு, நிலைப்பாடு, செயல்பாடு, பலன், இவற்றில் இந்த விச்வம் இந்தப்பகவானுக்கு அதீனமாக இருக்கிறது. (இதனாலும் சரீரம் என்னத்தக்கது.) இவ்வாறாக விச்வத்தை ஸர்வேச்வரனின் உடலாகப் பார்ப்பவன், வ்யாபகமந்த்ரம் என்ற கண்ணாடியில் காட்டப்பட்ட பகவானிடம் ப்ரபஞ்சத்தையே காண்பவன், ஆழ்ந்த வேதங்களின் தாத்பர்யத்தில் மூழ்கியவனாகிறான்.

வேதத்தின் உட்கருத்தே இந்தச் சரீரசரீரிபாவம் தான். இந்தப் பிரபஞ்சத்தைப் பகவானின் உடலாகப் பார்க்கிறவன் யாருக்கும் அஹிதம் பண்ணமாட்டான் என்பதாலும் இது முக்கிய உபதேசம் ஆகிறது.

இதுவரை பார்த்த நாலு உபதேசங்களாவன:

- ஈரக்கண்ணுடைத் தொண்டர் பார்.
- ஈமம் வகித்தால் தீட்டைக்கார்.
- ஈடாடார் குரு ஏமாற்றார்.
- ஈசனின் உடலாய் உலகைப்பார்.

## 373.ஈற்றா போலிறை தொடர விழை.

ஈற்றா என்றால் ஈன்ற ஆ, அதாவது சமீபத்தில் கன்று போட்ட பசுமாடு. அதன் பின் கன்று போவது போல, நாம் இறைவன் பின் போகவேண்டும்.

> அன்று ஈன்ற தேனு வத்ஸத்தைப் போலவும், அத்தேனுவை வத்ஸம் போலவும், ரேஷி போம் வழியெல்லாம் அநுதாவநம் பண்ணி.
>
> *–பரமபதஸோபானம்.*

மோக்ஷத்தில் சூழ்ந்திருந்து பல்லாண்டேத்தும் நிலையில் பண்ணக்கூடிய கைங்கர்யங்களில் இதை ஒன்றாகச் சொல்கிறார்.

> கன்று போட்ட நாளிலே பசுமாடு கன்றையே சுற்றிச்சுற்றி வரும்; கன்றும் தாய்மாட்டின் பின்னாலேயே ஓடியோடிப்போகும். அது போல நமக்கும் ஈச்வரனுக்கும் உள்ள ஸம்பந்தம்.

இந்த உவமையால் நமக்குத் தெரிபவை நாலுண்டு. பகவான் தாய் போலவும் நாம் சேய் போலவும் என்பது அவன் நம்மைப் படைத்திருப்பதாலும் ஒத்து வருகிறது. அவன் ரக்ஷகனாகவும் நாம் ரக்ஷ்யராகவும் இருப்பதாலும் ஒத்து வருகிறது. அவன் வத்ஸலனாகவும் நாம் அவனன்புக்கு ஏங்குபவராகவும் இருப்பதாலும் ஒத்து வருகிறது. தாய்ச்சேய்த் தொடர்பிலும், குறிப்பாக, அன்றீன்ற பசுவும் கன்றும் என்ற தொடர்பு, உலகில் கண்கூடாகக் காணும் நெருங்கிய தொடர்பாகிறது. இது பொருந்தினாலும், இதை மாற்றிப்போட்டு, தேனு வத்ஸத்தைத் தொடர்ந்து ஓடுவது போல, நாம் பகவானைத் தொடர்ந்தோட வேண்டும் என்று சொன்னது யுக்தமோ? என்றால், பசுவுக்குக் கன்றின்பால் சுரக்கும் அன்பு போன்ற அன்பு, தாய்க்குச் சிசுவிடம் போன்றதொன்று, நமக்கு இறைவனிடம் ஏற்படவேண்டும் என்பது நடாதூர் அம்மாள் கதை முதலியவற்றால் விளங்கும். ஈற்றா போல இறைவன் உன்னைத் தொடர்வதற்கும், ஈற்றாவைப்போலே இறைவனை நீ தொடர்வதற்கும், ஆசைப்படு.

## 374.ஈனன் நானென்று இறையை விழை.

தன் தோஷங்களைச் சொல்லி, பகவானிடம் ஆசை கொள்.

> दुश्शीलो मांसचक्षुः निरवधिदुरितो वीतलज्जो विलोलः
> प्रेक्षाहीनोन्यसङ्गात् कृतमपि लघयन् शीलमन्तर्दधानः ।
> कर्मज्ञानादिशून्यो निरुपधिविहितां ज्ञानदृष्टिं विनिन्दन्
> प्रख्याप्यैवं स्वदोषान् पतिगुणरसिकः तद्दिदृक्षां चचक्षे॥
>
> *–த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி.*

சீலமில்லாச் சிறியேன் என்னும் பதிகத்தில் நமக்குக் கிடைக்கும் முக்கிய நீதி, நம் தோஷங்களை அரற்றி, இறைவனிடம் அன்பு காட்டவேண்டும் என்பதாம்.

> நான் தீயொழுக்கக்காரன். ("சீலமில்லாச் சிறியேன்.") ஊனக்கண் கொண்டவன். ("என் கண் காண") பாவம் செய்தவன். ("ஈவிலாத தீவினைகள் எத்தனை செய்தனன் கொல்?") வெட்கம் கெட்டவன் ("நாணமில்லாச் சிறுதகையேன்") சஞ்சலக்காரன் ("ஏழையேன் நோக்குவனோ?") அறிவிலி ("நாக்கு நீள்வன் ஞானமில்லை"). இதற்குமுன் கிடைத்தது போதாதென்று மேலும் விரும்புபவன் ("அறிந்தறிந்து தேறித்தேறி") சீலத்தை உள்மறைத்தவன் ("கண்டுகொண்டென் கைகளார") கர்மயோகமோ ஜ்ஞாநயோகமோ அற்றவன் (இடகிலேன் ஒன்றட்டகில்லேன் ஐம்புலன் வெல்லகில்லேன்") ஞான திருஷ்டியையும் பழிப்பவன் ("பாவியேன் காண்கின்றிலேன்") இவ்வளவு குறைகளையும் சொல்லி அரற்றி,

"தழுவிநின்ற காதல் தன்னால்" என்று பகவானின் குணங்களை ரஸிப்பவனாகவும், அவனைக் கண்ணால் காண அவாவுகிறவராகவும் நம்மாழ்வார் ஆனார்.

நமக்குள்ள தாழ்வுகளை வாய்விட்டுச் சொல்லி, நம் இறையன்பையும் வெளிப் படுத்தவேண்டும். நைச்யாநுஸந்தாநம் பண்ணி பகவத்ப்ரேமையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

## 375.ஈரிரண் டு தவிர் வாக்கில் பிழை.

நாலு வாக்குக்குற்றங்களைத் தவிர்க்கவேண்டும்.

पारुष्यमनृतं चैव पैशुन्यं चैव सर्वतः।

अनिबद्धप्रलापश्च वाङ्मयं स्याच्चतुर्विधम्॥

इत्यादिना दर्शितविविधवाचिकपापोदयप्रतिबन्धिनश्च सर्वे व्यापाराः

*-ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷா*

பஞ்சகாலப்ரக்ரியையை விளக்கும்போது நாலாவதான ஸ்வாத்யாய காலத்தில் பண்ணவேண்டியதைக் கூறும்போது இந்த அறிவுரை வழங்கப்படுகிறது:

வன்சொல், பொய்ச்சொல், கோள்சொல், ஒவ்வாச்சொல், என்று நாலு வகைக் குற்றங்கள் வாக்கில் வரக்கூடும். இவற்றால் பாவம் உதிக்காதவாறு இவற்றை விலக்குவதற்கான செயல்களெல்லாம் ஸ்வாத்யாயத்தில் சேரும்.

இங்கு சொன்ன நான்கு குற்றங்களாவன: கடுமையாகக் கடிந்து பேசுவது, உண்மைக்குப் புறம்பாகப் புனைந்து பேசுவது, பிறர்க்கெதிராகக் காது கடித்துக் கோள் மூட்டுவது, சம்பந்தம் இல்லாமல் வாய்க்கு வந்தபடி பேசுவது, என்கிற நான்கும் விலக்கத்தக்க பேச்சுகள். இங்கு மேற்கோள் காட்டிய ச்லோகம் மனுஸ்ம்ருதியில் இருப்பது. அந்ருதம் என்பதற்குப் பதிலாக அதிவாதம் என்று பாடபேதம் உண்டு. மிகைப்படுத்திப் பேசுவது கூடாது என்று அர்த்தம். இதுவும் பொய் பேசலாகாது என்பதில் அடங்கும். இந்த நாலு குற்றங்களும் ஏற்படாதவாறு நாம் ஜாக்கிரதையாகப் பேசவேண்டும்.

## 376.ஈதையில் இறையைக் கதறி அழை.

ஈதை என்றால் பெரும் துயரம். கஷ்டகாலத்தில் பகவானைக் கதறிக்கூப்பிடு.

क्रन्दामि सम्प्रत्यगतिस्तवाग्रे। क्रन्दामि। आक्रोशामि। अनेन गोविन्देति यदाक्रन्दत् कृष्ण

ा मां दूरवासिनी। ऋणं प्रवृद्धमिव मे हृदयान्नापसर्पति इति शरण्यवाक्यं सूच्यते

*–ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.*

தான் பண்ணாத பாவம் கிடையாதென்று புலம்பிக் கதறும் ஆளவந்தார் ச்லோகத்தின் உரையில் இது.

> கத்திக்கதறுகிறேன். கூப்பாடு போடுகிறேன். இறைவனிடம் கூப்பாடு போடுவானேன் என்றால், முன்பொரு நாள் த்ரௌபதி "கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாகதாம்" என்று கூக்குரலிட்ட போது, கிருஷ்ணன் புடவை சுரக்கப் பண்ணின கதையையும், அதை நினைவு கூர்ந்து கிருஷ்ணன் "த்ரௌபதி என்னை கோவிந்தா என்று வெகு தூரத்திலிருந்து கூவியழைத்தபொழுது, என் நெஞ்சு கலங்கியது. கடன் வளர்ந்துவிட்டாற்போல, என் இதயத்திலிருந்து அந்தப் பாரம் அகலாமல் இருக்கிறது." என்று கூறியதையும் இது குறிக்கிறது.

பாஞ்சாலி, கிருஷ்ணை, என்கிற திரௌபதி, தான் மானபங்கப்படுத்தப்பட்டபோது, எங்கோ வெகு தூரத்தில் வேற்றூரில் இருந்த கிருஷ்ணனைக் கோவிந்தா என்று கதறி உதவிக்கு அழைத்தாள். ஆக்ரந்தத் என்று வார்த்தை. க்ரந்தாமி என்ற அதே வார்த்தையை இந்த ச்லோகத்தில் ஆளவந்தார் இட்டிருப்பது அந்தக் கதையை நினைவு கூர்வதற்காம். பகவான் கதறி முறையிடுபவர்களைக் கைவிடாதவன்; அவர்களிடம் கடன் பட்டவன் போல் தன்னை நினைப்பவன். இப்படி அவனே தன்னைப் பற்றிச் சொல்லிக்கொள்பவன். ஆகையால் ஆளவந்தாரும் அவனிடமே கதறுகிறார். நமக்கு நீதி என்ன? துயரங்கள் நேரும்போது, இறைவனை உதவிக்கு அழைக்கலாம்; கதறியழைக்கலாம்; கடனாளி போலக் காத்திருக்கிறான் அவன் நமக்கு உதவுவதற்கு.

இதுவரை சொன்ன நான்கு உபதேசங்கள் வருமாறு:

- ஈற்றா போலிறை தொடர விழை.
- ஈனன் நானென்று இறையை விழை.
- ஈரிரண் டு தவிர் வாக்கில் பிழை.
- ஈதையில் இறையைக் கதறி அழை.

## 377.ஈரெழுத்துச்சரி மோக்ஷமடை.

ஹரி என்கிற இரண்டே இரண்டு எழுத்துகளை உச்சரிக்கிற மாத்ரத்தால் மோக்ஷம் கிடைக்கும்.

> ஹரிரித்யக்ஷரத்வயத்தை அவஶமாகவாகிலும் உச்சரித்துப் பரமபதகமநத்துக்குப் பரிகரபந்தம் பண்ணுகையே பண்டிதக்ருத்யமாயிருக்க
>
> – *பரமபதஸோபாநம்.*

இரண்டாவதான நிர்வேதபர்வத்தில், நற்கதிக்கான எளிதான உபாயங்களையும் பண்ணாமல், தப்புக்காரியங்களையே பண்ணி வந்ததற்காக நிர்வேதப்பட வேண்டும் என்பதைக் கூறுகிறார்:

ஹரி என்கிற இரண்டு எழுத்துகளை எதேச்சையாகச் சொல்ல நேரிட்டால் கூட, பரமபதம் போவதற்கு மூட்டை கட்டினதாகும். ஆகையால் கெட்டிக்காரர்கள் இதையே பண்ணவேண்டுமாயிருக்க.

இந்த வாக்கியத்தில் ஒரு ப்ரமாணச்லோகத்தின் பல பதங்களை அப்படியே அனுவதித்து அதை நினைவூட்டுகிறார். அந்த ச்லோகம் வருமாறு:
सकृदुच्चरितं येन हरिरित्यक्षरद्वयम्। बद्धः परिकरस्तेन मोक्षाय गमनं प्रति॥ விஷ்ணு தர்மத்தில் இருப்பது இது. இதன் அர்த்தம்: ஒரே ஒரு தடவை எவன் ஹரி என்கிற இரண்டே இரண்டு எழுத்துகளை உச்சரித்தானோ, அவன் மோக்ஷத்துக்குப் போவதற்கு மூட்டை கட்டியாயிற்று. ஸக்ருத், த்வயம் என்ற இரண்டு பதங்களும் உபாயத்தின் எளிமையைத் தெரிவிப்பவை; ஒரே ஒரு தடவை சொன்னாலும் போதுமே; நிரந்தரமாக ஸங்கீர்த்தனம் பண்ணாவிட்டால் போகிறது. இரண்டே இரண்டு எழுத்துகள் போதுமே; ஸஹஸ்ரநாமம் மொத்தத்தையும் சொல்லாவிட்டால் போகிறது. இவ்வளவு லகுவான உபாயம் இருக்கிறதே என்பதாம். அவசமாக என்ற பதத்தின் கருத்து, இந்த உச்சாரணம் தன்னையும் அறியாமல், நேர்ந்து விட்டால் கூடப் பலன் கிடைக்கும்; தெரிந்து உச்சரித்தால், கேட்கவும் வேண்டுமோ? என்பதாம். இந்த மூட்டை—திருஷ்டாந்தத்தால் நாம் தெரிந்து கொள்பவை பல. பிரயாணத்துக்கு மூட்டை கட்டியாயிற்று என்றால், ஸந்நாஹம் பண்ணியாயிற்று, விரைவிலேயே பயணம் தொடங்கும் என்பது போல, ஹரிநாமகீர்த்தனம் பண்ணினவன் விரைவிலேயே மோக்ஷத்துக்கான பயணத்தைத் தொடங்குவான்; விரைவிலேயே மோக்ஷம் அடைவான் என்பது ஒன்று. மூட்டை கட்டிக்கொள்ளாமல் பயணிப்பவன் எளிதாக குறித்த இடத்துக்குப் போய்ச்சேரமுடியாதது போல, நாமஸங்கீர்த்தனம் முதலிய உபாயங்களை அனுஷ்டிக்காதவன் மோக்ஷம் பெறுவது கடினம் என்பதும் ஒன்று. மற்ற நெடும்பயணங்களுக்கு, வழிச்சாப்பாடு முதலிய மூட்டைகள் கனமாக இருக்கும்; ஆனால் மோக்ஷத்துக்கான மூட்டை இரண்டே இரண்டு எழுத்துகளில் எளிதாக அமைகிறது. என்பதும் கவனத்துக்குரியது.

## 378.ஈசாண்டான் படி இன்பம் அடை.

ஈசாண்டான் காட்டிய வழியில் இன்பம் அடை.

> அநந்யப்ரயோஜநராய்ப் பற்றினார்க்கும் பலாந்தரங்கள் ஆநுஷங்கிகமாக வரும். . अभिलषितदुरापा ये पुरा कामभोगाः जलधिमिव जलौघास्ते विशन्ति स्वयं नः என்று ஈசாண்டானும் தாம் அருளிச்செய்த ஸ்தோத்ரத்திலே நிபந்தித்தார்.
>
> – *ரஹஸ்யத்ரயஸாரம்.*

உங்களுக்கு இன்பங்களை அடைய விருப்பமா? அதற்கு ஒரு விசித்திரமான உபாயம் இருக்கிறது. அது என்னவென்றால், மற்ற இன்பங்களை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு பகவானிடம் மட்டுமே பக்தி செலுத்துங்கள். மற்ற இன்பங்களும் தானாகவே கிடைத்துவிடும். இதைச்சொல்லும் தேசிகஸூக்தி இதோ:

வேறு பயன்களை நாடாமல் இறைவனைப் பற்றினவர்க்கும், அறம்பொருளின்பப் பலன்களும் வாய்க்கும். ஈசாண்டான் தாம் அருளிய ச்லோகத்தில் “முன்பு ஆசைப்பட்டும் கிடைக்காத காமபோகங்கள் பல, இப்போது அவற்றைத் துறந்து

பகவானைப் பற்றிக்கொண்ட நாளில், தானாகவே கிடைக்கின்றன. நீர்ப்பெருக்குகள் ஸமுத்ரத்துக்குப் போவது போல, எங்களிடம் அந்தக் காமபோகங்கள் நுழைகின்றன." என்கிறார்.

இதில் ஸமுத்ரத்ருஷ்டாந்தத்தால் நாம் அறிவது என்னவென்றால் மூன்றைச் சொல்லலாம். ஸமுத்ரம் தானொரு முயற்சியும் பண்ணாமலே பகவத்பரதந்த்ரனாக இருக்கும்போது, நதிகளெல்லாம் தாமே அங்கு சென்று விழுகின்றன. அது போல பக்தரான நமக்குக் காமபோகங்கள் தாமே வரும்; நாம் முயல வேண்டிய தேவையில்லை. இதை ஸ்வயம் என்ற பதத்தால் தெரிவித்தார். இந்த வரவுகளை ஸமுத்ரம் திரஸ்கரிப்பதுமில்லை; நீர்மட்டத்தில் அதிக உயர்வை அடைவதுமில்லை; ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. நாமும் பகவத்ப்ரஸாதத்தால் வரும் காமபோகங்களைத் திரஸ்கரிக்கவும் வேண்டாம்; திளைத்துத் திணறவும் வேண்டாம். ஏகரூபமாக இருந்து ஏற்றுக்கொள்வோம். இது இரண்டாவது கருத்து. கடைசியாக மூன்றாவது என்னவென்றால், ஸமுத்ரமும் நீர்நிலை; அதில் வந்து சேரும் நதிகளும் நீர்வெள்ளங்கள்; ஸமுத்ரம் மிகப்பெரிய நீர்நிலை. அது போல பகவத்பரனும் மிகப்பெரிய ஆனந்தமயனோடு போகஸாம்யம் கொண்டவன்; அவனுக்குக் கிடைப்பவையும் சிறுச்சிறு காமபோகங்கள்; பேரானந்தத்தில் கலக்கும் சிற்றின்பங்கள். இந்த மூன்று கருத்துகளும் ஈசாண்டான் காட்டுகிற திருஷ்டாந்தத்தால் நாம் அறிபவை. ஆநுஷங்கிகப் பலன் என்றால், நாடிய பலனோடு கூட, நாடாமலே கிடைத்த மற்ற பலன் என்று அர்த்தம். புரா (முன்னர்) என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், பரமைகாந்தியாவதற்கு முன்னாலே, மற்ற இம்மைப்பலன்களிலும் நாட்டம் கொண்ட நாளிலே, அவை கிடைத்தற்கரியனவாய் இருந்தன என்பதாம். உலகியல் இன்பங்களை அடைவதற்குப் பல உபாயங்கள் உண்டு. அதில் ஈசாண்டான் படி என்கிற உபாயம் சிறந்ததாம். சார்வாகன் படி என்பது, தர்மாதர்மங்களைக் கணிசியாமல் இன்பமே குறியாக இருந்து, அதற்காகவே உழைத்துப் பெறுவது என்பது. யயாதிப்படி என்பது தர்மம் மீறாமல், அதே சமயத்தில், காமத்துக்கு முதலிடம் கொடுத்து, இன்பமடைவது. ஈசாண்டான்படி என்பது பகவானையே பற்றிக்கொண்டு, வேறு நாட்டங்களைத் துறந்த நிலையிலும், அந்தப் பகவான் ஆநுஷங்கிகமாகக் கொடுத்த இன்பங்களைத் துய்ப்பது என்பது. ஈசாண்டான் என்பவர் எழுபத்து நாலு ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவர். திருமலை ஈச்சம்பாடியாரின் குலகூடஸ்தர் என்னத்தகும். அவர் ஒரு ஸ்தோத்ரக்ரந்தம் எழுதியிருக்கிறார். (இப்போது கிடைக்கவில்லை.) அதில் ஒரு ச்லோகப்பாதி மேலே தேசிகனால் உதாஹரிக்கப்பட்டது.

## 379.ஈச்வரன் நட்பால் குருவையடை.

நல்ல ஆசார்யனை அடைவதற்காகப் பகவானுக்கு அநுகூலன் ஆகு.

காருணிகோத்தமராய் இருப்பார் சில தேசிகர்
ईश्वरस्य च सौहार्दं यदृच्छासुकृतं तथा।

विष्णोः कटाक्षमद्वेषं आभिमुख्यं च सात्त्विकैः।

सम्भाषणं षदेतानि ह्याचार्यप्राप्तिहेतवः॥

என்கிறபடியே நேர்பட்டு

— *ரஹஸ்யத்ரயஸாரம்.*

கொடுப்பினை இருந்தால் தான் ஆசார்யன் கிடைப்பார்.

> ஆசார்யப்ராப்திக்கு ஆறு காரணங்கள்: 1.ஈச்வரனின் நட்பு, திருவுள்ளவுகப்பு. 2.எதேச்சையாகப் பண்ணின புண்ணியம். 3.பகவானின் அருட்பார்வை, கடாக்ஷம். 4.விஷ்ணுத்வேஷம் இல்லாமல் இருப்பது. 5.ஆபிமுக்யம், அதாவது விஷ்ணுவுக்கு முகம் கொடுத்தல். 6.ஸாத்விகஸம்பாஷணம், அதாவது நல்லவர்களுடன் உரையாடுவது. இந்த ஆறும் உள்ளவர்களுக்கு காருணிகோத்தமரான ஆசார்யர்கள் நேர்ப்படுவர்.

இங்கொரு சந்தேகம். பகவானின் கடாக்ஷத்தால் ஆசார்யன் கிடைப்பாரா ? ஆசார்யனின் கடாக்ஷத்தால் பகவான் கிடைப்பாரா? இரண்டையும் இரண்டு வெவ்வேறு இடங்களில் சொல்லியிருப்பதால் ஒன்றையொன்று சார்தல் என்னும் குறை வராதா? எது முதலில்? ஆசார்யகடாக்ஷமா, பகவத்கடாக்ஷமா? இரண்டுக்கும் பரஸ்பர விரோதம் இல்லாமல் தாத்பர்யத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். பகவத்ப்ராப்திக்கு ஆசார்யகடாக்ஷம் அவசியம்; ஆசார்யப்ராப்திக்குப் பகவத்கடாக்ஷம் அவசியம்; என்கிற இரண்டுமே இருக்கட்டுமே, முரணில்லையே. அல்லது, ஆசார்யப்ராப்திக்கான அளவுக்கு ஈச்வரஸௌஹார்தம் ஏற்பட்டு, அதன் விளைவாக ஆசார்யன் கிடைத்து, அதன் பயனாக மேலும் பகவத்கடாக்ஷம் கிடைக்கும் என்பதிலும் முரண் இல்லை. அவனன்றி அணுவும் அசையாது என்றிருக்க, ஆசார்யன் கிடைப்பது அவனுடைய ஸௌஹார்த்தத்தால் என்பது யுக்தமே. சொல்ல வந்த நீதி: ஆசார்யன் கிடைப்பது அதிருஷ்டக்காரர்களுக்கு மட்டுமே வாய்க்கும். அந்த அதிருஷ்டத்தைப் பெற ஆறு தேவை. அந்த ஆறில் முதலாவது ஈச்வர ஸௌஹார்தம். நாம் இந்த ஆறையும் பெற்று அதன் மூலமாக ஆசார்யனைப் பெற முயலவேண்டும்.

## 380.ஈரெழு பண்புடை குருவை அடை.

பதினாலு தகுதிகள் பெற்றவரைக் குருவாக ஏற்றுக்கொண்டு ஆச்ரயி.

> सिद्धं सत्सम्प्रदाये स्थिरधियमनघं श्रोत्रियं ब्रह्मनिष्ठम्
> सत्वस्थं सत्यवाचं समयनियतया साधुवृत्या समेतम् ।
> डम्भासूयादिमुक्तं जितविषयिगणं दीर्घबन्धुं दयाळुम्
> स्वालित्ये शासितारं स्वपरहितपरं देशिको भूष्णुरीप्सेत् ॥
>
> – *ந்யாஸவிம்சதி.*

நல்ல வரன் தேடுவதற்கு நெடுநாள் அலசிப்பார்ப்பது போல, நல்ல ஆசார்யனைப் பெறுவதற்கும் அலசியலசிப் பார்க்கவேண்டும். என்னென்ன பார்க்கவேண்டும் என்பதற்கு இதோ ஒரு பட்டியல். முதல் ச்லோகத்திலேயே இருப்பதால் முக்கியமான அறிவுரை இது.

> நல்ல ஸம்ப்ரதாயஸித்தி வாய்க்கப்பெற்றவரும், ஸ்திரமான புத்தி கொண்டவரும், குறைகளற்றவரும், ச்ரோத்ரியரும், பரப்ரஹ்மத்தில் நிலைப்பாடு கொண்டவரும்,

ஸத்வகுணத்தில் இருப்பவரும், உண்மை பேசுபவரும், தம் சமயக்கொள்கைப்படியான நன்னடத்தை கொண்டவரும், டம்பம் அஸூயை முதலிய துர்க்குணங்கள் இல்லாதவரும், புலன்களை அடக்கியவரும், நீண்டகால உபகாரியும், தயாளுவும், தவறுகளைத் திருத்துபவரும், தனக்கும் பிறர்க்கும் நல்லதை நாடுபவரும், ஆன ஆசார்யரை அடைய விரும்பவேண்டும். முன்னுக்கு வர விரும்புபவனுக்கு இது முக்கியம்.

**1.**தான்தோன்றியாக எத்தனையோ பேர் சொந்தக்கொள்கைகளைப் பரப்பி ஆசார்யராக விரும்புகிறார்கள். அவ்வாறில்லாமல், ஓராண்வழியானதொரு ஸம்ப்ரதாயத்தில் பயின்று ஸித்தரானவரையே ஆசார்யராக வரிப்பது நன்று. **2.**சிலபேர் கொள்கைகளை அடிக்கடி மாற்றிக்கொள்கிறார்கள். க்ஷணசித்தம் க்ஷணபித்தம் என்றில்லாமல் ஸ்திரமான புத்தி கொண்டவரை ஆசார்யராக வரிக்கவும். **3.**அப்பழுக்கில்லாதவரே ஆசார்யராகத் தகுதி பெற்றவர். **4.**வேத வேதாந்தக் கல்வியை முடித்த ஶ்ரோத்ரியரையே குருவாக ஏற்கவும். **5.**கடவுட்பற்றுக்கும் மேலாக ப்கவானிடம் நிஷ்டை பெற்ற ஒருவரைக் குருவாக்கிக்கொள்ளவும். மேலும், குரு எத்தகையவராக இருக்கவேண்டும் என்றால்: **6.**ஸாத்விகர். **7.**ஸத்யவாதி. **8.**நன்னடத்தை கொண்டவர்; அதுவும், ஸமயாசாரப்படி ஒழுக்கம் கொண்டவர். **9.**டம்பமடித்துக்கொள்வது, அழுக்காறு (அசூயை) கொள்வது, முதலிய துர்க்குணங்கள் இல்லாதவர். **10.**இந்த்ரியங்களை வென்றவர். **11.**நமக்குச் சிரகால உதவி பண்ணக்கூடியவர். **12.**அருளாளர். **13.**நாம் பிழை புரியும்போது கண்டிப்பவர். **14.**தனக்குப்போலே பிறருக்கும் இதத்தைக் கருதுபவர். இந்தப் பதினாலு பண்புகளையும் கொண்டிருக்கவேண்டும் குருவானவர். முதல் பத்தும் அவரது சொந்தத் தகுதிகள். கடைசி நாலும் அவரால் நமக்குப் பயன் கிடைப்பதற்கான பண்புகள். இந்தப்பதினாலில் எந்தவொன்று குறைந்தாலும் இழுக்குத்தான். சரியான ஆசார்யனைத் தேடிப் பிடிப்பது எளிதன்று. முயன்று தேடி, ஆசார்யரை வரிக்கவேண்டும். பூஷ்ணு என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், தன் பிற்காலநலனில் அக்கறை கொண்டவன், இந்த விஷயத்தில் கோட்டை விட்டுவிடவேண்டாம் என்பதாம். ஈப்ஸேத் என்ற பதத்தின் கருத்து, இத்தகைய ஆசாரியரை அடைவதற்கு அவா கொள்ளவேண்டும் என்பதாம். எக்கேடு கெட்டுப்போகட்டும் என்று கைகழுவிவிடுபவர், தப்பு பண்ணினாலும் கண்டிக்காமல் விட்டுவிடுபவர், கருணையில்லாமல் கடிபவர், சில வருஷங்கள் கற்பித்தபின் அம்போ என்று விட்டு விடுபவர், தம் புலன்களின் ஈர்ப்பில் சிக்கியவர், தற்பெருமையோ பொறாமையோ இது போன்ற வேறொரு தீய பண்போ மிகுந்தவர், நடத்தை கெட்டவர், பொய் பேசுபவர், ராஜஸ தாமஸ குணங்களில் உழல்பவர், பரம்பொருளில் ஈடுபாடில்லாமல் மேலுக்கு மட்டும் பக்தி காட்டுபவர், வேதக்கல்வியை ஒரு சாகையேனும் முடிக்காதவர், புத்திச் சஞ்சலம் கொண்டவர், அஸாம்ப்ரதாயிகமாகக் கற்றவர், என்கிற பதினாலு பேருக்கும் குருவாகும் தகுதி கிடையாது.

எதை எப்படி அடைவது நல்லது என்பது பற்றி இதுவரை பார்த்த நாலு நீதிகளாவன:

- ஈரெழுத்துச்சரி மோக்ஷமடை.
- ஈசாண்டான் படி இன்பம் அடை.
- ஈச்வரன் நட்பால் குருவையடை.
- ஈரெழு பண்புடை குருவை அடை.

## 381.ஈரிரு புலமை நொந்து கிட.

நாலு விதமான பாண்டித்யத்தாலும் நிர்வேதப்படு.

> सिद्धे महति पाण्डित्ये सनिर्वेदं चतुर्विधे।
> प्रणव द्विचतुष्काद्यैः प्रशान्तैरेव मोदते॥
>
> *–ஸங்கல்பஸூர்யோதயம்.*

இறையுணர்வு பெற்றவன் எப்படி மகிழ்வான் என்பதை விஷ்ணுபக்தி என்பவள் இவ்வாறு கூறுகிறாள்:

> பெரும்புலமை நாலுவிதத்தில் ஏற்பட்டிருந்தாலும், அதை நொந்துகொண்டு, ப்ரணவம், அஷ்டாக்ஷரம், முதலிய மனவமைதிச் சாதனங்களால் மட்டுமே மகிழ்கிறான்.

உபநிஷத்தில் "பாண்டித்யம் நிர்வித்ய" என்றோர் அறிவுரை உண்டு. ஸ்ரீபாஷ்யத்திலும் அநாவிஷ்காராதிகரணத்தில் விசாரிக்கப்பட்ட வாக்கியம் இது. நிர்வேதவிரக்திபலகம் என்று உபநிஷத்பாஷ்யம். இவ்வர்த்தத்தைத் தருகிறது ச்லோகத்தின் முதற்பாதி. நிர்வேதம் தரும் புலமை வேண்டும் என்று நீதி. புலமையை நாலுவிதத்தில் என்கிறாரே, அது என்ன நாலுவிதம்? இந்தக்கேள்விக்குப் பதிலிலும் நாலுவிதம். ஏழாம் வேற்றுமையில் இருப்பதால், நாலு விதமான புலமையில் என்றும், நாலு விதமானதில் புலமையில் என்றும், இரண்டு அர்த்தமும் கொள்ளலாம். வேதத்தில், ஸ்ம்ருதியில், இதிஹாஸங்களில், புராணங்களில், ஆக நாலு விதமானதிலும் புலமை என்று சில முன்னோர் கூறிய அர்த்தம். வேதத்தில் நினைவாற்றல், தர்மசாஸ்த்ரத்தில் நிர்ணயஸாமர்த்தியம், இதிஹாஸத்தில் கதைமூலம் நீதியறிதல், புராணத்தில் தத்வஜ்ஞானம், என்ற நாலுவிதமான புலமை என்னலும் கூடும். இதே ஸங்கல்பஸூர்யோதயத்தில் பின்னொரு ச்லோகத்தில், கவித்வம், வாதப்புலமை, பேச்சாற்றல், கற்பிக்கும் திறன், என்ற நாலைச் சொல்கிறாரே, அந்த நாலும் தான் இங்கே நாலுவிதப்புலமை, என்பர் சிலர். "அதீதி போதாசரணப்ரசாரை:" என்ற ப்ரஸித்தச்லோகத்தின் படி, கற்றல், அறிதல், ஒழுகுதல், பரப்பல், என்ற நாலுவிதத்தையும் கொள்ளலாகும். இந்த நாலுவிதமான நாலு விதத்தில், எந்த நாலு விதத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, அந்த நாலுவிதப்புலமையும் நிர்வேதத்தையும் வைராக்யத்தையும் ஏற்படுத்த, முக்கிய மந்த்ர ஜபங்கள் மூலமே மகிழ்ச்சி உண்டாகும் என்கிறாள் விஷ்ணுபக்தி. ஏவ, மட்டுமே, என்றதால், இந்தப்புலமை ஒரு நிலைக்குமேல் மோதஹேதுவாகாது (மகிழ்ச்சி

என்கிறாள். நாம் பெரும்புலமையைப் பலவிதமாய்ப் பெற்றும், நிர்வேதமடைந்து, முக்கிய மந்திரங்களால் மகிழ்வோமாக.

## 382.ஈவாய் கலக்கினும் முன்பை விட.

நீ தானம் பண்ணும்போது யாரேனும் உன் மனத்தைக் கலைத்தாலும், நீ மேலும் நிறைய தானங்களைப் பண்ணு.

> क्षोभितो विबुधैः कश्चित् गम्भीर मधुराशयः।
> चन्द्र रत्न गजाश्वादि सहितां दिशति श्रियम्॥
>
> *—ஸுபாஷிதநீவி.*

பாற்கடலை உவமையாகக் காட்டி இந்த நீதியை விளக்குகிறார். ச்லோகத்துக்கு இரண்டு அர்த்தங்கள். முதலாவது வருமாறு:

> கெட்டிக்கார்களால் கலக்கப்பட்ட ஒருவன் ஆழ்ந்த இனிய எண்ணங்கள் கொண்டவன், சந்த்ரகாந்தமணி, யானைகுதிரைகளோடு கூடிய செல்வத்தைத் தருகிறான்.

ச்லோகத்தின் இரண்டாவது அர்த்தம்:

> தேவர்களால் கடையப்பட்ட ஆழ்ந்த நீர்நிலையானது சந்திரன், கௌஸ்துபமணி, ஐராவதயானை, உச்சைச்ரவஸ்குதிரை, இவற்றோடு கூட ஸ்ரீதேவியையும் வழங்கியது.

தானத்தைத் தடுப்பவர் எவ்வளவு கெட்டிக்காரர்களாக இருந்தாலும், அவர்களுக்கு மசியாமல், மேன்மேலும் நிறைய வாரி வழங்குவது நல்லது. இதற்கு நிதர்சனம் பால்சமுத்திரம். அதைக் கலக்கிக் கடையும்போது முன்பை விட அதிகமாக உயர்ந்த வஸ்துக்களை அது வாரி வழங்கியது. அதைக் கலக்கியவரும் விபுதர்கள். (தேவர்கள்). வள்ளலைக் கலைப்பவர்களும் விபுதர்கள். (வல்லுனர்கள்.) அதுவும் ஆழமானது. வள்லலும் கம்பீரமானவன். அதுவும் மதுராஶயம். இனிய பாலின் நீர்நிலை. இந்த வள்லலும் மதுராஶயன். இனிய எண்ணம் கொண்டவன். அதுவும் சந்த்ரனையும் ரத்தினத்தையும், யானையும் குதிரையையும் ஸ்ரீதேவியையும் தந்தது. இவனும் சந்த்ரரத்தினத்தையும் யானைகுதிரைகளையும் செல்வத்தையும் தருகிறான். அது கலக்கப்படும்போது முன்பை விட அதிகமாகவே வாரி வழங்கியது. இவனும் அவ்வாறே. நீயும் ஆழ்ந்த இனிய எண்ணம் கொண்டவனாய்,

கலக்கத்துக்கு மசியாமல், முன்பை விட அதிகமாக வாரி வழங்கு. பிறகு அந்த விபுதர்களே உன்னைப் பாராட்டுவார்கள். இந்தப் பாராட்டுகளுக்கிடையில் நீ மேலும் கொடுத்துக்கொண்டேயிரு. (க்ஷோபித என்பதற்கு இந்தக் கருத்தையும் சில உரைகளில் காண்கிறோம்.)

## 383.ஈண்டென துக்கக் கடலைக் கட.

ஈண்டென என்றால் விரைவாக என்றர்த்தம். துக்கக் கடலை விரைவாகத் தாண்டு.

> महता पुण्यपण्येन क्रीतेयं कायनौस्त्वया।
>
> प्राप्तुं दुःखोदधेः पारं त्वर यावन्न भिद्यते।
>
> என்கிறபடியே த்வரை உண்டானாலும்.
>
> *—ரஹஸ்யத்ரயஸாரம்.*

ஸாத்யோபாயஶோதநாதிகாரத்தில் தொடக்கத்தில் உதாஹரிக்கப்பட்ட இந்த ச்லோகம் வராஹபுராணத்தில் இருப்பது.

> "புண்ணியம் என்ற பெரிய விலை கொடுத்து வாங்கப்பட்டுள்ள இந்தச் சரீரம் என்னும் படகு உடைந்து போவதற்குள்ளாக, துக்கம் என்னும் கடலைக் கடப்பதற்கு அவசரப்படு" என்ற ப்ரமாணவசனப்படி அவசர உணர்வு ஏற்பட்டாலும் கூட.

இதில் பரம்பராரூபகம் என்கிற அணி ரசிக்கத்தக்கது. துக்கம் என்பது சமுத்திரம். சரீரம் என்பது படகு. புண்ணியம் என்பது இந்தப் படகுக்கான விலை. நிறைய விலை கொடுத்து இந்தப்படகை வாங்கியிருக்கிறோம். (அதாவது, மிகுந்த புண்ணியத்தின் பலனாக நமக்கு மனிதப்பிறவி வாய்த்திருக்கிறது.) இந்தப்படகைக்கொண்டு துக்கக்கடலைக் கடப்பது இயலும். இதில் நாம் த்வரைப்படவேண்டும். இல்லாவிட்டால் காலம் தாழ்த்துவதால் படகு உடைந்து போகும். (அதாவது மரணம் நேரும்.) விளம்பிக்காமல் படகு உடைவதற்குள் கரைசேரவேண்டும். (அதாவது ஆயுள் முடிவதற்குள், மானுடதேகத்தைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும், துக்கத்திலிருந்து விடுபடுவதற்கு.) விளம்பித்தால் என்னவாகும்? படகுடைந்தவன் கடலில் தத்தளிப்பது போலத் தத்தளிக்க நேரும்.

## 384.ஈச்வரன் விட்ட வழியில் நட.

ஈச்வரன் விட்ட வழியிலல்லது நாம் வேறு விதமாக நடக்க முடியாது. நம்மை ஈச்வரன் நல்ல வழியில் விடுமாறு நடந்து கொள்ளலாம்.

अज्ञो जन्तुरनीशोयं आत्मनस्सुखदुःखयोः ।
ईश्वरप्रेरितो गच्छेत् स्वर्गं वा श्वभ्रमेव वा॥
इत्युक्तस्वभावस्य गर्भजन्म जरामरण नरकादि दुःखचक्रमध्यवर्तिनः
ஸ்தோத்ரபாஷ்யம்.

இது அபூதபூர்வம் என்று தொடங்கும் ச்லோகத்துக்கான உரையில்.

> "இந்த ஜந்து (நம்மையும் சேர்த்துத்தான்) அறிவுகெட்டது; கையாலாகாதது; தன் சுகதுக்கத்தைத் தானே அமைத்துக்கொள்ள வக்கில்லாதது. ஈச்வரன் தூண்டுகிறபடி ஸ்வர்க்கத்துக்கோ படுகுழிக்கோ போகும்." இவ்வாறு கூறப்பட்ட தன்மையனாய், கருவிலும் பிறவியிலும் மூப்பிலும் சாவிலுமாகத் துக்கவுருளையின் இடையில் உழல்கிறவனுடைய

இப்படி அத்யந்தபரதந்த்ரமான வாழ்க்கையில் ஸௌக்யத்துக்காகத் திட்டம் தீட்டுவது, சூழ்ச்சி பண்ணுவது, ஸ்வாதந்த்ர்ய மருட்சிகொள்வது, இதெல்லாம் எதற்கு? பகவத்ஸங்கல்பப்படி நடக்கும் என்று, கிருஷ்ணா ராமா என்று கடமையை மட்டும் செய்தால் போதுமே. ஏதோ நம்முடைய சொந்தச் சக்திஸாமர்த்யத்தாலே வாழ்வை அமைத்துக்கொள்ள முடியும் போல் நினைக்கலாமோ? நம்முடைய இயலாமையைப் புரிந்து கொள்ளவேண்டாமோ?

இது வரை பார்த்த நாலு நீதிகளின் சுருக்கம் வருமாறு:

- ஈரிரு புலமை நொந்து கிட.
- ஈவாய் கலக்கினும் முன்பை விட.
- ஈண்டென துக்கக் கடலைக் கட.
- ஈச்வரன் விட்ட வழியில் நட.

## 385.ஈரிரு மறவினை எதிர்த்திடுக.

பாவங்களால் உண்டாகும் நாலையும் எதிர்க்கும் வழி பகவானிடம் பாவமன்னிப்பு கேட்பது என்பதாகும்.

> सन्ति हि पापानां बह्व्यः शक्तयः तत्वतिरोधायकत्वं, प्रत्यवायजनकत्वं, कम
> न्तिरानर्हतापादकत्वं, सजातीयपापारम्भरुचिजनकत्वं चेति।
>
> *—கத்யபாஷ்யம்.*

அபசாராந் ஸர்வாந் அஶேஷத: க்ஷமஸ்வ என்ற கத்யவாக்கியத்துக்கு உரையில் இந்த வரி.

> பாவங்களுக்குப் பல சக்திகள் உள்ளனவல்லவா? உண்மையை மறைத்துப் புலப்படாதபடி பண்ணுவது, தீங்கு விளைவிப்பது, வேறு கர்மங்களுக்கு யோக்யதையில்லாமல் பண்ணுவது, இதே போன்ற வேறொரு பாவத்தில் மூட்டுவது, என்று.

பாவத்தைப் பண்ணியவன் வாளாவிருப்பதற்கில்லை. அது பலனளிக்கும் வரை தள்ளிப்போடுவதற்குமில்லை. உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பான் என்கிற கணக்கிலே இப்போதே மன்னிப்பு கேட்க வேண்டும். ஏனென்றால் பாவத்தின் விளைவுகளில் நாலு வகை உண்டு. தத்துவம் மறைத்தல், தீங்கு விளைத்தல், தகுதியிழப்பித்தல், தப்பில் தூண்டுதல், என்று நாலு. இந்த நாலிலிருந்தும் தப்பிப்பதற்காக இறைவனிடம் மன்னிப்பு கேட்டாகவேண்டும்.

## 386.ஈசனில் அதை விட்டின்புறுக.

உலகத்தில் இன்பம் காண்பதை விட்டு, ஈசனில் இன்பம் காண்.

> यद्वा, सर्वावास्यत्वेन प्रकृतं निरतिशयभोग्यं वक्ष्यमाणोपायमुखेन
> भुञ्जीथा इति योज्यम्।
>
> *—ஈசாவாஸ்யோபநிஷத் பாஷ்யம்.*

தேந த்யக்தேந புஞ்ஜீதா: என்ற வாக்கியத்தின் உரையில் இரண்டாவது தாத்பர்யமாக இந்த வரி.

> அல்லது, எங்கும் வ்யாபித்ததாகப் ப்ரஸ்தாவிக்கப்பட்டவனை, மிகவுயர்ந்த நுகர்பொருள் ஆனவனை, இனிக்கூறப்போகும் வழி மூலம், அனுபவியுங்கள் என்று கூட்டலாம்.

ஈசனால் வ்யாபிக்கப்பட்ட இந்த உலகை நுகராமல் விட்டுவிட்டு, உலகை வ்யாபித்திருக்கும் ஈசனையே நுகருங்கள் என்று அறிவுரை. மற்றவற்றில் வைராக்யம் பெற்று, இறைவனிடம் காதல் கொள்க என்கிற நீதி.

## 387.ஈட்டம் செலவழி பிறர் செழிக்க.

ஈட்டம் என்றால் சேமிப்புச்சொத்து. அதை மற்றவர்களது வளர்ச்சிக்காகச் செலவழிப்பது நல்லது.

अचिन्तितोपस्थितजीवनानां आसेदुषामभ्यधिकां समृद्धिम्।
तोयाशयानां परिवाहजन्या स्वगुप्तिरन्योपचयप्रदाभूत्॥

*–யாதவாப்யுதயம்.*

ஜீவநம், ஆஶயம், ஸ்வம், என்ற பதங்களின் இரட்டைப் பொருள்களைக்கொண்டு நிரம்பிய நீர்நிலைக்கும் செல்வந்தனுக்கும் சேர்த்துக் கூறும் ச்லோகம். முதல் அர்த்தம்:

> நினைக்காத அளவுக்கு நீர் நிரம்பியவை. அதிக வளம் பெற்றவை. நீர்நிலைகள் (ஏரி முதலியவை.) தன்னை (ஏரியை)க் காத்துக்கொள்வதற்காக (கரை உடையாமல் இருப்பதற்காக மதகுகள் வழியே) வெள்ளத்தை வெளிவிடுவதால், மற்றவர்களுக்குச் செழிப்பைத் தருகிறது.

இனி இரண்டாவது அர்த்தம்.

> நினைத்துப் பாராமலே வாழ்வு பெற்றவர்கள். அதிகமான வளப்பம் அடைந்தவர்கள். நீர்வண்ணர்கள். (ஈர எண்ணம் கொண்டவர்கள்.) இவர்கள் பெருகிப்போக விடுவதால் சொத்தின் ரக்ஷணமே இதரர்களின் வளர்ச்சியைத் தருவதாகிறது.

இந்த இரண்டாவது அர்த்தத்தில் நமக்குத் தேவையான நீதி இருக்கிறது. சொத்தைத் தன்னிடமே காத்து வைத்துக்கொள்வது நல்லதா? பிறரது வளர்ச்சிக்காகச் செலவிடுவது நல்லதா? என்றால் இரண்டும் ஒருசேரப் பண்ணலாமே என்கிறார். பிறர் வளரச் செலவழித்து தனக்கு மேலும் ரக்ஷை பண்ணிக்கொள்ளலாமே. ஏரியிலிருந்து நீரை வெளியே பாய்ச்சுவது ஏரிக்கும் காப்புக்காவது போலே, தானம் பண்ணுவது, கொடுப்பவனுக்கும் ரக்ஷையாகி,

வாங்குபவனுக்கும் வளர்ச்சி தரும் என்று கருத்து. சொத்தின் ரக்ஷணத்தை விட, சொத்தால் ரக்ஷணம் நல்லது. சொத்தை ரக்ஷிப்பதை விடத் தன்னை ரக்ஷிப்பது நல்லது. ஸ்வகுப்தி என்கிற ஸமஸ்தபதத்தால் நாலையும் சொல்ல முடிந்ததால் இந்த நீதிகள் நமக்குக் கிடைக்கின்றன. தன்னைக் காப்பதால் பிறர் எப்படி வளரமுடியும் என்று முரண்பாட்டுத் தோற்றத்துடன் கூறிய நீதி இது.

## 388.ஈசாவாசிய உரை உகக்க.

ஈசாவாஸ்யபாஷ்யத்தைப் படித்து மகிழ்ச்சியடையுங்கள்.

> व्यक्ताव्यक्ते वाजिनां संहितान्ते व्याख्यामित्थं वाजिवक्त्रप्रसादात्।
> वैश्वामित्रो विश्वमित्रं व्यतानीत् विद्वच्छात्रप्रीतये वेङ्कटेशः॥
>
> *—ஈசாவாஸ்யபாஷ்யம்.*

நூலைத் தலைக்கட்டும் இரண்டு ச்லோகங்களில் முதலாவது இது.

> வாஜிஸம்ஹிதை முடிவுக்கு உரையெழுத வாஜிவக்த்ரர் அருள் புரிந்தார். (இவ்வருள் இல்லாதவர்க்கு) அது புரிந்தும் புரியாததாக இருக்கிறது. விச்வாமித்ர கோத்ரத்தவரும், உலகின் நண்பருமான வேங்கடேசர், புலமை படைத்த மாணாக்கர்களின் மகிழ்ச்சிக்காக இந்த உரையைப் பண்ணினார். இதைப்படித்து மாணவர்களும் வித்வான்களும் உகப்படையவேண்டும் என்பது நோக்கம்.

வகாரம் பத்து பதங்களில் வந்ததால் ப்ராஸாலங்காரம் பரிமளிக்கிறது. இந்த ச்லோகத்தாலும் வித்வான்களான வித்யார்த்திகளுக்கு மகிழ்ச்சி உண்டாகும். உரையைப் படிப்பீர்; உகப்பை அடைவீர்.

இது வரை பார்த்த நாலு நீதிகள் வருமாறு:

- ஈரிரு மறவினை எதிர்த்திடுக.
- ஈசனில் அதைவிட்டின்புறுக.
- ஈட்டம் செலவழி ஊர் செழிக்க.
- ஈசாவாசிய உரை உகக்க.

## 389.ஈனர் திமிரால் துள்ளுவராம்.

அஸத்து ஜனங்கள் திமிர் பிடித்துத் தலைகால் தெரியாமல் குதிப்பார்கள். நாம் அப்படிப்பண்ணக்கூடாது.

> अनल्पमदपित्तळैः अनुपरुद्धमानग्रहैः
> अजल्परणकर्कशैः अपरिदृष्टतर्कक्रमैः ।
> अतथ्यनियमस्थितैः अनतिवृत्तडम्भोद्यमैः
> अशिक्षितचमत्कृतैः अलमसद्भिरेतादृशैः॥
>
> *–ஸங்கல்பஸூர்யோதயம்.*

ஐந்தாமங்கத்தில் தர்ப்பன் இப்படி வர்ணிக்கிறான் அஸத்துக்களை.

> கொஞ்சநஞ்சமாயில்லாத அதிகத் திமிரால் பித்தேறியவர்கள். சுயகௌரவம் என்ற பிசாசின் பிடியிலிருந்து விடுபடாதவர்கள். வாக்குவாதத்திலும் வல்லமை இல்லாதவர்கள். தர்க்கத்தின் ஒழுங்குமுறையைக் கண்டறியாதவர்கள். பொய்யான நியமங்களைக் கடைப்பிடிப்பவர்கள். டம்பமுயற்சிகளைத் தாண்டிப் போகாதவர்கள். சாமர்த்தியப் பண்பைக் கற்றறியாதவர்கள். இப்படிப்பட்ட அஸத்துகள் போதும் போதும்.

அற்பனுக்கு ஆஸ்தி வந்தால் அர்த்தராத்ரியில் குடை பிடிப்பானாமே, அந்த டம்பச்செயலுக்கு, சரியான விளக்கம் கொடுக்க முடியுமோ அவனால்? கொழுப்பு தலைக்கேறி, பெருமைபீத்தல் பிடித்தாட்டும்போது, ஒழுங்கான வாதங்களை எதிர்பார்க்கலாமோ? அழகாக நடந்துகொள்வதைக் கூடக்கற்காத இவர்களை நாம் எப்படிச் சமாளிப்பது? போதுமடா சாமி என்று அங்கலாய்க்க மட்டுமே நம்மால் முடியும். அவ்வளவு கொடுமை அவர்களுடன் பழகுவது.

## 390.ஈர்ஷையால் வெறுப்பு ஏன் அறிவாலாம்.

வெறுப்படைவது பொறாமையால் ஏற்பட்டால் தப்பு; அறிவால் ஆலோசித்து ஏற்பட்டால் நல்லது.

> ஈர்ஷ்யாதிகளாலே நிர்வேதம் பிறக்குமாகில், அது மேலும் விபரீத வ்ருத்தங்களிலே கைவளரப்பண்ணும். அநாதிமாயாநித்ரையாலே

உறங்கினவனுக்கு உணர்த்தியாலே நிர்வேதம் பிறந்தால், இது டம்பதர்ப்பாதிகளான ஆஸுரஸ்வபாவங்களை அடியறுத்து, அமாநித்வாதிகளான ஆத்மகுணங்களோடே அவிநாபூதமாய், அபவர்க்க ஸாதநாதிகாரியாக்கும்.

*—பரமபதஸோபாநம்.*

நிர்வேதபர்வத்தில் இந்த அலசல். பொறாமை முதலானவற்றாலே வெறுப்பு உண்டானால், அது மேலும் தப்புக்காரியங்களில் தூண்டும். ஆனால் அதே வெறுப்பு, அநாதிகாலமாக மாயையாலே மோகித்திருந்தவனுக்கு விழிப்பு ஏற்பட்டதாலே உண்டாகுமானால், இந்த வெறுப்பு நல்லது. டம்பம், கொழுப்பு, முதலிய ஆஸுரகுணங்களை இந்த வெறுப்பு வேரறுக்கும். தற்பெருமைகொள்ளாமை முதலிய ஆத்மகுணங்களோடு பிரியாச் சேர்த்தி கொள்ளும். மோக்ஷத்துக்கான உபாயத்துக்கு இவனைத் தகுதி பெறுவிக்கும். வெறுப்பு தோன்றுவதற்குப் பல காரணங்களைக் காண்கிறோம். பொறாமையால் வெறுப்பு, தோல்வியால் வெறுப்பு, அவமானத்தால் வெறுப்பு, இவையெல்லாம் தீய விளைவுகளை ஏற்படுத்தும். பழிவாங்கள், கொதித்தெழுதல், வம்புக்குப் போதல், மருகிச்சாதல், குன்றிக்குமுறல், என்று எத்தனையோ தப்புகளில் செலுத்தும். ஆனால், தத்வஜ்ஞானத்தாலோ, கடவுட்பற்றாலோ, ஆசார்யகடாக்ஷத்தாலோ, பணத்திலும் பதவியிலும், உலகவாழ்விலும், வெறுப்பு ஏற்பட்டால் அது நல்லது. நம் திமிர் பறந்து போகும். அடக்கம் ஏற்படும். முக்தி மார்க்கத்துக்குத் தகுதி உண்டாகும். வெறுப்பில் ஒருவகை நல்லது; இன்னொருவகை கெட்டது.

## 391.ஈவிலர் உதவி மறந்தவராம்.

ஈவிரக்கம் இல்லாதவர்களே நன்றி மறப்பார்கள்.

कृतानभिज्ञेषु किमानृशंस्यम्

*—யாதவாப்யுதயம்.*

கோவர்த்தனமலையில் வருஷாவருஷம் நடத்தி வந்த பூஜை நின்றுபோனபோது இந்திரனுக்குக் கோபம் வந்தது. இதைச் சொல்லும்போது வேற்றுப்பொருள் வைப்பணியாகக் கூறும் நீதி இது.

செய்ந்நன்றி மறந்தவருக்கு ஈவிரக்கம் ஏது?

இத்தனை ஆண்டுக:ளாக நமக்குப் பூஜை செய்தவர்களை, இவ்வாண்டு செய்யாததற்காக நாம் நலியலாமா? என்று கூட எண்ணிப்பாராமல் இந்திரன்

செய்ந்நன்றி கொன்றவனாக இருந்தான். அதனால் துன்புறுத்தத் தொடங்கினான். உதவியை மறப்பவர்களிடம், கருணையை எதிர்பார்க்கலாமா?

## 392.ஈஷணை துறந்தவர் யதிவரராம்.

ஸந்யாஸிக்கு முக்கியத் தகுதி, ஆசைகளைத் துறப்பது என்பதாம்.

> त्यक्तेषणो ह्यनृणस्तद्विदित्वा मौनी वसन्नाश्रमे यत्रतत्र।
> अथाश्रमं चरमं सम्प्रविश्य स च द्वितीयममृतं सम्प्रयाति॥
>
> *–பரதத்ூஷணி.*

கடைசி (அகப்படுவதில் கடைசி) வாதத்தில் இந்த ச்லோகம் ப்ரமாணமாகக் காட்டப்படுகிறது. ஆசையைத் துறந்தவனாகி, கடனில்லாதவனாகி, ப்ரஹ்மஜ்ஞானம் பெற்றவனாகி, மௌனியாகி, ஏதேனும் ஒரு ஆஶ்ரமதர்மப்படி வசிப்பவன், கடைசி ஆச்ரமமான துறவறத்தில் நுழைந்து இறவாநிலை பெறுகிறான். இதில் முதல் நிபந்தனையே ஆசைகளைத் துறத்தல் என்பது. இந்தத் தகுதி இல்லாதவன் துறவியாகக்கூடாது.

இது வரை பார்த்த நாலு அறிவுரைகளின் தலைப்புகள் வருமாறு:

- ஈனர் திமிரால் துள்ளுவராம்.
- ஈர்ஷையால் வெறுப்பு ஏன் அறிவாலாம்.
- ஈவிலர் உதவி மறந்தவராம்.
- ஈஷணை துறந்தவர் யதிவரராம்.

## 393.ஈரப்பிழையிலும் ஆண்டாள் சார்.

குற்றம் சொட்டச்சொட்டப் புரிந்திருந்தாலும் ஆண்டாளிடம் முறையிட அஞ்சவேண்டாம்.

> आर्द्रापराधिनि जनेप्यभिरक्षणार्थम्

रङ्गेश्वरस्य रमया विनिवेद्यमाने।
पार्श्वे परत्र भवती यदि तत्र न स्यात्
प्रायेण देवि वदनं परिवर्तितं स्यात्॥
கோதாஸ்துதி.

வேடிக்கையான உத்ப்ரேக்ஷை மூலம் ஆண்டாளம்மாவின் வாத்ஸல்யத்தை நமக்குப் புரியவைக்கிறார்.

> நாம் ஈரக்குற்றம் புரிபவர்கள். நமக்கும் முகம் கொடுக்காமல் பிராட்டியின் சிபாரிசுக்கும் முகம் கொடுக்காமல், நாம் எதிரில் நின்றாலே முகத்தை வேறுபக்கமாக (தாயார் இல்லாத பக்கமாக) திருப்பிக்கொள்ளத் தோன்றும் பெருமாளுக்கு. ஆண்டாள் நீ மட்டும் அங்கு இல்லாமலிருந்தால் பகவானின் முகம் கோணியேயல்லவா இருக்கும்?

ஈரக்குற்றம் என்றால், சமீபத்தில் புரிந்த பிழை, இன்னும் சிறிது கூடக் காய்ந்து போகாமல், பச்சையாகவே இருக்கும் பிழை. ஆகையால் நேரடியாகத் திருமாலிடம் முறையிடுவதற்கு அஞ்சி, பிராட்டியின் சிபாரிசை நாடுபவர்கள் நாம். பெருமாள் முகம் கொடுக்காமல் திருப்பிக்கொள்வார். ஆனால் அப்படித் திருப்பிக்கொள்ளாமல், நேரடிமுகத்துடனே ஸேவை சாதிப்பதற்குக் காரணம் எனக்குத் தோன்றுவது என்னவென்றால், அந்த வேறொரு பக்கத்தில் ஆண்டாள் இருப்பது தான். அவளுடைய சிபாரிசைப் புறக்கணிக்கவே முடியாதே. நமக்கு இரங்கியே ஆகவேண்டிய நிர்ப்பந்தத்தைப் பண்ணுவாளே ஆண்டாளம்மா. இவ்வளவு வாத்ஸல்யத்துடன் பரிந்துரைக்கும் ஆண்டாளிடம் ஆர்த்ரமான அபராதம் புரிந்தவர்களும் அஞ்சாமல் அணுகலாமே.

## 394.ஈன்றவள் போன்றவள் ஆண்டாள் பார்.

பெற்ற தாய் போன்றவள் ஆண்டாள்; நாம் அவளது குழந்தை போன்றவர்கள். அவளிடம் குற்றம் புரிந்தாலும் ரக்ஷை கிடைக்கும்.

जातापराधमपि मामनुकम्प्य गोदे

गोप्त्री यदि त्वमसि युक्तमिदं भवत्याः।
वात्सल्यनिर्भरतया जननी कुमारं
स्तन्येन वर्धयति दष्टपयोधरापि॥
கோதாஸ்துதி.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தை கடித்துவிட்டாலும் தாய் தொடர்ந்து அக்குழந்தைக்குப் பாலூட்டி வளர்க்கிறாள். வாத்ஸல்யம் நிரம்பியிருப்பது அதற்குக்காரணம். அது போலத்தான் ஆண்டாளும். அவளிடமே அபசாரப்பட்டவனைக்கூட அருள்கூர்ந்து ரக்ஷிக்கிறவள். கோதாதேவியே! உமக்கு இது யுக்தமே. எனக்கு அம்மாவாகி, வாத்ஸல்யத்தை என் மீது பொழிகிற நீ, நான் உன்னிடம் அபசாரப்பட்டாலும், என்னைப் புறக்கணிக்காமல், தயைகூர்ந்து ரக்ஷிக்கிறவள் நீ. அம்மா போல நீ. குழந்தை போல நான். பால் பருகும்போதே பால் சுரக்குமிடத்தையே கடிக்கிற அசட்டுக்காரியம் போலே என் குற்றம். அதைக்கணிசிக்காமல் தொடர்ந்து பாலூட்டும் அன்னையின் செயல் போலே உன் ரக்ஷணவ்யாபாரம். உவமை பொருத்தமாக இருக்கிறது என்பதை யுக்தம் என்ற பதம் தெரிவிக்கிறது. ஆண்டாளின் தாயன்பைப் புரிந்துகொண்டு நாம் பயனடையவேண்டும்.

## 395.ஈசனுள் ஹரியை அனுபவி பார்.

பிரம்மாவுக்கும் சிவனுக்கும் அந்தர்யாமியாக ஹரியை அனுபவி என்று நம்மாழ்வார் காட்டுகிறார். நாம் இதைப் பார்த்துப் பின்பற்றவேண்டும்.

ब्रह्मेशान्तःप्रवेशात् जलनिधिसुतया सन्निरोद्धव्यभावात् ...
मुक्तेर्दातानुभाव्यो हरिरिति शठजिद्दर्शयन् मुक्तिमाप ।।
த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

முனியே நான்முகனே முக்கண்ணப்பா! என்ற பதிகத்தின் சுருக்கத்தைக் கூறுகிறார் இந்த ச்லோகத்தில்.

> ப்ரம்மா, சிவன், முதலியவர்களுள் புகுந்தபடியாலும், கடல்மகள் ஆணையைக் கொண்டிருப்பதாலும், ... மோக்ஷத்தை அளிக்கிற ஹரி அனுபவிக்கத்தக்கவன் என்று காண்பித்து, சடகோபமுனிவர் முக்தி அடைந்தார்.

முத்தியைக் கொடுப்பவனும் ஹரியே, முக்திநிலையில் அனுபவிக்கப் படுபவனும் ஹரியே என்று உபாயத்துக்கும் உபேயத்துக்கும் வாசியின்மையைக் காண்பித்தார் நம்மாழ்வார். இப்படி உபாயமும் பலமுமாய் இருப்பவன் ப்ரஹ்மருத்ராதிகளுக்கு அந்தர்யாமியாய் இருப்பவன் என்பதையும் நமக்கு அறிவுறுத்தினார். இப்படித்தன் அவதாரத்து உத்தேசம் நிறைவேறியபின் முக்தியடைந்தார். அவர் காண்பித்ததைக் கவனித்துப் பார்த்து, நாம் பயன்பெறவேண்டும்.

## 396.ஈற்றா போலே குரு ஆவார்.

கறவை மாடு போன்றவர் ஆசார்யர் என்பதைத் தெரிந்துகொள்ளு.

| |
|---|
| அன்றீன்ற கன்றுக்கிரங்கிச் சுரக்கும் தேனுவைப்போலே இத்தேசிகர் – *ரஹஸ்யத்ரயஸாரம்.* |

உபோத்காதாதிகாரத்திலேயே விளக்கிய திருஷ்டாந்தம். பசுமாடு கன்றுக்குட்டியைப் பிரஸவித்த நாளில் அதற்கு வாத்ஸல்யத்தால் பால் சுரக்கும். அத்தகைய பசுமாட்டை ஒத்தவர்கள் இந்த ஆசார்யர்கள். கன்று போலே நாம். பசுமாடு போலே ஆசார்யர்கள். பால் போலே அவர்கள் நமக்குப் பண்ணும் உபதேசங்கள். நாம் கன்று போலாவது எப்படியென்றால், பாலுக்காகத் தாய்மாட்டை எதிர்பார்த்து ஏங்கும் கன்று போலே, மிகுந்த ஆவலுடன் நல்வார்த்தைகளுக்காக ஆசார்யரை நாடுவதாலும், தானாகத் தன் உணவைத் தேடிக்கொள்ள முடியாத கன்று போலே, ஆசார்யரை அபேக்ஷித்திருப்பதாலும், ஆகும். ஆசார்யர்கள் கறவைமாடு போலாவது எப்படியென்றால், அது கன்றுக்குட்டியிடம் காட்டுமளவுக்கு நம்மிடம் அவர்கள் பரிவு காட்டுவதாலும், அது கன்றைப் பால் கொடுத்துப் போஷிப்பது போலே நம்மை ஆத்யாத்மிகத்துறையில் போஷிப்பதாலும், ஆகும். உபதேசங்கள் பால் போலாவது எப்படியென்றால், அவை மதுரமாயும் புஷ்டிகரமாயும் ச்ரேயஸ்கரமாயும் இருப்பதாலாகும். இதில் நமக்குக் கிடைக்கும் இரண்டு நீதிகள். உலகத்தாரிடம் அருள் சுரந்தாலன்றி, ஆசார்யனாகும் தகுதி கிடைக்காது. நாம் ஆசார்ய வாத்ஸல்யத்தைப் புரிந்துகொண்டு, ஸத்பாத்ரமாக இருக்கவேண்டும்.

கடந்த நாலு அறிவுரைகளையும் ஒருசேரப்பார்ப்போம்:

- ஈரப்பிழையிலும் ஆண்டாள் சார்.
- ஈன்றவள் போன்றவள் ஆண்டாள் பார்.
- ஈசனுள் ஹரியை அனுபவி பார்.

- ஈற்றா போலே குரு ஆவார்.

## 397.ஈந்திடியன்றதை குருவுக்கு.

யதாமக்தி குருதக்ஷிணை கொடுக்கவேண்டும்.

सर्वस्वं वा तदर्धं वा तर्धार्धार्धमेव वा ।
गुरवे दक्षिणां दद्यात् यथाशक्त्यपि वा पुनः ॥
என்றும் இப்புடைகளில் சொல்லுகிறவையும்.

*–ரஹஸ்யத்ரயஸாரம்*

சிஷ்யக்ருத்யாதிகாரத்தில் கூறிய அறிவுரைகளில் இது இரண்டாவது.

> தன் முழுச்சொத்தையோ அதில் பாதியையோ அல்லது அதில் அரைக்கால் பங்கையோ குருவுக்குத் தக்ஷிணை கொடுக்க வேண்டும். அல்லது முடிந்த வரை, சக்திக்குட்பட்ட வரையில் கொடுக்கலாம். என்றெல்லாம் ப்ரமாண ச்லோகங்கள் கூறுவது ஆசார்யனிடம் தான் பெற்ற உதவிக்குக் கைம்மாறு கூறியதாகாது.

குருவுக்குத் தக்ஷிணை கொடுத்தாகவேண்டும். எவ்வளவு கொடுக்கலாம்? தன் முழுச்சொத்தையும் குருவுக்குக் கொடுப்பது உத்தமம். அல்லது ஆஸ்தியின் ஒரு பகுதியைத் தரலாம். அல்லது தன்னால் எவ்வளவு தரமுடியுமோ அதைத் தரலாம். சக்திமீறித் தர வேண்டிய நிர்ப்பந்தமும் இல்லை; தர முடிந்ததையும் தராமலே நன்றி மறப்பதும் சரியில்லை. இவ்வளவு நாட்கள் குருகுலவாஸத்தில் கற்ற கல்வியின் சீர்மையை உணர்ந்து யதாசக்தி குருதக்ஷிணை கொடுப்பது நல்லது.

## 398.ஈடு குறைந்தால் இணை எதற்கு?

ஒப்பிட்டுப் பார்க்கும்போது தரக்குறைவு தெரிந்தவொன்றை உயர்தரத்தொன்றோடு இணையாக்கக்கூடாது.

गतिर्व्योम्ना किं तत्  गरुडमभिटङ्केत चटकः
पिबत्वम्भः क्षारं न खलु कलशीसूनुरलसः ।

कलः कण्ठे नादः क इव मशकः किन्नरपतिः

कथञ्चित्साधर्म्यं क्षिपति न हि वैधर्म्यनियमम्॥

*—ஸுபாஷிதநீவி.*

த்ருப்தபத்ததியில் உள்ள அறிவுரை.

ஊர்க்குருவி வானில் பறந்தாலும் கருடனோடு போட்டியிட முடியுமா? அஜீர்ணக்காரன் உப்புநீர் குடிக்கட்டும். அவன் (கடலைக் குடித்த) அகத்தியராகி விடுவானா? தொண்டைக்குரல் இனிதானாலும், கொசு கிந்நரபதி ஆகுமா? ஏதோவொரு சிறிய ஒற்றுமையானது, நிலைத்திருக்கும் வேறுபாட்டை ஒதுக்காதல்லவா?

சின்னச்சின்ன சாதனைகள் புரிந்தவுடனே தன்னை இந்திரன் என்றும் சந்திரன் என்றும் கொக்கரித்துக் கொள்ளுபவர்களுக்கு இந்த அறிவுரை. உங்கள் வரம்புகளை உணர்ந்துகொள்ளுங்கள். உயரப்பறக்கும் குருவியெல்லாம் கருடனாவதில்லை. உப்பு நீர் குடிக்கும் நோயாளியெல்லாம் அகத்தியராவதில்லை. இனிக்கப்பாடும் கொசுவெல்லாம் கின்னரராஜனாவதில்லை. கொஞ்சம் சாதித்துவிட்ட மாத்திரத்தால் கும்மாளம் அடிக்கவேண்டாம். அரும்பெரும் செயல் புரிந்தவர்களை அணுகவும் முடியாத தூரம் இருப்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

## 399.ஈட்டியதைக்கொடு பிறருக்கு.

தான் சேமித்ததைப் பிறருக்குத் தானம் பண்ணு.

अनिर्घातं धाराधरममथनीयं निधिमपाम्

अकाठिन्यं चिन्तामणिमजडभूतं सुरतरुम्।

अभित्वोपादाय प्रभुरपशुवृत्तिं च सुरभिम्।

परार्थैकस्वार्थान् अकृत पुरुषानादिपुरुषः

*—ஸுபாஷிதநீவி.*

வள்ளல்களைப் பாராட்டும் பத்ததியில் கடைசி ச்லோகம். உலகில் சிலர் தம் செல்வத்தைத் தமக்கே வைத்துக்கொள்வர். வேறு சிலர் அதைத் தமக்கும் பிறர்க்குமாய் வைத்துக்கொள்வர். இன்னும் உயர்ந்த சிலர் பிறர்க்காகவே தம்

செல்வத்தைச் செலவழிப்பர். இந்த உத்தமபுருஷர்களைப் பாராட்டுகிறார் இந்த ச்லோகத்தில்.

> இடியில்லாத மேகம், கலக்கவேண்டாத கடல், கடினத்தன்மை நீங்கிய சிந்தாமணி, ஜடத்தன்மை நீங்கிய கற்பகமரம், விலங்குத்தன்மையில்லாத காமதேனு, இவற்றையெல்லாம் முழுதாக எடுத்துச் சேர்த்துப் பகவான் ஸ்ருஷ்டித்தான், பிறர்க்காகவே தன் செல்வத்தையெல்லாம் கொண்டிருப்பவர்களை.

கொடையாளிகளாகப் பிரசித்தமானவை, மேகம், சமுத்திரம், சிந்தாமணி, கற்பகமரம், காமதேனுப்பசு, என்ற ஐந்தும். இவற்றில் முறையே இடிமுழக்கம், கடையப்படுகை, கடினத்தன்மை, அசைதன்யம், விலங்குத்தன்மை, என்ற குறைகள் உள்ளன. இந்த ஐந்திலும் உள்ள குறைகளை நீக்கி விட்டு அவற்றை முழுதாகக் கலந்து படைத்தான் பகவான் இந்தப் பெரும் வள்ளல்களை. இவர்கள் தம் ஈட்டம் முழுவதையும் பிறர்க்காகவே கொண்டிருக்கிறார்களே. முழங்காதவர்களாய், கலங்காதவர்களாய், மி ருதுவானவர்களாய், அறிவுள்ளவர்களாய், பிராணிகளின் மேம்பட்டவர்களாய், இருக்கும் இந்தக் கொடையாளிகள் விசேஷப்படைப்பில் உண்டானவர்கள்.

## 400.ஈர்வரதுஷ்டியை உண்டாக்கு.

பகவானை மகிழ்விப்பதற்காகப் பாகவதகைங்கர்யம் முதலியவற்றைப் பண்ணு.

> शुभे कृते तुष्यति दुष्कृते तु न तुष्यतेसौ परमश्शरीरी ।
>
> என்கிறபடியே ஈச்வரதுஷ்டியை உண்டாக்கி
> அவனுடைய ஔதார்யாதிகுணங்கள் குமரிராதபடி
>
> *–ரஹஸ்யத்ரயஸாரம்*

மஹாபாரதச்லோகமொன்றைப் ப்ரமாணமாகக்காட்டி இந்த உபதேசத்தைப் பண்ணுகிறார்.

> “நல்லதைப் பண்ணினால் பரமசரீரியான பகவான் மகிழ்கிறான். தீயதைப்பண்ணினால் மகிழ்வதில்லை’’ என்று கூறியுள்ளபடி நாம் பகவத்ப்ரீதியை உண்டாக்கி, அவனுடைய வண்மை முதலிய பண்புகள் வீணாகாதபடி நடந்துகொள்ளவேண்டும்.

அவனுக்கு எது மகிழ்ச்சி தருமோ அதைப் பண்ணவேண்டும். அது எதுவென்று ஆராய்ந்தால், பாகவதகைங்கர்யம் என்று தேறுகிறது. என்ற பீடிகையுடன் புருஷார்த்தகாஷ்டாதிகாரத்தைத் தொடங்குகிறார். ஈச்வரதுஷ்டி எதனால் ஏற்படுமோ அதை நாம் பண்ணவேண்டும் என்பது அறிவுரை.

இதுகாறும் கூறிய நான்கு நீதிகளின் சுருக்கம் வருமாறு:

- ஈந்திடுயன்றதை குருவுக்கு.
- ஈடு குறைந்தால் இணை எதற்கு?
- ஈட்டியதைக்கொடு பிறருக்கு.
- ஈஶ்வரதுஷ்டியை உண்டாக்கு.

ஆரணதேசிகனின் ஆயிரம் அறிவுரைகளில் நாலாவது நூறு முற்றிற்று.

**நாலாவது நூறு அறிவுரைகளின் சுருக்கம்.**

**301.**மரணக்காலத்தில் இறைவனை நினை.– தாத்பர்யசந்த்ரிகா.
**302.**அதற்காக எப்போதும் பகவத் ஸ்மரணம் பண்ணு.– தாத்பர்யசந்த்ரிகா.
**303.**சம்பாதித்த பணத்தைத் தகுந்தவர்களுக்குக் கொடு. – யாதவாப்யுதயம்.
**304.**பகவானிடம் பாவமன்னிப்பு கேள். – கத்யபாஷ்யம்.
**305.**அந்திமஸ்ம்ருதிக்காக இப்போதே பகவானைப் பிரார்த்திக்கலாம். – ப்ரதாநசதகம்.
**306.**த்வயமந்த்ரத்தை ஸதா சொல்லிக்கொண்டிரு. – கத்யபாஷ்யம்.
**307.**இறைவனைத்தொழு, ஸ்மரி, கீர்த்தி.– அபீதிஸ்தவம்.
**308.**பத்துமுக மனத்தை வெற்றிகொள். – முநிவாஹநபோகம்.
**309.**ஈனத்தொழில்களைப் பண்ணக்கூடாது. – ஸுபாஷிதநீவீ.
**310.**ஈயோ புழுவோ விழுந்த சாதத்தைச் சாப்பிடாதே. – ஆஹாரநியமம்.
**311.**தன்னை இறையாண்மை கொண்டவனாக நினைக்காதே. – உபகரஸங்க்ரஹம்.
**312.**வெற்றிலை போட்டுக்கொள்ளும்போது நடு ஈர்க்கை எறிந்துவிடு. – ஆஹாரநியமம்.
**313.**அந்திமஸ்ம்ருதிக்கு முயற்சி (ப்ரபந்நனுக்குத்) தேவையில்லை – ரஹஸ்யசிகாமணி.
**314.**கொடுநெஞ்சர்களிடம் சென்று கதறுவதில் பயனில்லை. – ஸ்தோத்ரபாஷ்யம்.
**315.**கடைசித்தடங்கலையும் தாண்டாவிட்டால் பயனில்லை. – ரஹஸ்யத்ரயஸாரம்.
**316.**பொது மக்களைக் கவர்வதில் மகிழவேண்டாம். – ரஹஸ்யத்ரயஸாரம்.
**317.**நீசர்களால் ஒதுக்கப்பட்டால் வருந்தாதே. – ஸுபாஷிதநீவீ.
**318.**இழிந்தவர்களின் நட்பு தீமை பயக்கும். – ரஹஸ்யரத்நாவளி ஹ்ருதயம்.
**319.**நீசர்களுக்குச் சாத்திரநுட்பங்களை உபதேசிக்காதே. ரஹஸ்யத்ரயஸாரம். **320.**நீசர்கள் கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொள்ளாதே. – ரஹஸ்யத்ரயஸாரம்.
**321.**கருமிகளுக்கு அர்த்தமே அனர்த்தமாகும். – ஸுபாஷிதநீவீ.
**322.**கேட்டதுக்கும் மேலாகக் கொடு. – யாதவாப்யுதயம்.
**323.** தானம் பண்ணும் பொருள் எனதன்று என்னுக. – ரஹஸ்யத்ரயஸாரம்.

**324.**தானம் முதலியவற்றால் கடவுளை அடையமுடியாது. பக்திதேவை.– ஸங்கல்ப ஸூர்யோதயம்.
**325.** ஈரக்காலுடன் தூங்காதே. – ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா.
**326.**பண்பற்றவர்களின் உபதேசங்களை ஏற்கக்கூடாது. – யாதவாப்யுதயம்.
**327.**ஈருள்ளியினைத் தின்னாதே. – ரஹஸ்யத்ரயஸாரம்.
**328.**ஸர்வேச்வரனிடமும் குறைகாணும் அளவுக்கு அஸூயை வேண்டாம். ஸங்கல்பஸூர்யோதயம்.
**329.**இறுதிநாள் வரை குற்றமற்ற நல்வாழ்க்கை நடத்து. – ரஹஸ்யத்ரயஸாரம்.
**330.**இயற்கைத்தொல்லைகள் இல்லாத இடத்தில் வாழ். – யாதவாப்யுதயம்.
**331.**நாலு புருஷார்த்தங்களையும் இகழ்ந்து இறைவனுக்காய் வாழ். – பரமார்த்தஸ்துதி.
**332.**நான்முகன் பதவியையும் விரும்பாதே. – வரதராஜபஞ்சாசத்.
**333.**பன்னிரண்டு திருமண் இட்டுக்கொள். – ஸச்சரித்ரரக்ஷா.
**334.**நாத்திகர் வழியில் போகாதே. – தத்வடீகா.
**335.**உடலின் நாலு த்வாரங்களைக் காவலில் வை. – ரஹஸ்யரத்நாவளிஹ்ருதயம்.
**336.**எது இழுக்கிறதோ அதை வேரறு. – யாதவாப்யுதயம்.
**337.**மனதைப் பகவானிடம் ஈடுபடுத்து. – தாத்பர்யசந்த்ரிகா.
**338.**கீர்த்திப்பதால் இம்மையிலும் மறுமையிலும் பலன் பெறு. – ஸ்தோத்ரபாஷ்யம்.
**339.**தன்னைப் புகலடைந்தவனையே கொல்பவன் மிகவும் ஈனன். – ஸ்தோத்ரபாஷ்யம்.
**340.**பெண்மை நிறையை அவனருளால் காத்துக்கொள். – பரமபதஸோபாநம்.
**341.**நல்லோரை மணிகளுக்குச் சமமாக மதி. – ஸுபாஷிதநீவீ.
**342.**ஆசை, பகை, திமிர், என்ற மூன்று பேய்களை விரட்டு. – ரஹஸ்யத்ரயஸாரம்.
**343.**உடைமாற்றல் போல உடல்மாற்ற மரணத்துக்குக் கவலாதே. – தாத்பர்யசந்த்ரிகா.
**344.**நரகம் போல சொர்க்கமும் விரும்பத்தகாததே. – ஸங்கல்பஸூர்யோதயம்.
**345.**தந்தையை விடத் தாயை உயர்வாய்க்கருது. – ஸ்தோத்ரபாஷ்யம்.
**346.**வேதங்களில் உபநிஷத்துப் பகுதியை உயர்வாய்க்கருது. – ப்ரதாநசதகம்.
**347.**வேதங்களைக் காட்டிலும் மஹாபாரதத்தை உயர்வாய்க்கருது. – ப்ரதாநசதகம்.
**348.**கடவுளை விட ஆசார்யனை உயர்வாய்க்கருது. – ஸ்தோத்ரபாஷ்யம்.
**349.**தேனீ போல பல இடங்களிலிருந்து ஸாரத்தைக் கிரகி. – ரஹஸ்யத்ரயஸாரம்.
**350.**அஷ்டாக்ஷரத்தால் புத்தியில் எட்டு ஆற்றல்கள் கிட்டும். – ரஹஸ்யத்ரயஸாரம்.
**351.**அஷ்டாக்ஷரம் தரும் எட்டு பேறுகளாலே ஔிர்க. – ரஹஸ்யத்ரயஸாரம்.
**352.**தானம் பண்ணும்போது அதிகப் பொறுமையும் தைரியமும் தேவை.– ஸுபாஷிதநீவீ.
**353.**ஸந்யாஸிகள் கூடப் பணத்தாசை கொள்வது கேவலம். – ஸங்கல்பஸூர்யோதயம்.
**354.**வயசான பிறகாவது ஆசைகளைக் குறைத்துக்கொள்ளு. – ஸங்கல்பஸூர்யோதயம்.
**355.**பணத்தைப் பாதுகாக்கப் படாத பாடு படுவானேன்? – ஸங்கல்பஸூர்யோதயம்.
**356.**இறைவனருளை அவலம்பிக்காமல் வேறு கதியை நாடாதே. – தயாசதகம்.
**357.**உன் உடலை இறைப்பணிக்கே பயன்படுத்து. – ப்ரதாநசதகம்.
**358.**பரமனின் பதினாறு ஆயுதங்களை ஸ்தோத்ரம் பண்ணு. – ஷோடசாயுதஸ்தோத்ரம்.
**359.**வாழ்வின் கடைசி நாளில் பண்ணுவது போல என்றும் பண்ணு. – ஸங்கல்பஸூர்யோதயம்.
**360.** பண்ணுவதையெல்லாம் பகவானுக்கு அர்ப்பணித்துவிடு. – தாத்பர்யசந்த்ரிகா.
**361.**இறைவனை நம்பால் இழுக்கச் சரணாகதி பண்ணு. – ரஹஸ்யத்ரயஸாரம்.
**362.**பற்குச்சி இன்றேல், பன்னிரண்டு தடவை வாயைக் கொப்புளி. – ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா.
**363.**தகுதிக்கு மீறி வளர விரும்பாதே. – ஸுபாஷிதநீவீ.
**364.**கொஞ்சம் பிராட்டியின் திருவடியை வணங்கு. – ஸ்ரீஸ்துதி.
**365.**தானம் பண்ணும்போது இனிக்கப்பேசு. – ஸுபாஷிதநீவீ.

366.கொடுக்கும் கைக்குக் குறை கிடையாது. – ஸுபாஷிதநீவீ.
367.ஆழ்வாராசார்ய ஸூக்திகளுக்கு ஈடே கிடையாது. – ப்ரதாநசதகம்.
368.இன்பதுன்பங்களை நுகர்வது குறிக்கோளுக்குத் தடையன்று. – ரஹஸ்யரத்நாவளிஹ்ருதயம்.
369.பக்திக்கண்ணீர் பெருக்குபவரைப் பார்த்தாலே புண்ணியம். – ப்ரதாநசதகம்.
370.ஈமச்சடங்கில் பங்கு பெற்றால் தீட்டு கார்க்கவேண்டும். – ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா.
371.போட்டியும் புரட்டும் நம் ஆசார்யர்களுக்கு வெகுதூரம். – ரஹஸ்யத்ரயஸாரம்.
372.கடவுளின் உடலாய் உலகைக்காண். – ரஹஸ்யத்ரயஸாரம்.
373.தாய்மாட்டின் பின் கன்று போவது போல இறைவன் பின் போ. – பரமபதஸோபாநம்.
374.தன் தோஷங்களைச்சொல்லி இறையன்பு பண்ணு. – த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவளி.
375. வன்சொல். பொய், கோள், ஒவ்வாச்சொல், கூடாது. – ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா.
376.கஷ்டகாலத்தில் பகவானைக் கதறிக்கூப்பிடு. – ஸ்தோத்ரபாஷ்யம்.
377.ஹரி என்றிரண்டே எழுத்துகளை உச்சரித்து மோக்ஷமடை. – பரமபதஸோபாநம்.
378.ஈசாண்டான் காட்டிய வழியில் இன்பமடை. – ரஹஸ்யத்ரயஸாரம்.
379.இறைவனின் நட்பால் ஸத்குரு கிடைப்பார். – ரஹஸ்யத்ரயஸாரம்.
380.பதினாலு தகுதிகள் உள்ள குருவைத் தேர்ந்தெடு. –ந்யாஸவிம்ஶதி.
381.நாலுவிதமான பாண்டித்யத்தாலும் நிர்வேதப்படு. – ஸங்கல்பஸூர்யோதயம்.
382.தானத்தைக் கலைப்பவர் வெள்க மேலும் தானம் செய்.
383.துக்கக்கடலை விரைவாகத்தாண்டு. – ரஹஸ்யத்ரயஸாரம்.
384.ஈசன் விட்டவழியில் நட; அஸ்வாதந்த்ர்யத்தைப் புரிந்துகொள்.– ஸ்தோத்ர பாஷ்யம்.
385.பாவங்களின் நாலு சக்திகளிலிருந்து தப்ப மன்னிப்பு கேள். – கத்யபாஷ்யம்.
386.உலகில் இன்பம் காண்பதை விட்டு, ஈசனில் இன்பம் காண்.–ஈசாவாஸ்ய பாஷ்யம்.
387.உன் சேமிப்பைப் பிறரது வளர்ச்சிக்காகச் செலவழி. – யாதவாப்யுதயம்.
388.ஈசாவாஸ்யபாஷ்யத்தைப் படித்து மகிழுங்கள். – ஈசாவாஸ்யபாஷ்யம்.
389.திமிரால் துள்ளுபவரைத் தவிர்.– ஸங்கல்பஸூர்யோதயம்.
390.பொறாமையாலன்றி, அறிந்தாலோசித்து, வெறுப்படை. – பரமபதஸோபாநம்.
391.ஈவிரக்கம் இல்லாதவர்களே நன்றி மறப்பார்கள். – யாதவாப்யுதயம்.
392.ஸந்யாஸிக்கான தகுதிகளில் முதலாவது ஆசையின்மை. – சததூஷணி.
393.ஈரப்பிழை புரிந்தாலும் ஆண்டாள் உதவியை நாடு.– கோதாஸ்துதி.
394.அன்னை போன்ற ஆண்டாள் காப்பாள் என்றுறுதி கொள். – கோதாஸ்துதி.
395.அயனுக்கும் அரனுக்கும் அந்தர்யாமியாக அரியை அனுபவி.–த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.
396.கறவை மாடு போன்ற ஆசார்யரைப் பயன்படுத்திக்கொள்ளு. – ரஹஸ்யத்ரயஸாரம்.
397.யதாஶக்தி குருதக்ஷிணை கொடு.– ரஹஸ்யத்ரயஸாரம்.
398.மட்டரகத்தையும் உயர்ரகத்தையும் பாகுபடுத்து. – ஸுபாஷிதநீவீ.
399.பிறருக்காகவே தன் பொருளைப்பண்ணுபவர் மஹான். – ஸுபாஷிதநீவீ.
400.பகவத்ப்ரீதிகரமானதைப் பண்ணு. – ரஹஸ்யத்ரயஸாரம்.

**நாலாவது நூறு முற்றிற்று.**